அச்சுவேலி ச. குமாரசுவாமிக்குருக்கள் வெளியீடு.

# சைவப்பிரகாசிகை

## ஐந்தாம் புத்தகம்.

1953.

உ

சிவமயம்.

# சைவப்பிரகாசிகை

## ஐந்தாம் புத்தகம்.

அச்சுவேலி
சரசுவதிவித்தியாசாலை மானேசர்
**சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்**
அவர்களால் எழுதப்பெற்று,

மேற்படி குருக்களவர்களின் புத்திரர்
சிவஸ்ரீ. வைத்தியேசுவரக்குருக்களால்

பருத்தித்துறை
**கலாநிதியந்திரசாலையிற்**
பதிப்பிக்கப்பெற்றது.


ஏழாம் பதிப்பு.

நந்தன௵ தைமீ

1953.

*Rights Reserved.*

விலை ரூபா 1-00.



சிவஸ்ரீ. ச. தமாரசுவாமிக்தருக்கள்
அச்சுவேலி.

# பொருளடக்கம்.


| | | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை | |
| ௧. | விநாயகக்கடவுள் I | ௧ |
| ௨. | விநாயகக்கடவுள் II ... | ௨ |
| ௩. | நம்பியாண்டார் நம்பி ... | ௪ |
| ௪. | சிவபெருமான் ... | ௭ |
| ௫. | விட்டுணு பிரமர் அடிமுடி தேடியது ... | ௧௦ |
| ௬. | உமாதேவியார் I ... | ௧௩ |
| ௭. | உமாதேவியார் II ... | ௧௫ |
| ௮. | சுப்பிரமணியக்கடவுள் ... | ௧௭ |
| ௯. | சிவதூஷணம் ... | ௨௦ |
| ௧௦. | வீரபத்திரக்கடவுள் சரபவடிவங்கொண்டது ... | ௨௨ |
| ௧௧. | வைரவக்கடவுள் ... | ௨௪ |
| ௧௨. | தவம் ... | ௨௬ |
| ௧௩. | அன்புடைமை I ... | ௨௮ |
| ௧௪. | அன்புடைமை II ... | ௩௨ |
| ௧௫. | திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் ஞானப்பாலுண்டது | ௩௪ |
| ௧௬. | பாண்டியன் சுரந்தீர்த்தது ... | ௩௬ |
| ௧௭. | அப்பூதியடிகள் நாயனார் ... | ௪௦ |
| ௧௮. | சுந்தரமூர்த்திநாயனார் முதலைவாய்ப்பட்டபிள்ளையை மீட்டது ... | ௪௩ |
| ௧௯. | மாணிக்கவாசகசுவாமிகள் புத்தரை வாதில்வென்றது | ௪௫ |
| ௨௦. | மெய்கண்டதேவர் ... | ௪௮ |
| ௨௧. | உமாபதிசிவாசாரியர் ... | ௫௨ |
| ௨௨. | கோச்செங்கட்சோழநாயனார் ... | ௫௫ |
| ௨௩. | மனுநீதிகண்டசோழர் ... | ௫௭ |
| ௨௪. | ஆலயவழிபாடு I ... | ௬௦ |
| ௨௫. | ஆலயவழிபாடு II ... | ௬௨ |
| ௨௬. | சிவாலயத் திருத்தொண்டுகள் ... | ௬௪ |

| | | | |
|---|---|---|---|
| ௨௭. | திருவிளக்கிடுதல் | ... | ௬௮ |
| ௨௮. | சிவநின்மாலியம் | ... | ௭௦ |
| ௨௯. | சிவத்திரவியங்கவர்தல் | ... | ௭௨ |
| ௩௦. | குருசங்கமவழிபாடு | ... | ௭௪ |
| ௩௧. | நக்கீரர் | ... | ௭௭ |
| ௩௨. | சுப்பிரமணியக்கடவுளும் ஔவையாரும் | ... | ௮௦ |
| ௩௩. | முசுகுந்தச்சக்கரவர்த்தி | ... | ௮௪ |
| ௩௪. | கரிக்குருவி உபதேசம்பெற்றது | ... | ௮௭ |
| ௩௫. | விட்டுணு | ... | ௮௮ |
| ௩௬. | சைவாசாரியரும் வைணவனும் | ... | ௯௧ |
| ௩௭. | சண்டேசுரநாயனார் | ... | ௯௫ |

உ

# மதிப்புரை

வித்தியாதரிசி
பிரமஸ்ரீ. தி. சதாசிவ ஐயரவர்கள் எழுதியது.

உலகத்தில் மக்கள் எல்லாரும் பாவத்தை நீக்கிப் புண்ணியத்தைச்செய்ய விரும்புவர். புண்ணியங்களுள் மிகச்சிறந்த புண்ணியம் சிவபுண்ணியமாகும். சிவபுண்ணியமாவது சிவபெருமானையும், சிவனடியார்களையும் வழிபடுதலும், அவர் சரிதங் கேட்டலும் முதலாயின. "இறைவரோ தொண்டருள்ளத்தொடுக்கம்; தொண்டர்தம்பெருமை சொல்லவும் பெரிதே" என்றாராகலின் சிவனடியார்களுடைய பெருமையை அளவிட்டுச் சொல்ல முடியாது. அதனால் சிவகதைகளும், சிவனடியார் கதைகளும் எழுதப்பட்டுள்ள இப்புஸ்தகம் சைவசமயாபிமானிகள் எல்லாராலும் போற்றற்பாலது.

அரும்பெரு விஷயங்களெல்லாம் இனிய கதைரூபமாக்கி மாணவர்க்கு முதலில் போதிப்பது பழையவழக்கு என்பது. அதனால் அம்மாணவரும் இளமையில் தாம்கற்றறிந்தவற்றை மறவாது மேன்மேலும் விருத்திசெய்வார்கள். இப்புத்தகம் சைவசமயச் சிறுவர்கள் தங்கள் சமயத்தைப்பற்றி அறிந்துகொள்வதற்கு ஏதுவாகும். இதனைத்தொகுத்து இயற்றினார் அச்சுவேலி பிரமஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்களவர். சமயசாஸ்திர விற்பன்னரான குருக்களவர்களால் தெளிவான செவ்வியநடையில் எழுதப்பட்டுள்ள இப்புத்தகம் சைவப்பாடசாலைகளிற் சமயபாடப் புத்தகமாக வைத்துப் படிப்பிக்கத்தக்கது என்பது துணிபு.

யாழ்ப்பாணம்,
30-3-33.

தி. சதாசிவஐயர்.



விநாயகக் கடவுள்.

உ

சிவமயம்.

# சைவப்பிரகாசிகை

## ஐந்தாம் புத்தகம்.

### விநாயகக்கடவுள்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

[பண்-வியாழக்குறிஞ்சி.]

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

விநாயகக்கடவுள் சிவபெருமானுடைய மூத்த திருக்குமாரரென்று வேதாகமங்களினாலே புகழ்ந்துரைக்கப்படுவர். அவர் யானைமுகத்தையும், பூதவயிற்றையும், தேவசரீரத்தையும், ஒற்றைக்கொம்பையும், மூன்று திருக்கண்களையும், ஐந்து திருக்கரங்களையும், இரண்டு திருவடிகளையும் உடையவர். திருச்சடையில் சந்திரன் முதலியவைகளைத் தரித்திருக்கின்றார். சர்ப்பம் முதலியவைகளை ஆபரணமாக அணிந்திருக்கின்றார். திருவருளே திருமேனியாக உடையவர். ஆன்மாக்களது அஞ்ஞானத்தையும், மனத்துன்பங்களையும் நீக்குபவர். விக்னேசுரர், விநாயகர், கணபதி, சியேட்டராசர் முதலிய திருநாமங்களையுடையவர். பிரணவவடிவமாயுள்ளவர். யாவரும் யாதொருதொழிலைச் செய்யப் புகினும் முதலில்வணங்கப்படுபவர். தம்மை நினையாதவர்களுக்கு விக்கினங்களை உண்டுபண்ணுதலானும், தம்மை நினைத்தவர்களுக்கு விக்கினங்களைப் போக்குதலானும் விக்னேசுரர் என்னுந் திருநாமத்தைப் பொருந்தினர். பிதா பிள்ளை என்றது அருள் நாடகமாம். பூவும் பூவினது நிறமும் பூவினது மணமும்போலச் சிவமும் சிவசத்தியாரும் சிவகுமாரரும் எண்ணப்படுதல் சைவாகமநூற் றுணிபாம்.

முன்னொருகாலத்தில் விட்டுணு முதலிய தேவர்கள் முதலில் மூத்தபிள்ளையாரை வணங்காது, பாற்கடலைக் கடைந்தார்கள்.

விக்கினேசுரர் அவர்கள் வருந்தும்படி மத்தாகக்கொண்ட மந்தர மலையைக் கடலினுள்ளே தாழ்த்துவிட்டனர். தேவர்கள் அதனைக் கண்டு, இது விக்கினேசுவர வழிபாடின்மையால் வந்ததென் றறிந்து, தியானித்துவணங்க, அவருடைய திருவருளினால் மத்தா கக்கொண்ட மந்தரம் முன்போல நிலைபெற்றது. தேவர்கள் பாற்கடலைக் கடைந்து அமிர்தம்பெற்று மகிழ்ந்தார்கள்.

முன்னொருகாலத்தில் விட்டுணு பொய்ச்சாட்சி சொல்லிய குற்றத்துக்காக உமாதேவியார் அவரைக் குருட்டுப் பாம்பாகும் படிசபித்தனர். அவர் உடனே பாம்பாய் ஒரு ஆலம்பொந்தினிட மாக இருந்து தவஞ்செய்தார். விநாயகக்கடவுள் அச்சாபத்தை நீக்கி அருள்செய்தார். அச்சாபம் நீங்கிய தினம் மார்கழிமாதத் தில் வரும் பூருவபக்கச் சட்டியாகும். அத்தினத்தில் மெய்யடி யார்கள் பலர் விநாயகக்கடவுளைப் பூசித்துப் போகமோக்ஷங்களை அடைந்தார்கள்.

தேவர்கள் விநாயகக்கடவுளை ஆவணிமாதத்தில் வரும் பூருவ பக்கச் சதுர்த்தியில் பூசித்தார்கள். அவர் பஞ்சகிருத்திய நிருத் தஞ் செய்தருளினார். சந்திரன் அவரது திருரூபத்தைப் பார்த்துச் சிரித்தான். விநாயகக்கடவுள் அவனை நோக்கி, "யாவரும் உன் னைப் பாராதவர்களாய், இத்தினத்தில் நிந்தைசெய்தகல, நீ நீசர் போலாவாய்" என்றார். ஆவணிமாதப் பூருவபக்கச் சதுர்த்தியில் உலகோர் அவனை நோக்காது விநாயகருக்கு விசேடபூசை செய்வார்கள்.

## உ. விநாயகக் கடவுள்.

## II

மிகப்பழையகாலத்திலே கயமுகன் என்னுமோர் அசுரன் இருந்தான். அவன் சிவபெருமானைக்குறித்துத் தவஞ் செய்தான். சிவபெருமான் பிரசன்னமாயினார். அவன் சிவபெரு மானிடத்திலே தேவர்கள் எல்லாரையும் வெல்லவும், படைக்கலங் களாலே இறவாதிருக்கவும், இறப்பினும் பிறவாதிருக்கவும் வரங்களைப் பெற்றுக்கொண்டான். பின்பு தேவர்களைத் தனது கட்டளைக்குட்படுத்தி, உயிர்களை வருத்திக் கொடுமைகளைச்செய்து,

உலகத்தை அரசாண்டான். அரசு செய்யுங்காலத்தில் இந்திரன் முதலிய தேவர்களை நோக்கி, "இமையவர்களே! நீங்கள் தினந்தோறும் எம்முன் வரும்போது, உங்கள் கைகளால் உமது சிரசுகளில் மும்முறை குட்டி, கைகளை மாறிக் காதுகளைப்பிடித்துத் தாழ்ந்தெழுந்து அதன்பின் நமது ஏவலைச்செய்யுங்கள்" என்றான். தேவர்கள் அதனைமறுத்தற்கஞ்சி, அவன் முன்புநின்று அப் புன்றொழிலையும் பிற பணிகளையும் நாடோறுஞ்செய்து பழியின் மூழ்கினார்கள். பழியின் மூழ்கிய தேவர்கள் அவன் செய்யுந் தீமைகளைத் தாங்க வியலாது அவனுடைய உயிரைக் கவரும்படி விநாயகரை வேண்டுதல் செய்தார்கள். விநாயகக்கடவுள் பூதசேனைகளோடு யுத்தகளத்தை யடைந்து, தமது கொம்பொன்றை முரித்தெறிந்து, கயமுகனைச் சங்காரஞ்செய்தார்.

சிவபெருமான் கொடுத்த வரத்தினால் இறவாத கயமுகன் வீழ்ந்து இறந்தவன் போன்று, பழைய வடிவைவிட்டு, ஒரு பெருச்சாளி வடிவங்கொண்டு வந்தான். அவர், "நீ நம்மைச் சுமக்குதி" என்று அவனுடைய பிடரிற்றாவி வீற்றிருந்து, அப் பெருச்சாளிவாகனத்தைச் செலுத்தியருளினார்.

தேவர்கள் விநாயக்கடவுளை வணங்கித் திருமுன் நின்று "எம்பெருமானே! எங்களைத் துன்பப்படுத்திய கயமுகாசுரனைத் தேவரீர் சங்காரஞ்செய்தருளியமையால் உய்ந்தேம்; நாங்கள் நேற்றைவரையும் அந்தக் கயமுகாசுரனுக்கெதிரே தவறாமற் செய்த தொண்டை இன்றுமுதல் தேவரீருடைய சந்நிதானத்திற் செய்வோம்; என்றார்கள். பிள்ளையார் "அவ்வாறு செய்குதிர்" என்றார். தேவர்கள் அன்பினோடு முட்டியாகப்பிடித்த இருகரங்களினாலும் தங்கள் தங்கள் சிரசுகளில் மும்முறைகுட்டி, இரண்டு கைகளையும் எதிரெதிராகமாறி இரண்டு காதுகளையும் பிடித்துக்கொண்டு, கணைக்காலும் தொடையும் ஒன்றையொன்று தொடும்படி மும்முறை தாழ்ந்தெழுந்து வணங்கினார்கள். விநாயகக்கடவுள் கிருபை செய்தார். தேவர்கள் "இன்றுமுதல் உலகத்திலுள்ளோர் எவரும் எங்களைப்போல இவ்வணக்கத்தைத் தேவரீருடைய சந்நிதானத்திற் செய்துவர அருள்செய்யவேண்டும்" என்று வேண்டுதல் செய்தார்கள். அவர் "அவ்வாறே ஆகுக"

என்றருள்புரிந்து தேவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பி யருளினர்.

### திருநாவுக்கரசு நாயனார்.

[திருத்தாண்டகம்]

கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
கயாசுரனை யவனாற்கொல் வித்தார் போலும்
செய்வேள்வித் தக்கனைமுன் சிதைத்தார் போலும்
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தார் போலும்
மெய்வேள்வி மூர்த்திதலை யறுத்தார் போலும்
வியன்விழி மிழலையிடங் கொண்டார் போலும்
ஐவேள்வி யாறங்க மானார் போலு
மடியேனை யாளுடைய வடிகடாமே.

### சேக்கிழார் புராணம்.

வானுலகும் மண்ணுலகும் வாழுமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வா
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

---

## ௩. நம்பியாண்டார் நம்பி.

சோழநாட்டிலே, தியாகராசக் கடவுளுடைய திருவடிகளை வணங்கி, செங்கோலோச்சிய அபயகுலசேகர சோழமகாராசாவானவர் தமது சபையில்வரும் அன்பர்கள் திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மார் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்துள் ஒவ்வோர் பதிகங்களை ஓதக்கேட்டு, கையிரண்டுமுச்சிமேலேற, கண்களில் ஆனந்தவெள்ளம் பொழிய, சரீரம்முழுவதும் புளகம் போர்ப்ப, சிவபெருமானுடைய திருவடிகளைத் துதித்து, தேவாரத்திருமுறைகளை எங்குந்தேடி இல்லாமையினாலே கவலையுறுவாராயினர். அவர் அங்ஙனமிருக்குங் காலத்தில் திருநாரையூரிலே ஆதிசைவப் பிராமணருக்கு உலகமீடேறவும், சைவம் வாழவும் ஒரு சிறுவர் வந்து தோற்றினர்.

அவர் உபநயனஞ் செய்யப்பெற்று, வேதமுதலிய கலைகளைப் படித்துவருங்காலத்தில், பிதாவானவர் ஒரூர்க்குச்செல்ல, நம்பியாண்டார் நம்பி அவரின் கட்டளைப்படி பொல்லாப் பிள்ளையாரைப் பூசிப்பதற்குச் சென்று அபிஷேகம் முதலியவற்றைச் செய்து, நிவேதனத்தைத் திருமுன்னிலையில்வைத்து, "எம்பெருமானே! இதனைத் திருவமுதுசெய்யவேண்டும்" என்று வணங்கிஞர். பிள்ளையார் திருவமுது செய்யாதிருப்பதைக் கண்டு நம்பியாண்டார்நம்பி வெம்பி, "அடியேன் ஏதேனுந் தவறுசெய்ததுண்டா? அடியேன் நிவேதித்திட்ட அமுதைத் திருவமுது செய்யாததுஎன்னை? என்று தலையினை மோதப்புகுந்தார். அப்பொழுது பொல்லாப்பிள்ளையார் "நம்பி! பொறு" என்று தடுத்து அந்நிவேதனத்தையுவந்து திருவமுதுசெய்தருளிஞர். நம்பியாண்டார் நம்பி "எந்தையே! அடியேன்பாடசாலைக்குச் சென்றால் உபாத்தியாயர் அடிப்பார். ஆதலிஞல் வேதமுதலிய கலைகளைத் தேவரீரே ஓதித்தரல் வேண்டும்" என்று விண்ணப்பித்தார். பரமாசாரியராகிய விநாயகக்கடவுளும் ஓதுவிக்க, நம்பியாண்டார்நம்பி ஓதி மகிழ்ந்தார். அதுபோல் மற்றைநாளும்நிகழ, நம்பியாண்டார்நம்பி வீற்றிருந்திடுஞ்செய்தியை அபயகுலசேகர சோழராசாவானவர் கேள்வியுற்று, திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாருக்கு நம்பியாண்டார் நம்பி நிவேதிக்கும்படி வாழைப்பழம், தேன், அவல், எள்ளுண்டை முதலியவற்றேடு இராசராச மன்னவர் அந்நகரில் வந்து சேர்ந்தார். அங்ஙனம் வந்தவர் நம்பியிஞடைய பாதங்களை வணங்கி, "இவற்றைப் பொல்லாப்பிள்ளையாருக்கு இப்பொழுதே நிவேதிக்க" என்று கூறிஞர். நம்பி அரசர்கூறியவற்றைக்கேட்டு, யானைமுகக் கடவுளுடைய திருவடிகளை வணங்கி, அரசர் தொகுத்து வைத்த இப்பொருள்களைத் திருவமுது செய்தருளுக" என்று படைத்தனர். விநாயகக்கடவுள் துதிக்கையிஞல் ஏற்றுத் திருவமுது செய்தருளிஞர். அரசர் மனம் நெகிழக் கண்ணீர் வர நம்பியிஞடைய பாதங்களைப்போற்றி, "மறையவரே! மூவருடைய திருநெறித்தமிழும் அவருடைய செய்தியும் பூமியில்

விளங்கச்செய்தருளுக" என்று போற்றி நின்றார். நம்பியாண்டார்நம்பி அவ்வரசன் வேண்டுகோட்கு உடன்பட்டு, பொல்லாப்பிள்ளையாருடைய திருவடிகளை வணங்கி விண்ணப்பஞ்செய்தார். பொல்லாப்பிள்ளையார், "நம்பி! தேவாரத்திருமுறைகள் சிதம்பரத்தில் மூவர் கையடையாளமுள்ள ஓர் அறையில் உள்ளன" என்று திருவாய்மலர்ந்து அவற்றை அருளிய நாயன்மார் சரித்திரத்தையும் அருளிச்செய்தார். நம்பியாண்டார்நம்பி அதனைச் சோழமகாராசாவுக்கு உபதேசித்தருளினார். அரசர்பிரான் நம்பியாண்டார்நம்பியுடன் சிதம்பரத்தை அடைந்து, நடராசரைத் தரிசித்து, தில்லைவாழந்தணரை இறைஞ்சி, அவர்கள் கட்டளைப்படி திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார் என்னும் மூவரையும் திருவுலாச்செய்து, கொண்டுவந்து அவர்கள் கையிலச்சினையுடைய அறையின் பக்கத்தே நிறுத்திக் கதவைத்திறந்து, திருமுறைகளைப் புற்றுமூடியிருப்பக்கண்டு, பெருங் கவலைகொண்டார். அப்பொழுது திருவருளாலே "அரசனே! தேவாரத் திருப்பதிகங்களுள் இக்காலத்துக்கு வேண்டுவனவற்றை வைத்து ஏனையவற்றை மண்மூடச் செய்தோம்" என்றோர் அசரீரிவாக்கு எழுந்தது. அந்தத் திருவாக்கைக் கேட்டலும் அரசர் கவலைநீங்கினார். நம்பி தேவாரத் திருப்பதிகங்களையும், திருவாசகம் முதலியவற்றையும் திருமுறையாக வகுத்தருளினார். வகுத்தபின், தமக்கு விநாயகக்கடவுள் உபதேசித்தருளியபிரகாரம் திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடியருளினார்.

பொல்லாப்பிள்ளையாருடை திருவருளினால் தேவாரத்தமிழ் வேதம் பண்டுபோல வழங்கலாயிற்று.

நம்பியாண்டார் நம்பி சிவானுபூதிச்செல்வராய் எழுந்தருளியிருந்து சிவபதம் அடைந்தார்.

---

குறிப்பு:—பொள்ளார் என்பது பொல்லார் என மருவிற்று. உளி முதலியவற்றாற் போழ்ந்து செய்யப்படாதவர்என்பது கருத்து. எனவே சுயம்புமூர்த்தி என்பதாம். இலச்சினை என்பது அடையாளம்.



## ௪. சிவபெருமான்.

சிவபெருமான் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம் அநுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியஞ் செய்து பசுக்களாகிய எங்களுடைய ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் நீக்கி, மோட்சத்தைக் கொடுக்கவேண்டுமென்னும் பெருங்கருணையினாலே, அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூவகையான திருமேனிகளைக் கொண்டருளினார். சிவபெருமானுடைய திருமேனி தோல் எலும்பு முதலிய தாதுக்களாலுண்டாக்கப்பட்ட நமது அசுத்த சரீரம் போலாகாது திருவருட்சத்தி வடிவேயாம். அவர் அருவத்திருமேனியைக் கொள்ளும்போது, சிவன் என்னும் திருநாமத்தைப் பொருந்துவர். அருவுருவத் திருமேனியைக் கொள்ளும்போது சதாசிவன் என்னுந் திருநாமத்தைப் பொருந்துவர். இவர் கிரியாசக்தி ரூபமாகிய பீடமும் சிவரூபமாகிய இலிங்கமும் சேர்ந்த கன்மசாதாக்கிய வடிவமாயிருப்பினும் ஐந்து திருமுகமும், பத்துத்திருக்கரங்களும், இருதிருவடிகளும் அமைந்த தியானரூபியாய் நின்று அருள்செய்வார்.

உருவத்திருமேனியைக் கொள்ளும்போது, மகேசுரன் என்னும் திருநாமத்தைப் பொருந்துவர். மகேசுவரர் மூன்று திருக்கண்களும், ஏகதேகமும், இருதிருவடிகளும், நஞ்சணிகண்டமும்,

நான்கு திருப்புயங்களும், செந்நிறத்திருமேனியும் உடையவர். வலக்கண்ணைச் சூரியனாகவும், இடக்கண்ணைச் சந்திரனாகவும், நெற்றிக்கண்ணை அக்கினியாகவும் உடையவர். செவிகளிலே பாம்பையும் சங்கையும் குண்டலங்களாகத் தரித்திருக்கிறார். சிவந்த சடையில் பாலசந்திரன், கங்கை, கொன்றைமாலை முதலியவற்றைத் தரித்திருக்கின்றார். திருக்கரங்களிலே மான் மழு முதலியவற்றைத் தரித்திருக்கின்றார். பாம்பு, பிரமவிட்டுணுக்களுடைய எலும்பு, பன்றிக்கொம்பு, ஆமையோடு முதலியவைகளை ஆபரணமாக அணிந்திருக்கின்றார். விபூதியைத் திருமேனியிற்றரித்திருக்கின்றார். புலித்தோலை ஆடையாக உடையவர். யானைத்தோலைப் போர்வையாக உடையவர். சிவபெருமான் இவைகளை அணிந்தது தம்பயன் கருதி அன்று; ஆன்மாக்கள், தம்மையே தலைவரென்று அடைந்து தீமைகள் நீங்கி முத்திபெற்றுய்யும்படியாகவே தரித்தருளினார். சிவபெருமான் இடபவாகனத்தில் உமாதேவியாருடன் தோன்றி அருள்செய்பவர். பஞ்சகிருத்திய காரணமாகிய நடனத்தை எப்பொழுதுஞ் செய்பவர். இவ்வடிவமே சிவபெருமானுக்கு உருவத்திருமேனியாகும். அவர் வேண்டிய வேண்டிய இடங்களிலே வேண்டிய வேண்டிய வடிவங்களைக் கொள்வர்.

ஆன்மாக்களுக்குப் போகத்தை ஊட்டுவதற்காகவும், யோக முத்தி உதவுதற்காகவும், வினைகளைநீக்குதற்காகவும் சிவபெருமான் ஒருவரே சந்திரசேகரர் முதலிய இருபத்தைந்து மூர்த்தங்களையும் விநாயகர், வீரபத்திரர், வைரவர், சுப்பிரமணியர் என்னும் மூர்த்தங்களையும் கொண்டருளினார். இவர்கள் இரத்தினமும் ஒளியும் போலவும், அக்கினியுஞ் சூடும் போலவும், மரமும் வயிரமும் போலவும் சிவபெருமானினின்றும் பிரித்தெண்ணப்படாதவர்களேயாம்.

### திருநாவுக்கரசு சுவாமிகள்

[திருத்தாண்டகம்.]

வங்கமலி கடனஞ்ச முண்டாய் போற்றி
மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரு நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோ லாடைக் குழகா போற்றி

அங்கணனே யமரர்கடம் மிறைவா போற்றி
யாலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

## திருவாசகம்.

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா வார்கொலோ சதுரர்
ரந்தமொன் றில்லா வானந்தம் பெற்றே
னியாதுநீ பெற்றதொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
யெந்தையே யீசா வுடலிடங் கொண்டா
யானிதற் கிலனோர்கைம் மாறே.

## திருவிசைப்பா.

என்னையுன் பாத பங்கயம் பணிவித்
தென்பெலா முருகநீ யெளிவந்
துன்னையென் பால்வைத் தெங்குமெஞ் ஞான்று
மொழிவற நிறைந்தவொண் சுடரே
முன்னையென் பாச முழுவது மகல
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
கன்னலும் பாலுந் தேனுமா ரமுதுங்
கனியுமா யினியையா யினையே.

## திருப்பல்லாண்டு.

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணள வுஞ்சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம்.

*சடைமருங்கி லிளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலு*
*மிடமருங்கி லுமையாளு மெம்மருங்கும் பூதகணம்*
*புடைநெருங்கும் பெருமையுமுன் கண்டரசன் போற்றிசைப்ப*
*விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடுத்தான்.*

---



## ௫. விட்டுணு பிரமர் அடிமுடி தேடியது.

பிரமதேவர் தமது பகல் கழிந்து இராவுவர நித்திரை செய்தார். கிரகங்களும், தேவருலகும், பூவுலகும் அழிந்தன. விட்டுணு பரமசிவனைத் தியானித்துக் கொண்டு ஆலிலையில் நித்திரை செய்தார். சனலோகத்து முனிவர்கள் கண்டு புகழ அவர் விழித்துப் பூவுலகைத் தேடினார். அது பாதாளத்தில் ஆழ்ந்திருத்தலை அறிந்து ஒரு பன்றிவடிவங்கொண்டு, தமது கொம்பினாற்பூமியை எடுத்துக் கொண்டு மீண்டுவந்து முன்போல நிறுத்திப்போயினார். அப்பொழுது பிரமாவுக்கு மற்றொரு பகற்பொழுதாயது பிரமா எல்லாவற்றையும் சிருஷ்டித்தார். விட்டுணு தாமேபிரமமெனநினைத்து அகந்தையோடு பாற்கடலிற் றுயின்றார். பிரமா அவ்விடத்தை அடைந்து, விட்டுணுவின் மார்பிற்றாக்கி "நித்திரை விட்டெழுதி" என்றார். விட்டுணு எழுந்தார். எழுந்த விட்டுணுவை "நீ யார்?" என்று பிரமதேவர் வினவினார். விட்டுணு "நான் உன் பிதா" என்றார். அவ்விருவரும் இவ்வாறு பலவிதமாக வாதித்தார்கள். பிரமா "நாமிருவரும் யுத்தம் செய்வோம்; நம்மில் வெற்றி பெற்றவரே மேலவர்" என்றார். இருவரும் கடும்போர்செய்து, இறுதியில் சிவப் படைக்கலங்களைச் செலுத்தினார்கள். அவைகள் தம்முள் விளையாடி உலாவித்திரிந்தன,

இவ்வாறாக யுத்தஞ்செய்த பொழுது, சிவபெருமானது திருவையினால் நாரதமுனிவர் தோன்றி, "நீங்களிருவரும் முதல்வரல்லீர்; நீங்கள் யுத்தஞ் செய்யும்பொழுது செலுத்திய சிவப்படைக் கலங்களைத்தந்த கடவுளை மறந்தீர்கள்போலும்; மறந்ீராயின் அப்படைகளின் பெயரையும் மறந்தீர்களா? அப்பெயரை மனதிலே நினைத்துக்கொள்ளுங்கள்; இன்னும் நீங்கள் மலைவீராயின் ஆதியாய் அருவுருவான பரம்பொருள் சோதியாய் உங்கள் நடுவே தோன்றுவர்; அதைத்தரிசியுங்கள்" என்று ஞான அறிவினாலே இவைகளை உபதேசித்துச் சென்றார். பிரமவிட்டுணுக்கள் நாரதமுனிவர் கூறியவற்றை மனதிற் கொள்ளாதவர்களாய்ப் பலகாலம் யுத்தஞ்செய்தார்கள்.

இவைகளெல்லாவற்றையும் பரமசிவன் நோக்கி, அவர்கள் அகந்தையை நீக்கி அடிமைகொள்ளுமாறு திருவுள்ளங்கொண்டு, மாசிமாதத்திலே அபரபக்ஷசதுர்த்தசியின் நடுஇரவில் அவர்கள் நடுங்கும்படி அவ்விருவருக்கும் நடுவில் ஓர் அக்கினிமலைபோலத் தோன்றியருளினார். தோன்றிய சோதி அவ்விருவரும் செலுத்திய சிவப்படைக்கலங்களிரண்டையும் தன்னுள்ளடக்கி நின்றது. பிரமவிட்டுணுக்கள் கோபத்தையும் போரையும் நீக்கி அதைப் பார்த்து நின்றார்கள். அப்பொழுது "நீங்கள் இந்தச் சோதியின் அடியையும் முடியையும் காணுங்கள்" என்று அவர்கள் கேட்கும்படி ஒரு அசரீரிவாக்கு எழுந்தது. பிரமவிட்டுணுக்கள் சபதங் கூறி அடிமுடிகளில் ஒன்றை முன்னங்காண்பவரே பரம்பொருளாவர் என்று உறுதிசெய்தனர். பிரமா சோதியின் முடியைக் காண்பேன் என்றார். விட்டுணு சோதியின் அடியைக் காண்பேன் என்றார்.

திருமால் ஒரு பன்றியின் வடிவங்கொண்டு, பூமியை இடந்து கீழேயுள்ள புவனங்கள் எங்குந் தேடிச் சென்று அதனடியைக் காணாதவராய், வலிமை குன்றித் துயரடைந்தார். அப்பொழுது பழைய ஞானம் முழுதுமுண்டாயிற்று. தெளிவடைந்த அவர் பன்றிவடிவத்தைத் தாங்க ஆற்றாதவராய், சிவபெருமானுடைய திருவடிகளையே புகலிடமென்று தோத்திரஞ் செய்து, அவருடைய அருளினாலே சோதிக்குப் பக்கலாக வந்துநின்றார். பிரமா ஒரு அன்னவடிவமெடுத்து, மேலுள்ள புவனங்களிற் றேடிச்

சென்று முடியைக் காணாதவராய் வருந்தினர். சோதியினின்று சித்தர்போலப் பலர் வந்து, சிவபரத்துவத்தைக் கூறினார்கள். பிரமா அகந்தை முதலியன நீங்கி, விட்டுணுவை அணுகினர். இருவரும் சிவபூசை செய்ய ஆசையுற்றவர்களாய்ச் சிவலிங்கத்தைத் தாபித்துப் பூசைக்குவேண்டும் உபகரணங்கள் எல்லாவற்றையும் அமைத்து அர்ச்சித்து வணங்கினார்கள்.

சிவபெருமான் உமாதேவிபாகராய் இடபவாகனத்தின் மீதாக அந்தச் சோதிக்கணித்தாய் பிரமவிட்டுணுக்கள் காணும்படி நின்று அருள்செய்தார்.

பிரமவிட்டுணுக்கள் அவருடைய திருவடிகளை நமஸ்காரஞ் செய்து, அருள்வெள்ளத்திலமிழ்ந்தி, உண்மை உணர்வோடு நின்று, தோத்திரஞ்செய்து, தங்கள் குற்றங்களைப் பொறுத்தருளுமாறு வேண்டினர். சிவபெருமான் அவர்களை நோக்கி "நீங்கள் செய்தகுற்றங்களொன்றையும் திருவுள்ளங்கொள்ளோம்; வேண்டிய வரங்களைக் கேண்மின்" என்று அருளிச்செய்தார்.

அரிபிரமர் "கடவுளே! தேவரீருடைய திருவடிகளே புகலிடமாகக் கொண்டு வழிபடுகின்ற தலையன்பைத்தந்தருளுக" என்று வேண்டுதல் செய்தார்கள். கடவுள் அதனை யீந்து, அந்தச் சோதியிலே மறைந்தருளினார்.

பரமசிவன் மறைந்தபொழுது பிரமவிட்டுணுக்கள் வணங்கி எழு, வளர்ந்தெழுந்த அச்சோதி சுருங்கிச்சுருங்கி வந்து, உலகெலாந்துதிக்கும்படி ஒரு மலையாயது. அந்தச்சிவலிங்கரூபமாகிய மலையை அரிபிரமர் அணுகி, மும்முறை பிரதக்ஷிணஞ்செய்து வணங்கித் துதித்துத் தங்கள் பதவிகளுக்குப் போயினார்கள்.

பிரமவிட்டுணுக்கள் தேடிய அம்மலை அருணாசலம் என்னும் பெயருடையதாய் இன்னும் அடியார்கள் வணங்குமாறு இருக்கின்றது. அச்சோதி தோன்றிய இரவே சிவராத்திரியாயது. அத்தினத்திற் பலரும் சிவபெருமானைப் பூசித்து உய்ந்தார்கள்.

பிரமவிட்டுணுக்கள் தமக்குச் சிவபிரான் சோதிரூபம் காட்டியபொழுது, இச்சோதியை அடியேங்களுக்கு என்றுங்காட்டியருளவேண்டும் என்னும் பிரார்த்தித்தார்கள். சிவபெருமான்

"கார்த்திகை மாதத்தில் கார்த்திகைநக்ஷத்திரத்திற்காட்டுவோம்" என்றருளினர். அச்சோதியைக் குறிப்பதற்காகவே எங்கும் விசேஷமாக விளக்கேற்றப்படுகின்றது.

திருநாவுக்கரசு சுவாமிகள்

[திருத்தாண்டகம்.]

"காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங்
கடிகமலத் திருந்தயனுங் காணா வண்ணஞ்
சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்கு
மேரொளியை யிருநிலனும் விசும்பும் விண்ணு
மேழுலகுங் கடந்தண்டத் தப்பா னின்ற
பேரொளியைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"

---



## ௪. உமாதேவியார்.

உமாதேவியார் சிவபெருமானுடைய சத்தியாகும். சத்தியாவது அக்கினியுஞ்சூடும்போல, சிவத்தோடு பின்னமின்றி உள்ளதாகிய வல்லமையாம். திருவருளே சிவனுக்குச் சத்தியாம். அவ்வருட்குணமாகிய சத்தியின்றிச் சிவமில்லை, சிவத்தைவிட்டுச்சத்தி

நீங்குவதில்லை. அக்கினி பொருளால்ஒன்ருயினும் வடிவாற் செம்மை என்றும், குணத்தாற் சூடு என்றும் பிரித்தெண்ணப்படு மாறுபோல, பரம்பொருள் ஒன்றேயாயினும் எவற்றையுங் கடந்து நிற்கும் ஒளியாகிய வடிவால் சிவம் எனவும், எவற்றையுங்கலந்து அவைகளைத் தன்பாலிழுக்கும் வலிமையாகிய குணத்தால் சத்தி எனவும் பிரித்துக் கூறப்படும்.

சத்தியாகிய உமாதேவியார் பச்சைநிறமும், மூன்று கண்களும், அபயகரமும், வரதகரமும், தாமரைப்பூவும், உருத்திராக்க வடமுந் தாங்கிய மற்றிருகரங்களுமாக நான்கு திருக்கரங்களுமுடையவர். உயர்ந்த கிரீடமும் ஆபரணங்களுந் தரித்துள்ளவர்.

முன்ெனாருகாலத்திலே, உமாதேவியார் பிரமாவினுடைய மகனுகிய தக்கன் என்பவன்செய்த பெருந்தவத்தினல் ஒரு வலம்புரிச்சங்குவடிவாய்க் காளிந்திநதியில் ஒரு தாமரைப்புஷ்பத்தின் மீது விற்றிருந்தனர். அவ்வலம்புரிச்சங்கைத் தக்கன் கண்டு எடுத்தான். எடுத்தவுடன் அது ஒரு பெண்குழந்தையாயிற்று. உமாதேவியார் அவனிடத்தில் குழந்தைவடிவமாய் வளர்ந்தார். தக்கன் உரியகாலத்திலே சிவபெருமானுக்கு முறைப்படி தத்தஞ்செய்து கொடுத்தான். தக்கன் செய்த பாவத்தினலே அந்த விவாகமண்டபத்திலிருந்து சிவபெருமான் மறைந்துபோயினர். அதுகண்டு உமாதேவியார் பெருந்துயரங்கொண்டு தவஞ்செய்தார். சிவபெருமான் தோன்றி அருள்செய்து அவரைத் தமது இடபவாகனத்தில் ஏற்றித் திருக்கைலாசமலைக்குச் சென்றனர். பின்பு உமாதேவியார் சிவதூஷணஞ்செய்த தக்கனுடைய யாகத்தை அழிக்கவேண்டும் என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் வீரபத்திரரைத் தோற்றுவித்து அவ்வியாகத்தை அழிப்பித்தருளினர்.

பின்ெனாரு காலத்திலே, இமயமலைஅரசன் உமாதேவியாரைப் புத்திரியாகப் பெறும்பொருட்டுத் தவஞ்செய்தான். சிவபெருமான் அவனது தவத்தை நிறைவேற்றும் பொருட்டு உமாதேவியாருக்கு அருள்செய்தார். தேவியார் ஒரு சிறுபிள்ளைவடிவுடன் சென்று பத்மை என்னுந் தடாகத்திற் புட்பித்திருந்த பதுமாசனத்தின் மீதாக இருந்தனர். உமாதேவியார் தனக்குப் புத்திரியாகவேண்டும் என்று தவஞ்செய்த அரசன் அவரைக்

கண்டு மகிழ்ந்து ஆனந்தபாஷ்பஞ்சொரிய வணங்கிக் கைகளை லெடுத்துச் சிரசிற்கூமக்அசென்று மேனை கையிற் கொடுத்தான். மேனை உலகமாதாவாகிய உமாதேவியாரை வணங்கிப் போற்றினுள்.

உமாதேவியார் அரசனிடம் விடைபெற்றுச் சிவபெருமானைக்குறித்துத் தவஞ்செய்தார். சிவபெருமான்தோன்றி அருள் செய்து மறைந்தனர். இச்செய்தியை உமாதேவியாரது தோழியர்கள் அரசனுக்குக்கூறினுர்கள். அதுகேட்ட மலையரசன் உமாதேவியாரைத் தவச்சாலையினின்றும் தனது கோயிலுக்கு அழைத்துக்கொண்டு சென்முன். சிவபெருமான் எழு முனிவர்களை அனுப்பி மணம்பேசுவித்தார். மலைஅரசன் சந்தோஷித்து அதற்குடன்பட்டு, திருக்கைலாசமலைக்குச் சென்று, "எம்பெருமானே! திருமணஞ் செய்யும் பொருட்டு எழுந்தருளுக" என்றுன். சிவபெருமான் உருத்திரர் முதலிய கணங்களோடு இமயத்தை அடைந்து முறைப்படி திருமணஞ் செய்தருளினுர்.

---

## எ. உமாதேவியார்
## II

வடமொழி தென்மொழிஇரண்டினும் வல்லவனும், முறைவேண்டினேருக்குங் குறைவேண்டினேருக்குங் காண்டற்கெளியவனும், கருணைக்குறையுளும் ஆகிய மலயத்துவசபாண்டியன் நெடுங்காலம் புத்திரபாக்கியம் இல்லாமையால் சிவ விரதங்களை அனுட்டித்து, புத்திரகாமேட்டியாகஞ் செய்தான். நெய் சமித்து முதலியவற்றுல் அக்கினி சிகைவிட்டெரிந்தது. அப்பொழுது உலகமாதாவாகிய உமை, மூன்று முலைகளையுடைய ஒரு பெண்பிள்ளை வடிவமாகி மூன்று பிராயத்தோடு யாககுண்டத்தினின்றுந் தோன்றிவந்து, பாண்டியனது மனைவியாகிய காஞ்சனமாலையுடைய மடியில் இருந்தார். மீனுட்சிஅம்மையே தன்னன்பு காரணமாக அவதரித்த பெருங்கருணையை அறியாது, பாண்டியன் வருந்தி, "யான் வருந்திச் செய்த யாகம் ஒரு பெண்பிள்ளையையே தந்தது; இப்பிள்ளையும் பகைவர் நகைக்கும்வண்ணம் மூன்று தனங்களையுடையதாய் வந்தது. யான் யாது செய்வேன்" என்றுன். அப்பொழுது "மனங் கலங்காதே; புத்திரனுக்

குப் போலச் சடங்குகளெல்லாஞ் செய்து, தடாதகையெனப் பெயரிட்டு முடிசூட்டுதி; இப்பெண்ணுக்குக் கணவன் வரும் போது ஒருதனம் மறையும்" என்று ஓர் அசரீரிவாக்குத் தோன்றியது.

சிவபெருமான் அருளிய பிரகாரமே மலயத்துவசன் சாத கன்மம் முதலிய சடங்களைச் செய்து வளர்த்து வந்தான். தடாதகை வேதம் முதலிய கலைகளைக் கற்று, யானை முதலியவற்றைச் செலுத்துவதினும், வில் வாள் முதலிய படைத்தொழிலினும் வல்லவராயினர். தந்தை அகமகிழ்ந்து பலதேயத்து அரசர்கள்சூழ முடிசூட்டித் தன் அரசைக் கொடுத்துச் சுவர்க்கம் புக்கான். பெண்ணரசியாந் தடாதகைப்பிராட்டியார் பலதேசத்து அரசர்களும் வந்து பணிசெய்ய, வடமொழி தென்மொழிப் புலவர்களும் முனிவர்களும், ஞானிகளும், மந்திரிகளும், பிறரும் சூழ அறநூல் வழி அரசியற்றுவாராயினர்.

தடாதகைப்பிராட்டியார், திக்குவிசயஞ் செய்ய விரும்பி நால்வகைச் சேனைகளோடு சென்று, வடதேசத்திலுள்ள அரசர்களை வென்று, பின்னர் திருக்கைலாசமலையை நோக்கிச் சென்றார். படைவீரர் திருக்கைலையை வளையத் திருநந்திதேவர் பூதங்களை ஏவினர். பூதங்கள் யுத்தஞ்செய்து தோற்றன. திருநந்திதேவர் சிவபெருமானுக்கு நிகழ்ந்தவற்றை முறையிட்டார். சிவபெருமான் யுத்தகளத்துக்குச் சென்றார். அப்பொழுது சிவபெருமானைப்பிராட்டியார்கண்டார். உடனே ஒருதனம் மறைந்தது. முன்னாளிலே அசரீரி வாக்கைஅறிந்த சுமதியென்னும் மந்திரி தடாதகையை வணங்கி, "தாயே! இச்சிவபிரானே உமக்கு நாயகர்" என்றான். சிவபெருமான் "உன்னை மணஞ்செய்ய வருவோம்; நீ மதுரைக்குப்போ" என்று கிருபை செய்தார். பிராட்டியார் மதுரையை அடைந்து மாளிகையிற் புகுந்தார். மந்திரிமார்கள், மதுரைநகரெங்கணும் மணமுரசறைவித்து, எல்லாத் தேசங்களுக்கும் மணவோலை அனுப்பினர்கள். திருமுகம்பெற்ற சகல தேசத்து மன்னர்களும் வந்தார்கள். சிவபெருமான் தேவர் உருத்திரர் முதலியோர் சூழ மதுரையுட் புகுந்து திருமண மண்டபத்தை அடைந்து வீற்றிருந்தருளினர். அப்பொழுது விட்டுணு தடாதகைப்பிராட்டியைத் தத்தஞ்செய்தார். சிவபெருமான் முறைப்படி ஏற்றுக் கிருபை செய்தருளினர்.

உமாதேவியார் காஞ்சீபுரத்தின்கண்ணே ஏகாம்பரநாத சுவாமியின் வாமபாகத்திற் காமாட்சி என்னுந் திருநாமத்தோடு விளங்கி முப்பத்திரண்டு தருமங்களையும் ஆன்மாக்கள் ஈடேறும்படி செய்தருளுகின்றார். சிதம்பரத்திலே நடராசப்பெருமான் பஞ்சகிருத்திய நிருத்தஞ் செய்ய, ஆன்மாக்களின் பிறவிப்பிணி நீக்கத்தின்பொருட்டு, சிவகாமியம்மை என்னும் நாமத்தோடு அந்நிருத்தத்தைத் தரிசித்தருளுகின்றார். காசித்தலத்திலே விசுவநாதர் ஆன்மாக்களுக்கு இறக்குங்காலத்திலே பிரணவம் உபதேசித்தருளும்போது, உமாதேவியார் விசாலாட்சி என்னும் பெயருடையாராய், அவைகளுக்கு இளைப்பு நீங்கும்பொருட்டுத் தூசினால் வீசியருளுகின்றார். உமாதேவியார் இலக்குமி என்னும் திருநாமத்தைப்பொருந்தி எல்லாச் செல்வங்களையும், சரஸ்வதி என்னும் திருநாமத்தைப் பொருந்தி எல்லா வித்தைகளையும் கொடுத்தருளுகின்றார். துர்க்கை, காளி என்னும் பெயர்களைத்தாங்கி, துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்பவரும் உமாதேவியாரேயாம். உலகமாதாவாகிய இவரை நவராத்திரி முதலிய புண்ணிய காலங்களில் மிக விசேடமாக வழிபட்டு உய்தல்வேண்டும்.

கோயிற்புராணம்.

மன்றின்மணி விளக்கெனவா மருவுமுக நகைபோற்றி
யொன்றியமங் கலநாணி னொளிபோற்றி யுலகும்பர்
சென்றுதொழ வருள்சுரக்குஞ் சிவகாம சுந்தரித
னின்றதிரு நிலைபோற்றி நிலவுதிரு வடிபோற்றி.



## அ. சுப்பிரமணியக்கடவுள்.

முன்னொருகாலத்திலே சூரபதுமன் முதலிய அவுணர்கள் தேவர்களுக்கு மிக்க துன்பஞ் செய்தார்கள். தேவர்கள் தங்கள் துன்பத்தைக் கைலாசபதிக்கு முறையிட்டார்கள். சிவன்

திருவுளமிரங்கி, தமது நெற்றிக்கண்களினின்றும் ஆறு அக்கினிப் பொறிகளைத் தோற்றுவித்தனர். அப்பொறிகள் ஆறும் ஆறு சிறுவராய்ச் சரவணப்பொய்கையில்வளர்ந்தன. அந்த ஆறுசிறுவரும் உமாதேவியார் ஒருங்கே தழுவ ஓருருவமாயினர். அவரே சுப்பிரமணியக்கடவுள் என்று போற்றப்படுவார். சுப்பிரமணியருக்குக் குமரன், வேலன், முருகன், கந்தன் முதலிய பலநாமங்களுண்டு. சுப்பிரமணியக்கடவுள் ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக்கண்களும், பன்னிரண்டு திருப்புயங்களும், இரண்டு திருவடிகளும் உடையார். கொடி, குலிசம், தோட்டி, அஸ்திரம், வேல் என்னும் ஐந்தும் முறையே பொருந்திய கரங்களும் அபயகரமுமே வலக்கரங்களாம். தாமரை, மணி, மழு, தண்டு, வில் என்னும் ஐந்தும் முறையே பொருந்திய கரங்களும் வரதகரமுமே இடத்திருக்கரங்களாம். குமாரக்கடவுள் இன்னும் அடியார்கள் பொருட்டு வேறு பல வடிவங்களைத் தாங்கி அருள்செய்கின்றார். வள்ளிநாயகியார் தெய்வயானை அம்மையார் ஆகிய இருவரும் அவருக்குச் சத்தி என்று சொல்லப்படுவர். சூரன் முதலிய அவுணர்கள் இந்திரன் முதலிய தேவர்களை வருத்திச் சுவர்க்கத்தை எரித்துத் தேவர்கள்பலரையும், இந்திரகுமாரனாகிய சயந்தனையும் சிறையில்வைத்தார்கள். சுப்பிரமணியக்கடவுள் பரமசிவனுடைய கட்டளைப்பிரகாரம் வீரவாகு முதலிய வீரரோடும் பூதங்களோடும் சென்று அவ்வசுரர்கள் பலரையுங் கொன்று சூரபதுமனோடு எதிர்த்து யுத்தஞ்செய்தார். சூரபதுமன் பல மாயவடிவங்களைக் கொண்டு யுத்தஞ் செய்தான். சுப்பிரமணியக்கடவுள் அவைகளை மாற்றித் தமது விசுவரூபத்தைக் காண்பித்துச் சிற்சில நல்லறிவு வரச்செய்தார். அப்பொழுது சூரபதுமன் அவ்விசுவரூபத்தைக் கண்டு ஆனந்தபாஷ்பஞ்சொரிய அதன்வசமாய் நின்றான். முருகக்கடவுள் அவனுடைய அற்ப ஞானத்தை மாற்றியருளினார். சூரபதுமன் ஒரு இருள் வடிவங்கொண்டு தேவர்களை உண்ணும்படி விரைந்துசென்றான். தேவர்கள் அதனையறிந்து,

"நண்ணினர்க் கினியா யோலம் ஞானநா யகனே யோலம்
பண்ணவர்க் கிறையே யோலம் பரஞ்சுடர் முதலே யோலம்
எண்ணுதற் கரியா யோலம் யாவையும் படைத்தா யோலம்
கண்ணுதற் பெருமா னல்குங் கடவுளே யோல மோலம்.

தேவர்க டேவே யோலம் சிறந்தசிற் பரனே யோலம்
மேவலர்க் கிடியே யோலம் வேற்படை விமலா வோலம்
பாவலர்க் கெளியா யோலம் பன்னிரு புயத்தா யோலம்
மூவரு மாகி நின்ற மூர்த்தியே யோல மோலம்.''

சூரபதுமன் எங்களை உண்ணும்படி வருகின்றான். இறைப்பொழுதும் தாமதம்செய்யாது, அவனுயிரையுண்டு அடியேங்களைக் காத்தருளுக'' என்று வேண்டினார்கள். இந்திரனும் அங்ஙனமே வேண்டினான். சுப்பிரமணியக்கடவுள் தமது திருக்கரத்திலிருக்கும் ஞானரூபமாகிய வேற்படையைச் சூரபதுமன்மீது செலுத்தியருளினார். வேலாயுதமாகிய ஞானசூரியன் செல்லுதலும் சூரபதுமனது இருள்வடிவம் முற்றும் அழிந்தது. சூரபதுமன் வேற்படை வருதலைநோக்கிக் கோபித்து ஒருமாமரவடிவாய் நின்றான். வேற்படை கோபத்துடன் அம் மாமரவடிவத்தைச் சங்கரித்தது. சூரபதுமன் இறவாதவனாய்த் தனது பழையவடிவுகொண்டு, தன் உடைவாளை எடுத்துப் போர்செய்ய எண்ணி எதிர்த்தான். வேற்படை அவனுடைய மார்பைப்பிளந்து உடம்பை இரு கூறாக்கிப் பெருமானுடைய திருக்கரத்தில் வந்திருந்தது.

சிவபெருமான் கொடுத்த வரத்தினால் அழியாத சூரபதுமன், பிளவுண்ட தன் இரண்டுகூறும் கோழியும், மயிலுமாகிப் போர்ச் செருக்குடன்வந்தான். சுப்பிரமணியக்கடவுள் அவன்மீதுகிருபாநோக்கம் செய்தார். அவன் அத்திருவருட்பார்வையால் ஞானம் பொருந்திய மனத்தனானான். கடவுள் ஞானமடைந்த கோழியை நோக்கி, ''நீ நம்முடைய தேரிற் கொடியாய்ச் சென்றிருந்து கூவுதி'' என்றருள அது அங்ஙனமே செய்தது. குமாரக்கடவுள் ஞானத்தைப்பெற்று நின்றமயிலை வாகனமாகக்கொண்டு,செலுத்தியருளினார். தேவர்கள் கடவுளுடைய பெருங்கருணையைத் துதித்தார்கள்.

வீரவாகுதேவர் முருகக்கடவுளுடைய கட்டளைப்படி சயந்தன் முதலியோரது விலங்கை அறுத்துச் சிறையை நீக்கி அருள் செய்தார். வருணன் அவுணனுடைய பட்டினமாகிய மகேந்திரபுரியை அழித்தனன்.

ஒரு காலத்திலே பிரமா, தம்மை நமஸ்காரம்பண்ணாது கர்வத்தோடு சென்றமையைச் சுப்பிரமணியக்கடவுள் நோக்கி, அவரைப் பிரணவப்பொருள் வினவினர். அவர் சொல்ல அறியாது மயங்க, குட்டிச் சிறையில் வைத்துச் சிலகாலம் உலகங்களைப் படைத்தார். பின் சிவபெருமானுடைய விருப்பின்படி பிரமாவைச் சிறையினின்று நீக்கியருளினர். பின்னர்ப் பிரணவப்பொருளை அகத்தியமுனிவருக்கு உபதேசித்தருளினர்.

சுப்பிரமணியக்கடவுளை மெய்யன்போடு தியானிப்போர் சிவபெருமானுடைய திருவடி நீழலை அடைவார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகள்.
[திருத்தாண்டகம்.]

கோழிக் கொடியோன்றன் றாதை போலும்
　　கொம்பனாள் பாகங் குளிர்ந்தார் போலும்
ஊழி முதல்வருந் தாமே போலு
　　முள்குவா ருள்ளத்தி லுள்ளார் போலும்
ஆழித்தேர் வித்தகருந் தாமே போலு
　　மடைந்தவர்கட் கன்பராய் நின்றார் போலும்
ஏழு பிறவிக்குந் தாமே போலு
　　மின்னம்பர்த் தான்றோன்றி யீசனாரே.

சோமேசர் முதுமொழி வெண்பா.

மேல்வளமெல் லாமமைந்தும் வீர மகேந்திரந்தான்
றோல்வியுற்று மாய்ந்ததே சோமேசா—ஞாலமிசை
ஆங்கமைச் செய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை யில்லாத நாடு.

---

## ௬. சிவதூஷணம்.

சிவபெருமானை நிந்தித்தலும், சிவனை வழிபடும் முறையைப் போதிக்குங் குருவை நிந்தித்தலும், சிவனடியாரை நிந்தித்தலும், வேதாகமங்களை நிந்தித்தலும், அவைகளைக் கேட்டுக் கொண்டிருத்தலும், பிறவும் சிவத்துரோகங்களாகிய அதிபாதகங்களாம்.

குடிகளுக்குச் செய்யுந் தீமையினும் மகாராசாவுக்குச் செய்யுந் தீமை மிகக் கொடியது. அதுபோல ஆன்மாக்களுக்குச் செய்யுந் துரோகத்தினும் சிவனுக்குச் செய்யுந் துரோகம் மிகக் கொடியது. குடிகளுக்குச் செய்த தீமை அரசனாலே பொறுக்கப்படினும் பொறுக்கப்படும். அரசனுக்குச் செய்ததீமையோ பொறுக்கப்படமாட்டாது. அதுபோலவே ஆன்மாக்களுக்குச் செய்த துரோகம் சிவபெருமானாலே பொறுக்கப்படினும் பொறுக்கப்படும். சிவபெருமானுக்குச் செய்த துரோகம் பொறுக்கப்படமாட்டாது. ஆதலால், மேற்கூறிய சிவத்துரோகங்களில் ஒன்று செய்தவரும், அதற்குடன்பட்டவரும், அதுசெய்வாரை விலக்காது பொறுத்தவரும், அதுசெய்வாரோடு கூடினவரும் நரகங்களில் அளவில்லாதகாலம் கிடந்து வருந்துவர். சிவத்துரோகம் எவ்வகைப் பிராயச்சித்தத்தாலுந் தீராது.

முன்னொருகாலத்திலே, பிரமதேவருடைய புத்திரனாகிய தக்கன் என்பவன் சிவபெருமானைக் குறித்து அருந்தவஞ் செய்தான். சிவபெருமான் தோன்றியருளி அவன் விரும்பிய வரங்களைக் கொடுத்தார். சிலகாலஞ்செல்ல அவன் செல்வச் செருக்கினால் சிவபெருமானையும் வேதமுறைமையையும் இகழ்ந்து விட்டுணுவை யாகாதிபதியாக வைத்து ஒருயாகத்தைச் செய்யத் தொடங்கினான். ததீசிமுனிவர் வந்து சிவபெருமானையே முதல்வராகவைத்து யாகஞ்செய்யவேண்டும் என்று போதித்தார். தக்கன் அவற்றை அங்கீகரியாது இகழ்ந்தான். சிவபெருமான் அவனது யாகத்தைச் சிதைத்து, அடிமைகொள்ளுமாறு திருவுள்ளங்கொண்டு, தமது நெற்றிக்கண்ணினின்றும் வீரபத்திரமூர்த்தியைத் தோற்றுவித்தருளினார். அவர் ஆயிரஞ்சிரசுகளையும், மூவாயிரங்கண்களையும், இரண்டாயிரங்கரங்களையும், இரண்டு பாதங்களையும், சிவந்த நிறத்தையுமுடையவராய்த் தோன்றினார். உமாதேவியார் பத்திரகாளியைத் தோற்றுவித்தருளினார். பூதர்கள் சேவிக்க வீரபத்திரர் பத்திரகாளியுடன் யாகசாலையை அடைந்து அவிப்பாகத்தைக் கேட்டனர். அவன் கொடாதிகழ்ந்தான். வீரபத்திரர் அதுகண்டு தமது வாட்படையினால் அவனது சிரசை வெட்டி யாகாக்கினிக்கு உணவாக்கினார். தக்கனுடைய ஆணைக்கஞ்சி யாகத்துக்குச்சென்றிருந்த தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் ஏற்றதண்டனைகளைச் செய்து அருளுஞ்செய்தார்.

வீரபத்திரக்கடவுளைப் பிரமதேவர் நோக்கித் தமது புத்திரனை எழுப்பியருளுமாறு விண்ணப்பித்தார். வீரபத்திரமூர்த்தி ஒரு ஆட்டுத்தலையை அவனது குறை உடம்பில் வைத்துப் பொருத்தி "தக்கனே! எழும்புவாயாக" என்று எழுப்பினார். அவன் நல்லுணர்வுடன் எழுந்து காசியை அடைந்து சிவபூசைசெய்து சிவகணத்தலைவனாயினான்.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

உதைத்தவன்கா ணுணராத தக்கன் வேள்வி
யுருண்டோடத் தொடர்ந்தருக்கன் பல்லை யெல்லாம்
தகர்த்தவன்காண் டக்கன்றன் றலையைச் செற்ற
தலைவன்காண் மலைமகளா முமையைச் சால
மதிப்பொழிந்த வல்லமரர் மாண்டார் வேள்வி
வந்தவியுண் டவரோடு மதனை யெல்லாம்
சிதைத்தவன்காண் டிருமுண்டீச் சரத்து மேய
சிவலோகன் காணவனென் சிந்தை யானே.

திருவாசகம்.

பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
யெண்பட்ட தக்க னருக்கனெச்ச னிந்துவனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திரராற்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ.

தக்கன் சிவனையும், அவரது மெய்யடியாராகிய ததீசி முதலியோரையும் இகழ்ந்து, தண்டிக்கப்பட்டமையையும், அவனைச் சார்ந்த தேவர்கள் தண்டிக்கப்பட்டமையையும் உணர்ந்து, சிவநிந்தனை செய்தல் கேட்டல் ஆகிய அதிபாதகத்துக்கு ஆளாகாது விலகி நடத்தல் வேண்டும்.

---

## கO. வீரபத்திரக்கடவுள் சரப வடிவங்கொண்டது.

முன்னொருகாலத்திலே இரணியன் என்னும் ஓர் அசுரன் பிரமாவை நோக்கிப் பெருந்தவஞ் செய்தான். பிரமதேவர் தோன்றி, "இரணியனே! நீ விரும்பிய வரங்கள் யாவை? கூறுதி" என்று வினவியருளினர். இரணியன், பஞ்சபூதங்கள்

மிருகங்கள் பட்சிகள் முதலியவற்றினால் இரவிலும் பகலிலும் இறவாதிருக்கவேண்டும்; இறப்பினும் எனது உடலினின்று ஒழுகிய உதிரத்தில் ஒருதுளி நிலத்தில் விழுந்தாலும், உடனே அவ்வுதிரத்துளி என் வடிவுபெற்று என் பகைவர்களை அளிக்கவேண்டும்" என்று வேண்டினான். பிரமதேவர் "அவ்வாறே ஆகுக" என்றுகூறி மறைந்தருளினார். அவன் தருக்குற்று, தேவர் முதலியோரை வருத்திக் கொடுங்கோல் செலுத்திவந்தான். அவனுஞ்ஞையால் அனைவோரும் "இரணியாய நம" என்றே முதற்கூறித் தங்கள் கருமங்களைத் தொடங்குவார்கள். இங்ஙனம் நிகழுங்காலத்தில் அவனுக்குப் பிரகலாதனன் என்னும் பெயருள்ள ஒரு புத்திரன் பிறந்தான். அவனுக்கு ஐந்து வயசாயபின்னர் இரணியன் சுக்கிராசாரியாருடைய புத்திரர் இருவரிடத்தில் வித்தை கற்கும்படி அனுப்பினான். அவர்கள் அப் புதல்வனுக்கு ஆரம்பத்தில் "இரணியாய நம" என்று சொல்லிக் கொடுத்தார்கள். புதல்வன் "நமோ நாராயணாய" என்று கூறினான். சுக்கிரன் புத்திரர்கள் கோபமுடையராய், இரணியனிடம்போய்ப் பிரகலாதனனுடைய செய்கையைக் கூறினார்கள். இரணியன் தன் மகனை அழைத்து; "உனக்குக் கூறிய முதல் வாக்கியத்தைக் கவனியாது, வேறு யாது சொற்றனை" என்று கோபத்துடன் வினவினான். பிரகலாதனன் "நமோ நாராயணாய" என்றான். கொடியோன் கடுஞ் சீற்றங்கொண்டு மகனை வெட்டுவித்தான். அவனுடைய சரீரம் ஊறடையவில்லை. இரணியன் விடமூட்டுவித்தான். அது அவனுக்கு அமிர்தமாயது. பாம்புகளைக் கடிக்கும்படி ஏவினான். பாம்புகளின் பற்கள் முரிந்தன. யானைகளைக் குத்தும்படி செய்தான். அவைகளின் தந்தங்கள் ஒடிந்தன. இன்னும் இவைபோலும் பல தண்டனைகளைச் செய்வித்தும் அவன் இறக்கவில்லை.

மகன் இறவாததன்மையைக் கேள்வியுற்று, சபைமுன்னர் வருவித்து "என்னையன்றி வேறு கடவுளுண்டா? நீ சொல்லிய அக்கடவுளை என் கண்முன்னே காட்டுவாயாக; காட்டாதொழிவையேல் உன்னைக் கொன்றுவிடுவேன்" என்று கூறினான். அது கேட்ட பிரகலாதனன் "திருமால் எங்குமுள்ளவர்" என்றான். இரணியன் "இத்தூணில் அவனைக் காட்டக்கடவாய்" என்றான். அப்பொழுது திருமால் அவன் சுட்டிய தூணிலிருந்து நரசிங்க

மாய்த் தோன்றி, மாலைப்பொழுதில் இரணியனைத் தள்ளி மடியிற் கிடத்தி, மூதுகைப்பிளந்து அவனது உதிரத்தையும் உயிரையும் பருகினர்.

விட்டுணுவாகிய நரசிங்கம் "இரணியனையான்கொன்றேன்" என்று அகங்கரித்துச் சீவராசிகளை வருத்தியது பிரமா முதலிய தேவர்கள் சிவபெருமானைவணங்கி, "அடியேங்களது அச்சத்தை நீக்கியருளுக" என்று விண்ணப்பித்தனர். வீரபத்திரக்கடவுள், சிவபெருமானது திருவுள்ளக்கருத்தின்படி எட்டுக்கால்கள் பொருந்திய சரப உருவேற்று, நரசிங்கத்தைக் கொன்றனர். கொன்றபின்னர் அதன் தோலை உரித்தெடுத்து அச்சரப உருவை நீக்கி அத்தோலைச் சிவன் சந்நிதியில்வைத்து வணங்கினர்.

பிரமா முதலிய தேவர்கள் பணிந்து "சுவாமி இத்தோலை ஆடையாக அணிந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். சிவபெருமான் அவ்விதமே சாத்தியருளினர். விட்டுணு தாம் நரசிங்காவதாரங் கொண்டு செய்த பாவங்களைத் தீர்க்கவிரும்பிச் சிவபெருமானுடைய பாதங்களை அருச்சித்துத் தமது பதவியை அடைந்தார்.

திருநாவுக்கரசு நாயனர்
(திருத்தாண்டகம்.)

துங்கநகத் தாலன்றித் தொலையா வென்றித்
தொகுதிறலவ் விரணியனை யாகங் கீண்ட
அங்கனகத் திருமாலு மயனுந் தேடு
மாரழலை யநங்கனுடல் பொடியாய் வீழ்ந்து
மங்கநகத் தான்வல்ல மருந்து தன்னை
வண்கயிலை மாமலைமேன் மன்னி நின்ற
செங்கனகத் திரடோளெஞ் செல்வன் றன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் றானே.

---

## கக. வைரவக்கடவுள்.

முன்னோர் காலத்தில் திருமாலும் பிரமாவும் மகாமேரு மலையின் ஒரு கொடுமுடியில் இருந்தார்கள். அப்பொழுது முனிவர்களும் தேவர்களும் வந்து வணங்கி, "முழுமுதற்கடவுள் யார் என்பதை அடியேங்களுக்கு உபதேசித்தருளுக" என்றார்கள். பிரமா "நானே பரம்பொருள்" என்றார். விட்டுணுவும்

"தானே பரம்பொருள்" என்று கூறினர். இருவரும் இத்தன்மையாகத் தர்க்கஞ்செய்ய முனிவர்களும் தேவர்களும் இது நம்மால் வந்தது என்று கூறி, ஒருவரும் நில்லாது நீங்கினர். பிரமவிட்டுணுக்கள் பின்பும் வாதஞ்செய்தார்கள். வேதமும் குடிலையும் வேறுவேறு உருவங்களைத் தாங்கி "வாதஞ்செய்யற்க; சிவபெருமான் ஒருவரே மெய்க்கடவுள்" என்று கூறின. அவர்கள் பின்னும் போரைச்செய்தார்கள். பெருங்கருணைக்கடலாகிய சிவபெருமான் அதைக் கண்டு, அவர்களுடைய போரைத் தொலைக்கத் திருவுள்ளங்கொண்டு, அமலமாகிய சோதிவடிவாய் ஆகாசமத்தியில் தோன்றியருளினர். அகந்தைகொண்ட பிரம விட்டுணுக்கள் அச்சோதியைச் சிவனென அறியாதவர்களாயினர். அதனைப் பரமசிவன் அறிந்து உமாதேவி சமேதராய் அச்சோதியினிடையே தோன்றியருளினர். விட்டுணு விரைந்தெழுந்து வணங்கினர். மாயைசிறிதும் நீங்காத பிரமா தமது உச்சிச் சிரசிலுள்ள வாயினாலே சிவபெருமானை இகழ்ந்தனர்.

சிவபெருமான் பிரமாவினுடைய பாவத்தைத் தொலைக்கவும், மற்றைத் தேவர் முதலாயினோர்தம் அகந்தையை நீக்கவும், வைரவக்கடவுளைத் தமது இருதயத்தினின்று உண்டாக்கினர். அவர் நீலநிறத் திருமேனியும், சூலம், பரசு, பாசம், உடுக்கு ஏந்திய நான்கு திருக்கரங்களும், திரிநேத்திரங்களும், திருச்சடையுமுடைய உக்கிர வடிவுகொண்டு தோன்றினர். வைரவக்கடவுளைச் சிவபெருமான் நோக்கி, "நம்மை இகழ்ந்த பிரமனுடைய உச்சிச் சிரசைக் கிள்ளிக் கையிலேந்தி, மற்றைத் தேவர் முனிவர்களது இரத்தத்தைப் பிக்ஷையாக ஏற்குதி; அப்பொழுது இறந்தவருக்கு மீட்டு உயிரைக் கொடுக்குதி" என்று கூறிச் சோதியில் மறைந்தருளினர்.

சோதியும் மறைந்தது. விட்டுணு சிவனை வணங்கி, வைகுண்டமடைந்தார், வைரவக்கடவுள் பிரமாவினது உச்சிச்சிரசை நகத்தாற் கிள்ளித் தமது திருக்கரத்திலேந்தி அவருக்கு உயிர்கொடுத்தருளினர். பிரமா எழுந்து நல்லறிவு வரப்பெற்று, வைரவக்கடவுளுடைய பாதங்களை அன்போடுவணங்கி, "சர்வ சங்கார காரணராகிய கடவுளே! அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளுக. இழிமையும் எளிமையும் உடைய இந்தச் சிரசும் பரிசுத்தமு

டையதாம்படியும், அடியேன் தேவரீரைத் தரிசிக்கும்பொழுது மயக்கம் திரும்படியும் சூலப்படையைப்போல் இச்சிரசையும் திருக்கரத்தில் ஏந்தியருளுக" என்று சொல்லித் துதித்தார். வைரவப்பெருமான் "அவ்வாறேயாகுக" என்று கிருபைசெய்து, மேருமலையை நீங்கிப் போய்த் தேவர்களதும் முனிவர்களதும் குருதியைப் பிக்ஷையாக ஏற்று, அவர்களுக்கு உயிர்கொடுத்து எழுப்பியருளினார்.

வைரவக்கடவுள் பின்னர் வைகுண்டமடைந்து, விட்டுணுவினுடைய இரத்தத்தைப் பிக்ஷையாக ஏற்று அவர் சோர உய்ந்தெழும்படி அருள்செய்து, அண்டங்களைப்பரிபாலித்து வீற்றிருந்தருளினார்.

சுந்தரமூர்த்திநாயனார்
[பண்—தக்கேசி]

என்ற வந்தணன் றலையினை யறுத்து
 நிறைக்க மாலுதி ரத்தினை யேற்றுத்
தோன்று தோண்மிசைக் களேபரந் தன்னைச்
 சுமந்த மாவிர தத்தகங் காளன்
சான்று காட்டுதற் கரியவ னெளியவன்
 றன்னைத் தன்னி லாமனத் தார்க்கு
மான்று சென்றணை யாதவன் றன்னை
 வலிவ லந்தன்னில் வந்துகண் டேனே.

---

## கஉ. தவம்.

தவமானது மனம் பஞ்சப்பொறிகளின் வழியிலே செல்லாது நிற்றற்பொருட்டு விரதங்களினாலே, உணவைச்சுருக்குதன் முதலிய செய்கையை மேற்கொண்டு, கடவுளைத் தியானித்தலாம். ஒருவனிடத்திலே அன்பும் அருளும் உண்டாயின், தவம் உண்டாகும். தவம் உண்டாயின், அவன் பிறவிக்குக் காரணமாகிய மும்மலங்களினின்று நீங்கிப் பேரின்பத்தை அனுபவிப்பன். ஆதலால் தவம்போலச் சிறந்தது பிறிதில்லை. ஐம்பொறிகளை அடக்கித் தவஞ்செய்து, முத்தியின்பத்தைப் பெற்றார் சிலர். இம்மையின்பத்தைப் பெற்றார் சிலர். இருமை இன்பங்களையும் பெற்றார் சிலர். தம்முடைய உடம்பைவாட்டி நெடுங்காலந் தவஞ்செய்தவரே தேவராகி மேற்பதவிகளைப் பெற்றிருக்கின்றார்கள். தவஞ்செய்து முத்தியின்பம் பெற்றவர்களை இவ்வளவினரென்று கூற

வது அரிது. தவஞ்செய்யாது பிறவுயிர்களுக்குத் துன்பஞ்செய்வோருக்கு இருமை இன்பமும் இல்லை. அவர்கள் பிறவித்துன்பத்தை அடைவார்கள். இருமை இன்பத்துக்கு ஏதுவாகிய தவத்துக்கு ஒப்பும் இல்லை; உயர்வுமில்லை. தவத்தை ஒப்பதுதவமேயாம். உடம்பைவாட்டித் தவஞ்செய்வோர் உலகமெல்லாம் வியக்கும்படி வாழ்வர். பகைவரை அழிப்பர். விரும்பியபொருளெல்லாம் அடைவர். சித்தியராய் இருப்பர். உடம்பை வாட்டி அருந்தவஞ்செய்து மேன்மையை அடைந்த அருச்சுனனுடைய சரித்திரம் வருமாறு:—

பாண்டவர் ஐவரிலொருவனாகிய அருச்சுனன் பகைவர்களை வெல்வதற்காகப் பாசுபதாஸ்திரம் பெறும்பொருட்டு இந்திரநீலமலையிலிருந்து, விபூதி உருத்திராக்கத்தை அணிந்து, ஸ்ரீ பஞ்சாட்சரத்தைச் செபித்துச் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தான். துரியோதனனால் அனுப்பப்பட்ட மூகாசுரன் என்பவன் அங்கே வந்து பன்றி வடிவோடிருந்தான். அக்காட்டிலிருந்த தபோதனரெல்லாம் அப்பன்றியால் மனங்கலங்கியிருந்தார்கள்.

பரமசிவன் பன்றியின் வலிமையை மாற்றத் திருவுள்ளங்கொண்டு, திருவடிகளில் செருப்பைத்தரித்து, திருவரையில் புலித்தோற்கச்சைக்கட்டி, சுரிகையைச் செருகி, திருமார்பில் குன்றிமணிமாலை முதலிய மாலைகளை அணிந்து, முதுகில் தூணியைக்கட்டி, திருக்கரங்களில் அம்பையும் வில்லையும் ஏந்தி, இவ்வாறு ஒரு வேட்டுவத் திருக்கோலத்தைக் கொண்டு முன்னே சென்றருளினார். பார்ப்பதிதேவியாரும் எம்பிரான் எடுத்த வேட வடிவத்திற்கிசைய ஒரு திவ்விய வடிவத்தைத் தாங்கி அவருக்குப் பின்னே போயினார். சிவபெருமான் செல்லுதலும், அப்பன்றி விரைந்து அவரது முன்னிலையில் ஆர்த்து வந்தது. பெருமானார் ஒரு திருவிளையாடலைத் திருவுள்ளத்துன்னி, ஓரம்பை எய்தார். அவ்வம்புபடுதலும் பன்றி வெருவி ஓடி ஒளித்தது. சிவபெருமான் தவறாதபடி தொடர்ந்துசெல்ல, அது இளைத்து முனிவர்களுடைய ஆச்சிரமத்தை அடைந்தது. முனிவர்களெல்லோரும் அப்பன்றிக்குப் பயந்து ஓடி விசயனை அடைந்தார்கள். உடனே அவன் எழுந்து வில்லை வளைத்து அம்பைத் தொடுத்துப் பன்றி விழும்படி எய்தான். பரமசிவனாகிய வேடுவர் வந்து "இப்பன்றியையானே

கொன்றேன்" என்று திருவாய்மலர்ந்தருளினர். அருச்சுனன் கிராதமூர்த்தியை நோக்கி "காட்டில் வாழுங் கொடுந்தொழிலை யுடைய வேடுவனே! நான் விட்ட அம்பு தைக்கவும் நீ பொய் வார்த்தையைப்பேசுகின்றாய்; வில்லோடுஉன்சிற்றார்க்குப்போ" என்றான். இதனால் இருவருக்கும் செரு நிகழ்ந்தது. அருச்சுனன் அதுகாலை சிவபெருமானது திருமுடியில் வில்லினாற்றாக்கினான். சர்வலோகாதிபதியாய், சர்வவியாபகராய், இலங்குஞ் சிவபெருமான்மீது பட்ட அவ்வடி சரம் அசரம் ஆகிய எல்லாப் பொருள்களிலும் பட்டது. மீண்டும் சிவ்பெருமான் விசயனுடன் மல்யுத்தம்புரிதலாகிய திருவிளையாடலைச்செய்து, கிராதவடிவைக்கரந்து, உமையுந் தாமுமாக இடபவாகனத்தில் ஆரோகணித்துக் காட்சி கொடுத்தருளினர்.

அருச்சுனன் சரீரம் நடுங்கி அயர்ந்து கண்களினின்றும் ஆனந்த பாஷ்பஞ்சொரிய, "அடியேனது குற்றத்தைப் பொறுத்தருளுக" என்றுவேண்டினன். சிவபெருமான், "அருச்சுனனே! அஞ்சேல் உனக்கு வேண்டும் வரம் யாது கூறுதி" என்றருளிச்செய்தார். அருச்சுனன் வணங்கி, "பரமபிதாவே! தேவரீருடைய திருவருளினால் அடியேன் உய்யும்படி முத்தி தந்தருளுக" என்று வேண்டினன். சிவபெருமான் "வில்வீரனே! பூமியிற் பகைஞரை வெல்வதற்குப் பாசுபதாஸ்திரம் பெறுமாறு நினைத்துத் தவஞ்செய்தாய்; அதனை முன்னதாகவே பெற்றுக்கொள்" என்று கொடுத்து "எம்மை வேடன் என்று இகழ்ந்து கூறினை; அதனால் வேடராசனாகித் திருக்காளத்தி சென்றடைந்து அன்புருக்கொண்டு எம்மைப் பூசித்துப் பன்றிமுதலிய விலங்குகளின் மாமிச உணவை நிவேதிக்குதி. அந்நாளில், உனக்கு மோக்ஷத்தைக்கொடுப்போம்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர்.

### திருநாவுக்கரசு சுவாமிகள்.

[பண்—பழந்தக்கராகம்.]

"வஞ்சமனத் தஞ்சொடுக்கி வைகலுநற் பூசனையால்
நஞ்சமுது செய்தருளும் நம்பியென வேநினையும்
பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபத மீந்துகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சணவுங் கோளிலியெம் பெருமானே."

# கரு. அன்புடைமை.

அன்பாவது ஒருவருக்குத் தம்மோடுதொடர்புடையராய்த் தமக்கு இனியவராய் உள்ளவரிடத்தே நிகழும் மனநெகிழ்ச்சியாம். நம்மோடு தொடர்புடையராய் நமக்கு இனியவராய் உள்ளவர்யாவர் என்று ஆராய்தல்வேண்டும். தந்தைதாய் முதலியோருக்கும் எமக்கும் உள்ளதொடர்ச்சி நிலையில்லாத இவ்வுடம்பினால் ஆயது. இவ்வுடம்பு அழியவே இதனாலாகிய தொடர்ச்சியும் ஒழியும். உடம்பினாலே தொடர்ச்சியுள்ளபோதுஞ் சிலகாலங்களிலே நமதுஉறவினரே நமக்குப் பகைவராகவும், பகைவரே உறவினராகவும் காண்கின்றோம். ஆதலால் இவர்களை எமக்கு இனியரென்று கொள்ளுதல் கூடாது. எக்காலும் துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தை அநுபவிக்கவேண்டும் என்னுங் கருத்து நமக்குஉண்டு; ஆயினும் நாம் இன்பம் இது, துன்பம் இது, துன்பத்தினின்று நீங்கி இன்பம் பெறும்வழி இது என்று உள்ளவாறு அறிதற்கும், துன்பத்தினின்று நீங்கி இன்பத்தைப் பெறுதற்குஞ் சுதந்திரசக்தி உடையோம் அல்லோம். ஆகையால் எமக்கு நாமே இனியம் எனக்கொள்ளுதலும் பொருந்தாது.

ஆன்மாக்கள்மேல் வைத்த பெருங் கருணையினாலே அவர்களை அநாதியே பந்தித்த மலத்தை நீக்கி மோக்ஷத்தைக் கொடுத்தருளும் பரமபதி சிவபெருமான் ஒருவரே; ஆதலால் அவர் ஒருவரே நமக்கு இனியவர் என்று கொண்டு அவரிடத்திலேயே அன்பு செய்தல்வேண்டும். அன்பு இல்லாதவிடத்துச் சிவபெருமானை ஒருவாற்றானும் அடைதல் கூடாது. இடையறாது வளரும் அன்பின் முதிர்ச்சியிலே சிவபெருமான் விளங்குவர். சிவபெருமானிடத்து அன்புடைமைக்கு அடையாளங்கள்: அவருடைய உண்மையைநினைக்கும்பொழுதும், கேட்கும்பொழுதும், காணும்பொழுதும், தன்வசமழிதலும், ஆனந்த அருவிபொழிதலும், விம்மலும் பிறவுமாம். இவ்வன்பு பல பிறவிகளிற் செய்த புண்ணிய முதிர்ச்சியினாலேயே வரும். இவ்வன்புடைமையால் தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்கிய பெரியார் கண்ணப்பநாயனார்.

அருச்சுனனென்பான் சிவபெருமான் கட்டளையிட்டருளிய பிரகாரம் பொத்தப்பிநாட்டிலுள்ள உடுப்பூரிலே வேடத்தலைவனாகிய நாகன் என்பவனுக்குத் தத்தை என்பவளிடத்தில் புத்தி

ரனுப் பிறந்தான். அப்பிள்ளைக்குத் திண்ணனூர் என்று பெய ரிடப்பட்டது. திண்ணனூர் வில்வித்தையிலே சாமர்த்தியம் உடை யவராயினர். அவர் ஒருநாள் வனத்திற்சென்று வேட்டையா டினர். வேட்டையாடும்பொழுது ஒரு பன்றி வேடருடைய வலையை அறுத்து வேகமாக ஓடியது. திண்ணனூர் அப்பன் றியைக் கொல்ல நினைத்து விசையோடு தொடர்ந்தார். பன்றி நெடுந்தூரம் ஓடிப்போய் இளைப்பினுல் ஒருமரநிழலிலே நின்றது. திண்ணனூர் அதை உடைவாளினுலே குத்தினர். அவருடன் வந்த நாணன் காடன் இருவரும் இறந்த பன்றியைக்கண்டு "இதை நெருப்பிலே காய்ச்சித் தின்று தண்ணீர் குடிப்போம்" என்றுர்கள். திண்ணனூர் அதற்கு உடன்பட்டு அவர்களுடன் சிறிது தூரஞ் செல்ல, திருக்காளத்திமலை தோன்றியது. அவர் நாணனை நோக்கி, "நமக்கு முன்னுகத் தோன்றுகின்ற இம் மலைக்குப் போவோம்" என்றுர். நாணன் "இம்மலையில் குடு மித்தேவரைக் கும்பிடலாம்" என்றுன். திண்ணனூர் பொன்முக லியாற்றை அடைந்து அதன் கரையிலுள்ள மாநிழலிலே அப் பன்றியை வைத்தார். பின்பு காடனை நோக்கி, "தீக்கடைகோல் செய்து நெருப்பை உண்டாக்கு" எனக்கட்டளையிட்டார். கட் டளைசெய்து நாணனேடும் பொன்முகலியாற்றைக் கடந்து மலை யிலே பேராசையோடும் ஏறிச்சென்று, சிவலிங்கப்பெருமான் எழுந்தருளியிருத்தலைக் கண்டார்.

கண்டமாத்திரத்திலே பரமசிவனுடைய கிருபாநோக்கத் தைப்பெற்று, முன்னுள்ள குணங்கள்மாறிப் பரமசிவனிடத்தில் வைத்த அன்புருவமாயினர். விரைந்துசென்று தழுவி முத்தமிட் டார். சரீரம்முழுதும் உரோமாஞ்சங்கொள்ள, கண்ணீர்சொரிய, மனங் கசிந்துருக ஆனந்தங்கொண்டு "துட்டமிருகங்கள் இருக் கிற இக்காட்டிலே நீர் துணையின்றி வேடரைப்போல் இருப்ப தெவ்வாறு" என்று துக்கித்துப் பரவசமடைந்தார். பின் ஒரு வாறு தெளிந்து "இவருடைய முடியிலே நீரை வார்த்துப் பச்சிலை களையும் பூவையும் இட்டவர்யாவரோ?" என்றுர். அப்பொழுது அங்குநின்ற நாணன், "பண்டு உமது பிதாவுடனே வேட்டையா டிக்கொண்டு இம்மலையிலே வந்தபோது, ஒரு பார்ப்பான் இவர் முடியிலே நீரை ஆட்டி, இலையையும் பூவையும் சூட்டி, உணவை ஊட்டி, சில வார்த்தைகளைப் பறைந்தான். அதைக் கண்டிருக்

கின்றேன். இன்றும் இப்படி அவனேசெய்தான்போலும்" என்றான். அதைக்கேட்ட திண்ணனார் இந்தச் செய்கைகளை திருக்காளத்திநாதருக்கு இனிய செய்கையென்று கடைப்பிடித்தார். பின், சுவாமிஅமுதுசெய்வதற்கு இறைச்சி கொண்டுவரவிரும்பி, அவருடைய சந்நிதானத்தை அருமையாக நீங்கி, பிறவிடயங்களிலுண்டாகும் வேட்கை நீங்கி அன்புமயமாகி அங்குள்ள சோலையிலேபுகுந்தார். காடன் அதுகண்டு கும்பிட்டு, "நெருப்புக் கடைந்து வைத்திருக்கிறேன்; இவ்வளவுநேரமும் நீர் தாழ்த்தது என்னை" என்றான். நாணன் அதைக்கேட்டு "இவர் மலையிலே உள்ள தேவரைக் கண்டு, நீங்கமாட்டாதவராய் நிற்கின்றார். அந்தச் சுவாமிக்கு ஊட்ட இறைச்சி கொண்டுபோகும்பொருட்டே வந்திருக்கின்றார்" என்றான். திண்ணனார் பன்றியை வதக்கி இனியதசைகளைக் கிழித்துக்காய்ச்சி, வெந்தவுடனே தம்முடைய வாயிலே இட்டுச் சுவைபார்த்து, இனியனவாகிய இறைச்சிகளைத் தேக்கிலைக் கல்லையிலே வைத்து மற்றையவைகளை உமிழ்ந்தார். இதைக்கண்ட நாணன் காடன் இருவரும் "இறைச்சியைத் தாமுண்ணுகின்றாருமில்லை; பசியுடைய எங்களுக்குத்தருகின்றாருமில்லை. தெய்வப் பித்துத் கொண்டார். இதை நாகனுக்குக் கூறுவோம்" என்றுசொல்லிக் காட்டிலே நின்ற ஏவலாளரையுங் கொண்டு சென்றார்கள்.

திண்ணனார் கல்லையில் ஊனாகிய அமுதை அமைத்து, திருமஞ்சனம் ஆட்டும்பொருட்டு ஆற்றுநீரை வாயினால்முகந்து, பூக்களைக் கொய்து தலையிலே செருகி, ஒரு கையில் அம்பையும் வில்லையும் மற்றக்கையில் இறைச்சியையும் ஏந்தி, மிகவிரைந்து கடவுளை அடைந்தார். அடைந்து அவருடையதிருமுடிமேல் இருந்த பூக்களைத் தம்முடைய காற்செருப்பால் மாற்றி, தம்முடைய வாயில் இருக்கின்ற நீரைத் திருமுடிமேல் உமிழ்ந்து, தம்முடைய தலையில் இருந்த பூக்களை எடுத்துத் திருமுடிமேற் சாத்தினார். பின்பு இறைச்சியைத் திருமுன் படைத்து, "கொழுமையான இறைச்சிகளெல்லாவற்றையும் நாக்கினாற்சுவைபார்த்துப்படைத்தேன். மிக நன்றாகவிருக்கின்றது. நாயகரே! இதை அமுதுசெய்தருளும்" என்றுசொல்லி உண்பித்தார். சூரியன் அஸ்தமனமாயினான். தேவருக்குத் துட்டமிருகங்கள் துன்பஞ் செய்யக்கூடும் என்று இராமுழுதும் கையிலே வில்லையேந்தி, சுவாமிக்குப் பக்கத்

திலே விழித்துக்கொண்டு நின்றார். அப்படி நின்ற திண்ணனார் சுவாமிக்கு இறைச்சி கொண்டுவரும்படி வைகறைப் பொழு திலே சென்றார்.

---

## ௧௪. அன்புடைமை.

### II

திருக்காளத்தியீசரைத் தினந்தோறும் சைவாகமவிதிப் படி அருச்சிக்கும் ஆதிசைவராகிய சிவகோசரியார் என்பவர் ஆற்றிலே ஸ்நானஞ்செய்து திருமஞ்சனமும் பத்திர புஷ்பமும் எடுத்துக்கொண்டு சிவசந்நிதானத்திலே போனார். போகும்பொ ழுது இறைச்சியும் எலும்பும் கிடக்கக்கண்டு நடுநடுங்கி, "மகா தேவரே! தேவரீரது முன்னிலையில் வேட்டுவப் புலையர்களே இதனைச் செய்தனர்போலும்; உமக்கும் இது திருவுள்ளமோ" என்று இரங்கினார். பின்பு அங்கே கிடந்த இறைச்சி, எலும்பு, கல்லை இவைகளையெல்லாம் திருவலகினால் மாற்றிக் குற்றம் நீங் கும்படி சுத்திசெய்து, அன்புடன் பூசைசெய்து பணிந்து, அரு மையாக நீங்கித் தபோவனத்தை அடைந்தார்.

முன்னர் வேட்டைக்குச்சென்ற திண்ணனார் பன்றிமுதலிய மிருகங்களின் இறைச்சியைப் பக்குவப்படுத்தித் தேக்கிலையில் வைத்துத் தேனைக்கலந்து, நீரும் பூவுங்கொண்டு மலையிலேறி, முன்போலப் பூசைசெய்து இறைச்சிக் கல்லையைத் திருமுன் வைத்து, "இவை பன்றி மான் முதலிய மிருகங்களின் இறைச்சி; அடியேனும் சுவை கண்டேன்; தேனுங் கலந்திருக்கின்றது" என்றுசொல்லித் திருவமுது செய்வித்து, அவருக்குப் பக்கத்தில் நின்றார்.

அப்பொழுது தனது மகனுடைய செய்கையை நாணனு னுங் காடனாலும் அறிந்த நாகன், தன் புத்திரரை அடைந்து தன் பக்கலாக வசப்படுத்தியும் வசமாகாமையினால் கைவிட்டுச்சென் றான்.

சிவத்தொண்டில் வழுவாது நிற்குந் திண்ணனார் சுவாமிக் குப் பகலில் இறைச்சியூட்டியும், இரவில் நித்திரையின்றியும்

இந்தப் பிரகாரம் தொண்டுசெய்துவந்தார். சிவகோசரியாரும் தினமும் வந்து இறைச்சியிருப்பதைக்கண்டு சுத்திசெய்து அருச்சித்து, "என்னுடைய நாயகனே! இக்குற்றத்தைச் செய்தாரைக் காணேன்; உம்முடைய திருவருளால் நீக்கியருளவேண்டும்" என்று வேண்டினார்.

ஐந்தாநாள் இரவு காளத்திநாதர் சிவகோசரியாருக்குக் கனவிலே தோன்றி "அப்பனே! நீ அவனை வேடுவன் என்று நினையாதே; அவனுடைய உருவமும் செய்கையும் அன்பே; அவனுடைய அறிவு நம்மை அறியும் அறிவே; அவனுடைய அன்பினாலாகிய செய்கைகளை உனக்கு நாளைக்குக்காட்டுவோம்; நீ ஒளித்திருந்து பார்; உன் மனக்கவலையை நீக்குதி" என்றுகூறி மறைந்தருளினார். சிவகோசரியார் மறுநாள் சுவாமியை அருச்சித்து அவர்க்குப்பின்பாக ஒளித்திருந்தார். திருக்காளத்திநாதர் திண்ணனாருடைய அன்பு முழுதையும் சிவகோசரியாருக்குக் காட்ட விரும்பித் தமது வலத்திருக்கண்ணினின்றும் உதிரம்பாயச் செய்தார். வேட்டையாடி இறைச்சியும் மலரும் நீரும் கொண்டுவரும் திண்ணனார் உதிரம் சொரிதலைக்கண்டு, திருமஞ்சனம் சிந்த, இறைச்சி சிதற, புஷ்பங்கள் முடியினின்றுஞ் சோர, நிலத்தில் பதைத்து வீழ்ந்தார். இறந்தவர்போன்று கிடந்தார். சுவாமிக்குத் தீங்குசெய்தவர் யாவரோ என்று எங்கும்பார்த்தார். பின் பெருமானைக் கட்டிக்கொண்டு கண்ணீர்வாரக்கதறினார். பின் ஒருவாறு பிரிந்து வேடர்கள் புண்ணைத்தீர்க்கின்ற பச்சிலைகளைப் பிடுங்கிக் கொண்டுவந்து திருநேத்திரத்திலே பிழிந்துவிட்டார். அதினால் இரத்தம் தடையாகாமை கண்டு, சிறிது ஆலோசித்தார். ஆலோசிக்க "ஊனுக்கு ஊனிடல் வேண்டும்" என்னும் பழமொழி அவர்கருத்திலே வந்தது. உடனே அவர் மனமகிழ்ச்சியோடும், திருமுன்னே இருந்து, அம்பினால் தம்முடைய கண்ணைத்தோண்டி முதல்வருடைய கண்ணில் அப்பினார். அப்ப, இரத்தம் நிற்பதைக் கண்டார். உடனே சந்தோஷம் பொருந்திக் குதித்துப் பாய்ந்து கூத்தாடி நின்றார். காளத்திநாதர் சிவகோசரியாருக்குத் திண்ணனாருடைய அன்பைப் பின்பும் காட்டத் திருவுள்ளங்கொண்டு தமது இடக்கண்ணினும் குருதிபாயச்செய்தார். அதைக்கண்ட திண்ணனார்ஏங்கிப் பின் ஒருவாறுதெளிந்து, "இதற்கு அஞ்சேன்,

மருந்து கைகண்டேன்; இன்னும் ஒரு கண்ணுண்டு; அதை இடந்து அப்பி இதனைத் தீர்ப்பேன்'' என்று நினைத்துத் தம்முடைய கண்ணைத் தோண்டியபொழுது, சுவாமியுடைய கண் இவ்விடத்து இருக்கிறது என்று அறியும்பொருட்டு, இடக்காலை அவர் கண்ணில் அருகே ஊன்றி, மனவிருப்போடும் தம்முடைய கண்ணைத் தோண்டும்படி அம்பை ஊன்றினார். திண்ணனார் கண்ணிலூன்றத் தேவதேவர் சகியாதவராகி, "நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என்னன்புடைத்தோன்றல் நில்லு கண்ணப்ப!'' என்று அருளிச்செய்து, கண்ணைத்தோண்டும் கையை இலிங்கத்திற்றோன்றிய திருக்கரத்தினாலே பிடித்தருளினார். சிவகோசரியார் இந்த அற்புதங்களைக் கண்டு சிவனை வணங்கினார். அந்தக்காலம் முதலாக இறைவர் கூறியபடியே அவருக்குக் கண்ணப்பர் என்னுந் திருநாமம் வழங்குகின்றது. சிவபெருமான் பேரன்புள்ள திண்ணனாருடைய கரத்தைத் தமது திருக்கரத்தினாலே பிடித்துக்கொண்டு "நீ நமக்கு வலப்புறத்தில் நில்'' என்றருளிச்செய்தார்.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

(திருநேரிசை.)

காப்பதோர் வில்லு மம்புங் கையதோ ரிறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புத் தொட்டுத் தூயவாய்க் கலச மாட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய குருதிநீ ரொழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கைவீ ரட்ட னாரே.

சோமேசர் முதுமொழி வெண்பா.

ஊனுக்கூ னென்னு முரைகண் டுவந்தனரே
தூநற்சீர்க் கண்ணப்பர் சோமேசா—வானதனாற்
கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

---

## ௧௫. திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் ஞானப்பாலுண்டது.

சோழநாட்டிலே, சீகாழி என்னுந் திருத்தலத்திலே, பிராமண குலத்திலே, கவுணியர் கோத்திரத்திலே, சிவபாதவிருதயர் என்பவர் வைதிக சைவப்பற்று மிக உடையராயிருந்தார். அவர்

சமணம் புத்தம் முதலிய புறப்புறச்சமயப் பொய் மிகுத்து, அரிய வேதவொழுக்கம் அருகிவருதலைநோக்கி, உளம் வருந்தி, பரசமயங்களை நிராகரித்துச் சைவசமயத்தைத் தாபனஞ் செய்தற்குரிய ஒரு புத்திரரைப் பெறத் தவஞ்செய்வாராயினார். அத்தவங் காரணமாகத் தோணியப்பரது திருவருளினாலே, சிவபாதவிருதயரது மனைவியாராகிய பகவதி அம்மையாரது திருவயிற்றிலே, திருநீற்றினொளி விளங்கும்படி ஒருபுத்திரர் திருவவதாரஞ்செய்தருளினார். திருவவதாரஞ்செய்த புத்திரர் தமது மூன்றும் ஆண்டிலே, ஒருநாள் திருக்கோயிலிலுள்ள திருக்குளத்திலே நீராடச்சென்ற தந்தையோடு அழுதுகொண்டு பின்சென்றார். தந்தையார் அவரை அக்குளக்கரையிலே இருத்தி நீரில்மூழ்கி, சிவனைத் தியானித்திருந்தார். அப்போது பிள்ளையார் திருத்தோணிக் கோபுரத்தைப் பார்த்து "அம்மே! அப்பா!" என்று அழைத்தழைத்துக் கண்களினின்று நீர் ததும்ப, கைகளைப் பிசைந்து, அதரம் துடிப்ப அழுவாராயினார்.

அப்பொழுது திருத்தோணியப்பர் அவருக்குத் திருவருள் புரியும்படி அம்மையாரோடு இடபவாகனத்தில் எழுந்தருளிப் பொய்கையின் மருங்கை அணைந்தார். அழுகின்ற பிள்ளையாரைச் சிவபெருமான் கிருபைசெய்து, உமாதேவியாரைப் பார்த்து, "உன்னுடைய தனங்கள் பொழிகின்ற பாலாகிய அமுதத்தைப் பொன்வள்ளத்திற் கறந்து ஊட்டுதி" என்றார். அம்மையார் தமது ஞானத்திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்திலே கறந்து கண்ணீர்துடைத்துப் பிள்ளையாருடைய கையிலே கொடுத்து ஊட்ட, தோணியப்பர் அவருடைய அழுகை தீர்த்து ஆண்டருளினார். பிள்ளையார் எல்லா உலகங்கட்கும் இருமுதுகுரவராகிய இறைவன் இறைவி இருவராலும் ஆட்கொள்ளப்பெற்றமையால் "ஆளுடைய பிள்ளையார்" எனவும், சிவஞானசம்பந்தம் பெற்றமையால் "திருஞானசம்பந்தப்பெருமான்" எனவுந் திருநாமம் உடையவராயினார்.

சிறிது நேரத்திலே சிவபாதவிருதயர் தாம் செய்யும் நியமங்களைமுடித்துக் கரையேறித் திருஞானசம்பந்தப் பிள்ளையாரைப் பார்த்து, "நீ யார்தந்த பாலடிசிலையுண்டாய்?" என்றுகோபித்து "எச்சில்கலக்க உனக்கு இப்பாலூட்டினவரைக் காட்டுவை"

என்று தமது கையில் ஒரு கோலை எடுத்து ஓச்சினார். சம்பந்தப் பிள்ளையார் ஆனந்தபாஷ்பம் பொழிந்து, தமது திருமுடியின் மேல் எடுத்தருளிய ஒரு திருக்கைவிரலினாலே சுட்டி, ஆகாயத்தில் உமாதேவிசமேதராய் இடபவாகனத்தில் எழுந்தருளிய சிவபிரானைக்காட்டி,

தோடுடையசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வ
னேடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

(பண் — நட்டபாடை.)

என்னும் முதற்றிருப்பாடலையுடைய பதிகத்தைப் பாடியருளி எதிரே தொழுது நின்றார். தேவர்கள் சிவபெருமானுடைய திருவருளை வியந்து மலர்மழை பொழிந்தார்கள். சிவகணநாதர்கள் "அர அர" என்று துதித்தார்கள். சிவபெருமான் உமாதேவியாரோடும் திருத்தோணி என்னும் ஆலயத்துக்கு எழுந்தருளினார்.

---

## ௧௬. பாண்டியன் சுரந்தீர்த்தது.

கூன்பாண்டியராசன் முன்செய்த தீவினையினாலே, சமணர்களுடைய துர்ப்போதனையை மெய்யென்று துணிந்து, சத்திய மார்க்கமாகிய சைவத்தைவிட்டு, அசத்தியமார்க்கமாகிய ஆருகதமதத்திற் பிரவேசித்தான். அரசன் ஆருகதனானபடியால் அந்நாடு முழுவதும் ஆருகதமாகிய இருண் மூடிற்று. பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியாரும், மந்திரியாகிய குலச்சிறை நாயனாருமாகிய இருவர் மாத்திரம் சைவராயிருந்தார்கள். இருக்குங்காலத்திலே சைவசமயாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய மகிமைகளையும், அவர் வேதாரணியத்துக்கு எழுந்தருளி வருதலையும் கேள்விப்பட்டு, அளவிறந்த மகிழ்ச்சியோடு சில பரிசனங்களை நாயனாரிடத்துச்செல்லும்படி அனுப்பினார்கள். அனுப்பப்பட்ட பரிசனங்கள் திருமறைக்காட்டையடைந்து சுவாமிகள் இருக்குந் திருமடத்தையணைந்து அவரை வணங்கினார்கள். பிள்ளையார் அவர்களை நோக்கி "மங்கையர்க்கரசியும் குலச்சிறையாரும் க்ஷேமமாய் இருக்கின்ற

னாரா?" என்று வினவியருளினார். அவர்கள் "ஆம்" என்று சொல்லிப் பின் "குருமூர்த்தியே! பாண்டியராசனும் நாட்டாரும் சமணப்பாவிகளது போதனையினால் ஆருகதமதப் பிரவேசஞ் செய்தார்கள். மங்கையர்க்கரசியாரும் குலச்சிறைநாயனாரும் அதைத் தேவரீருக்கு விண்ணப்பஞ் செய்யும்படி அடியேங்களை அனுப்பினார்கள்" என்று பிரார்த்தித்தார்கள்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அதுகேட்டு மதுரைக்குப்போக உடனே புறப்பட்டார். திருநாவுக்கரசு நாயனார் அதனையறிந்து சம்பந்தப்பெருமானை நோக்கி, "நீரோ சிறுபிள்ளை; சமணரோ பாதகத்துக்கு அஞ்சாதவர்கள்; ஆதலால் அங்கே போதல் கூடாது; உமக்குக் கிரகங்களும் இப்போ வலியில" என்று கூறித்தடுத்தார். "சமணர் செய்த கொடுந்துன்பங்களுக்கெல்லாந் தப்பிய அப்பரே! சிவனருள் இல்லாதவர்போல் நீர் இவ்வாறு சொல்வதென்? கிரகம் நட்சத்திரம் முதலியவெல்லாம் சிவாஞ்ஞைப்படி நடப்பனவே; பரமசிவன் நம்முடைய சிந்தையே கோயில்கொண்டு இருத்தலினால் நமக்குத் தீங்குவராது" என்று சொல்லிக் கோளறுபதிகம் ஓதி அப்பமூர்த்தியை உடன்படுத்திக்கொண்டு புறப்பட்டார்.

(பண்—பியந்தைக்காந்தாரம்)

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல வவைநல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

பின்னையார் வேதாரணியேசுரரை வணங்கி, விடைபெற்று, அவரது திருமேனியைச் சிந்தித்து, பரசமய கோளரிவந்தார்; சமணசமயமாகிய இருள்கெட உதித்தஞானசூரியர் வந்தார் என்று சின்னங்கள் ஒலிக்க மதுரையை அடைந்தார். குலச்சிறைநாயனார் மதுரைக்குப் புறத்திலே போய் எதிர்கொள்ள, பாண்டிமாதேவியார் சொக்கநாதரை நமஸ்கரித்து ஸ்ரீ ஞானசம்பந்தப்

பெருமானது நல்வரவையேற்று நின்றார். எதிர்கொண்டு நின்ற மந்திரியார் அடியார் கூட்டத்தை நெடுந்தூரத்திலே கண்டு ஆனந்தபரவசராய் நிலத்திலே விழுந்துகிடந்தார். அதனை அறிந்த பிள்ளையார் சிவிகையினின்று மிறங்கித் தமது அருமைத்திருக்கரங்களால் குலச்சிறையாரைப்பற்றி எடுத்தருள்செய்தார். குலச்சிறையார் வணங்கி நின்று "அடியேங்கள் செய்த தவப்பயனே! அரசனும் இந்நாடும் விபூதிப் பிரகாசத்தினாலே விளங்கும் மேன்மையைப் பெற்றோம்; பாண்டிமாதேவியார் தேவரீரை எதிர்கொள்ளுமாறு அடியேனை ஏவினார்" என்று விண்ணப்பஞ்செய்தார்.

திருஞானசம்பந்த சுவாமிகள் திரு ஆலவாயை அணைந்து கோயிலை வணங்கிப் பதிகம்பாடித் திருமுன்றிலை அடைந்தார். அப்பொழுது பாண்டிமாதேவியார் கண்களினின்றும் நீர்சொரிய "அடியேனும் அடியேனது நாயகரும் செய்ததவம் என்" என்று சொல்லிப் பிள்ளையாரை வணங்கினார். பிள்ளையார் திருவருள் செய்து, குலச்சிறைநாயனார் திருமடங்காட்ட அதில் எழுந்தருளி இருந்தனர்.

பிள்ளையார் எழுந்தருளிவரக்கண்ட சமணர்கள் பாண்டிய ராசனை அடைந்து, "சீர்காழியிலிருக்கும் ஒரு பிராமணச் சிறுவன் சிவனிடத்தில் ஞானம் பெற்றவனும்; எங்களை வெல்ல அவன் வந்திருக்கின்றான்" என்றார்கள். பாண்டியன் "இதற்கு நாம் யாது செய்வோம்?" என்று சொல்ல, சமணர்கள் "அப்பிராமணப்பிள்ளை இருக்கிற மடத்திலே மந்திரத்தினாலே தீமூளச் செய்வோமாயின், அவன் இங்கு இராமற் போய்விடுவான்" என்றார்கள். பாண்டியன் அது கேட்டு "அங்ஙனமே செய்யுங்கள்" என்று சொல்லி அவர்களைப் போக்கினான். சமணர்கள் சுவாமிகள் எழுந்தருளியிருக்குந் திருமடத்தில் அக்கினி பற்றும்படி மந்திரஞ்செபித்தார்கள். திருவைந்தெழுத்தை உச்சரிக்கும் மகான்கள் பார்க்குந் திக்கிலும் வேறு மந்திரங்கள் பலிக்குமா? திருமடத்திலே தங்கள் மந்திரம் பலியாமையைக்கண்ட சமணர்கள் நெருப்பைக் கொண்டுபோய் மடத்திற்கொழுத்தினார்கள். அது வெளிப்படுதலும் பரிசனர்கள் அக்கினியை அவித்து நீக்கி, பிள்ளையாருக்கு விண்ணப்பஞ் செய்தார்கள். நாயனார் இத்தீமை பாண்டியனால் வந்தது, என்று திருவுள்ளங்கொண்டு,

"செய்ய னேதிரு வாலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமய ணர்கொழு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே."

என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

திருப்பதிகம் பாடியருளியவுடனே அக்கினிவெப்பம் போய்ப் பாண்டியனை அடைந்தது. அரசனுக்கு வெப்புநோயடுத்ததைப் பாண்டிமாதேவியாரும் மந்திரியாருங் கண்டு வைத்தியரை அழைத்து மருந்துகள் செய்வித்தும் நோய் தீர்ந்திலது. சமணர்களும் தங்கள் மந்திர ஔடதங்களினாலே நோய் மாறாமை கண்டு வருந்தினார்கள். பாண்டிமாதேவியாரும் மந்திரியாரும் "திருஞானசம்பந்தசுவாமிகளுக்குச் சமணர்செய்த தீமையினாலேயே இந்த வெப்புநோயுமக்கு அடுத்தது. அந்தத் திருஞானசம்பந்தமூர்த்திகள் திருவருட்பார்வை செய்யின் உமக்கு வெப்புநோயேயன்றிப் பிறவிநோயும் தீரும்" என்றார்கள். பாண்டியன் இவ்விருவரையும் நோக்கி, அந்தத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரை இங்கே அழையுங்கள்; என்னுடைய நோயை நீக்கி வென்றவர் பக்கஞ் சேர்வேன்" என்றான்.

பாண்டிமாதேவியாரும் மந்திரிமாரும் நாயனாருடைய மடத்தை அடைந்து மிக்கசோகத்தோடு திருப்பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தார்கள். அதுகண்டு நாயனார் அவர்களைத் திருக்கரத்தால் எடுத்து, "அன்பர்களே! உங்களிடத்து யாதாயினும் தீங்குண்டா?" என்று வினவினார். அவர்கள் "அரசனுக்கு வெப்புநோய்வந்தது. அதனை நீக்கவேண்டும்" என்று வணங்கினார்கள். நாயனார் "அஞ்சவேண்டாம்" என்று கிருபைசெய்து, சொக்கநாதசுவாமியை வணங்கி அருள்பெற்று, பாண்டியனது கோயிலுக்கு எழுந்தருளினார். பாண்டியன் பிள்ளையாரைக்கண்டவுடன் கைகூப்பி, ஒரு இரத்தினாசனத்தைக் காட்ட அதில் வீற்றிருந்தனர். அதுகண்ட சமணர்கள் தங்கள் சமயநூலை எடுத்துச் சொல்லிக் குரைத்தார்கள். அரசன் "உங்கள்தெய்வத்தன்மையை நீங்களும் இச்சிவனடியாரும் எனது சுரத்தைத் தீர்த்தலிலே காட்டுங்கள்" என்றான். அப்பொழுது சமணர்கள் அரசனது அனுமதிப்படி அவனது இடப்புறத்தைப் பீலியினாலே தடவி

னார்கள். வெப்புநோய் வளர்ந்தது. அரசன் பிள்ளையாரை நோக்கினான். அவர் அந்நோக்கங்கண்டு, "மந்திரமாவது நீறு" என்னுந் திருப்பதிகம்பாடி அவனுடைய வலப்பாகத்தை விபூதியினாலே தடவினார். அவ்வலப்பாகம் வெப்பு நீங்கிற்று. இடப்பாகத்து வெப்புநோய் முன்னையினும் இருமடங்காகப் பெருகியது. சமணர்கள் செருக்கழிந்து வெப்பைத் தீர்க்கமாட்டாது ஆரத்தில் நின்றார்கள். பாண்டியன் சமணர்களை நோக்கி, "நீங்கள் தோற்றீர்கள்; என்னைவிட்டுப் போங்கள்" என்றுசொல்லி நாயனாரை நோக்கி, "சுவாமீ! எனது இடப்பாகத்து வெப்பையும் நீக்கியருளுக" என்று வேண்டினான். அவர் முன்போல விபூதியிட்டு இடப்பாகத்தையுந் தடவினார். பாண்டியன் சுரம்முழுதும் நீங்கி, சயனத்தைவிட்டெழுந்து, திருஞானசம்பந்தப்பெருமானது திருவடிகளை வணங்கி "அடியேன் உய்ந்தேன், உய்ந்தேன்" என்றான். மங்கையர்க்கரசியாரும் குலச்சிறைநாயனாரும் மிக்க களிப்புற்றார்கள்.

திருநீற்றுப் பதிகம்.

[பண்—காந்தாரம்.]

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

---

## ௧௭. அப்பூதியடிகள் நாயனார்.

சோழநாட்டுத் திங்களூரிலே சிவபக்தியுள்ளவரும் பொய்முதலிய குற்றங்கள் அற்றவரும் ஆகிய அப்பூதியடிகள் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சைவசமயத்தாபனாசாரியராகிய திருநாவுக்கரசுநாயனாருடைய வடிவைத் தாம் காணாதவராயிருந்தும், அவரது சிவபக்தியைக்கேள்வியுற்று, அவரிடத்தே மிக்க அன்புள்ளவராகி, தம்முடைய மக்களுக்கும் பொருள்களுக்கும் திருநாவுக்கரசு என்னும் பெயரையே வைக்கும் நியதியுடையவராயிருந்தார். இன்னும் அவர் திருநாவுக்கரசுசுவாமிகள் பெயரால் மடங்கட்டுதல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல் முதலிய அறங்களைச் செய்துவந்தார்.

வருங்காலத்திலே திருநாவுக்கரசுநாயனார் திருப்பழனம் என்னும்பதியைப் பணிந்து திங்களூரின்வழியாக வரும்பொழுது வழியிலுள்ள குளிர்ந்த தண்ணீர்ப்பந்தலை அடைந்து, அதனைப் பார்த்துச் சிந்தை வியப்புறுகையில் திருநாவுக்கரசு என்னும் பெயர் எவ்விடத்திலும் வரைந்திருப்பதைக்கண்டார். வாகீசர் அதனைக்கண்டு "இப்பெயரையிட்டு இப்பந்தர் அமைத்தவர் யாவர்?" என்று வினவினர். அதனை அறிந்தவர்கள் "திருநாவுக்கரசு என்னும் பெயரால் அப்பூதி அடிகள் என்னும் பிராமணர் எங்குமுள்ள சாலைகளையுங் குளங்களையுஞ் செய்தமைத்தார்" என்றார்கள். திருநாவுக்கரசர் அதுகேட்டு "அவர் எவ்விடத்தார்?" என்று வினவினர். "அவர் இவ்வூரிலுள்ளவர்; அவர் மனையுஞ் சமீபத்திலுள்ளது" என்றார்கள். திருநாவுக்கரசு சுவாமிகள் அவரது வீட்டை அடைந்தார். அப்பூதியடிகள் கடிதுவந்து வணங்கினார். அவர் வணங்குமுன் வாகீசரும் வணங்கினார். அப்பொழுது அப்பூதியடிகள் "தேவரீர் அடியேனது மனையில்வர முடிவில் தவஞ்செய்தேன் போலும்" என்றார். திருநாவுக்கரசுநாயனார் "நாம் திருப்பழனத்தில் சிவபிரானை வணங்கி வருகின்றோம்; வழியில் நீர் வைத்த தண்ணீர்ப்பந்தருங் கண்டு, நீர் செய்கின்ற பிற அறங்களையும் கேட்டு வந்தோம்; சிவனடியார்க்கு நீர் வைத்த தண்ணீர்ப்பந்தலில் உமது பெயரை எழுதாது வேறொருபேர் எழுதவேண்டிய காரணம் என்னை? கூறும்" என்று வினவினர். அப்பூதியடிகள் "சமணப்பதகரும் மன்னனும் செய்த சூழ்ச்சிகளையெல்லாம் திருத்தொண்டினுறைப்பாலேவென்ற திருநாவுக்கரசரது திருப்பெயரோ வேறொருபெயர்" என வெகுண்டு கூறி, "வாகீசரை அறியாதார் உளரோ? சிவவேடத்தோடு இங்ஙனங் கூறினீர்; நீர்யாவர்? இயம்பும்" என்றார். திருநாவுக்கரசர் அவரது பக்தியின் றன்மையை நோக்கி, "யான் சூலைநோய் நீங்கித் தடுத்தாளப்பெற்ற சிறியேன்" என்றார். அப்பூதியார் வாகீசர் கூறியதுகேட்டு, கைகூப்பி ஆனந்தபாஷ்பம் பொழிய உரை தடுமாறித் தரையில் வீழ்ந்து வணங்கினார். பின்னர்த் தமது மனைவியாரையும் மக்களையும் சுற்றத்தாரையும் கொண்டுவணங்குவித்து, ஆசனத்திருத்திப் பூசைகளைச் செய்தார். செய்துமுடிந்தபின் திருவமுது செய்யுமாறு விண்ணப்பஞ்செய்தார். அவரும் அதற்கு உடன்பட்டார். அப்பூதியடிகளும் அறுசுவை பொருந்

திய கறிகளையும், அமுதையும் உண்டாக்கி, நாயனார் திருவமுது செய்தருளும்வண்ணம் தமது மூத்தமகனை மூத்ததிருநாவுக்கரசை வாழைக்குருத்துக் கொண்டுவரும்படி அனுப்பினார். புத்திரரும் "என்னுடைய தாய் தந்தையர் ஏவ இது செய்யப் பெற்றேன்" என்று விரைந்து தோட்டத்துட் புக்கு வாழைக் குருத்தை அரியும்பொழுதில், பாம்பொன்று கையிற் றீண்டியது. சிறுவன் உடனே பதைபதைப்போடு சர்ப்பம் கடித்த வேகத்தால் விழுமுன்னர், விரைந்து சென்று குருத்தைக் கொடுப்பேன் என்று ஓடிவந்து, குருத்தைத் தாயார் கையிற்கொடுத்து, மயங்கி விழுந்திறந்தான்.

தளர்ந்து விழுந்தமகனைத் தந்தையும் தாயும் நோக்கி, விடத்தினால் இறந்தானென்ற துக்கமின்றி, தொண்டரை அமுது செய்வித்தலையே கருத்தாகக்கொண்டு சவத்தை மறைத்து, திருநாவுக்கரசுநாயனாரை அடைந்து வணங்கித் திருவமுது செய்யுமாறு வேண்டினர். திருநாவுக்கரசுநாயனார் எழுந்துசெல்ல, அவருடைய பாதங்களை விளக்கி, வேறோர் ஆசனத்திலேற்றினார். திருநாவுக்கரசுநாயனார் அப்பூதி அடிகளுக்கும் மனைவியாருக்கும் விபூதி நல்கிப் புதல்வர்களுக்கும் கொடுக்கும்பொழுது, அப்பூதியடிகளை நோக்கி, "விபூதி சாத்துவதற்கு உமது மூத்த புத்திரனையுங் காட்டும்" என்று கூறியருளினார். அப்பூதியடிகள் நிகழ்ந்ததொன்றையுங் கூறாராய், "இப்போது அவன் இங்கு உதவான்" என்றார். திருநாவுக்கரசுநாயனார் "அவன் என்ன செய்தான்? விரித்துக்கூறும்" என்று கூறினார். அப்பூதி அடிகள் வாகீசர் திருவமுதுசெய்வது பிழைத்துவிடுமே என்று கூறாதிருந்தாராயினும், பெரியவர் வினவும்பொழுது உண்மையே கூறவேண்டும் என்னும் சீலத்தால், தமது புத்திரருக்கு உற்றதைக் கூறினார். திருநாவுக்கரசர் அதுகேட்டு "நீர் செய்தது நன்று; வேறுயார் இப்படிச் செய்வார்" என்று முன் எழுந்துசென்று, ஆவிநீங்கிய சவத்தை நோக்கி, சிவபெருமான் திருவருள் செய்யும்வண்ணம்

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே. [பண்-இந்தளம்]

என்னும் முதற் செய்யுளையுடைய தேவாரப்பதிகத்தைப் பாடியருளி விஷத்தை நீக்கினார். தீபோன்ற விடம் நீங்க உய்ந்த பிராமணச் சிறவனும், உறக்கநீங்கி விரைந்தெழுபவனைப்போன்று, திருநாவுக்கரசுநாயனாருடைய பாதங்களை வணங்க, அவர் விபூதி கொடுத்தருளினார். அப்பூதி அடிகளும் மனைவியாரும் ஆவிபெற்ற பிள்ளையைக் கண்டு வாகீசரது திருத்தொண்டைப் புகழ்ந்து, அன்பர் அமுது செய்தருளுவதற்குச் சிறிது இவன் இடையூறு செய்தானென்று சிந்தை நொந்தார்கள். அவர்களுடைய வாட்டத்தை நாயனார் கண்டு, மனையை அடைந்து, அப்பூதிநாயனாரோடும் அவர் புத்திரர்களோடும் ஒருங்கிருந்து திருவமுதுசெய்தருளினார். அப்படிச் சிலகாலம் அங்கிருந்து திருப்பழனத்துக்குப் போயினார். அப்பூதியடிகள் நாயனார் வாகீசரதுதிருவடிகளைச் சிந்தித்துச் சிவபெருமானுடைய பாதநீழலை அடைந்தார்.

சோமேசர் முதுமொழி வெண்பா.

அப்பூதி யார்மறைத்தும் வாகீச ரக்கரவைத்
துப்பா னறிந்தனரே சோமேசா—இப்புவியில்
ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

---

## கஅ. சுந்தரமூர்த்திநாயனார் முதலைவாய்ப்பட்ட பிள்ளையை மீட்டது.

சமயாசாரியர் நால்வருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திநாயனார் திருவாரூரிலே இருக்குங் காலத்திலே, தமது தோழராகிய சேரமான்பெருமாள் நாயனாரைக் காணவிரும்பி, மலைநாட்டை அடைவதற்கு விருப்புடன்சென்று அவிநாசியை அண்மினார். அப்பொழுது அவ்வூர்ப்பிராமணவீதி ஒன்றில் ஒரு வீட்டில் அழுகை ஒலியும், அதற்கெதிரான மற்றொரு வீட்டில் மங்கல ஒலியும் எழுதலை நாயனார் கண்டு, அங்கே உறைகின்ற பிராமணர்களை நோக்கி "அழுகை ஓசையும், மங்கல ஓசையும் ஆகிய இரண்டும் உடனே நிகழ்வது என்னை?" என்று வினவியருளினார். அவர்கள் "ஐந்து வயதுவந்த பிராயத்தையுடைய இவ்விரண்டு வீட்டுப் பிள்ளைகள் இருவரும் ஒருநாள் அருகிலுள்ள ஒருமடுவில் நீராடி

ஞர்கள். அவருள் ஒருவனை முதலை விழுங்கிற்று; மற்றவன் தனது வீட்டை அடைந்தான்; அடைந்தவனுக்கு இன்று உபநயனம் தரிக்கின்றார்கள். ஆதலால் அவ்வீட்டில் மங்கல ஒலியும், அது கண்டு எதிர்வீட்டில் தமது புதல்வனை நினைத்து ஆற்றாராய்ப் பெற்றோர் செய்யும் அழுகை ஒலியும் ஒரேகாலத்தில் எழுகின்றன" என்றார்கள். நாயனார் அது கேட்டு மிக இரங்கினர். அவருடைய வரவை அறிந்த பெற்றார்கள் மகிழ்ந்து, எதிர்வந்து திருப்பாதங்களில் வணங்கினார்கள். நாயனார் வணங்கியவர்களை நோக்கி "புத்திரனையிழந்தவர்கள் நீவிர்தாமா?" என்றுகேட்டருளினார். அதற்கு மறையோனும் மனைவியும், நமதுபுத்திரனை முதலை விழுங்கியது முன்னாளில் நிகழ்ந்தது. இப்பொழுது அடியேங்கள் தேவரீரிடத்து வைத்த அன்பு பழுதாகாது தேவரீரை எழுந்தருளப்பெற்றோம்" என்றார்கள். சுந்தரமூர்த்திநாயனார் "இவர்கள் மைந்தனை இழந்த துயரத்தைமறந்து யான் வந்ததற்கே மனம் மழ்கிந்தார்கள், ஆதலால் இவர்கள் சிறுவனை முதலைவாயினின்றும் அழைத்துக்கொடுத்தே அவிநாசிப்பெருமானை வணங்குவேன்" என்றருளிச்செய்தார். அருளிச்செய்து "இவர்களுடைய புதல்வனை முதலை விழுங்கிய மடு எங்கே?" என்று வினவி அப்பொய்கையை அடைந்தருளி, அச்சிறுவனை அந்நாளிற் கவர்ந்த முதலை கொண்டுவருமாறு திருப்பதிகமெடுத்தருளினார்.

"உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா வாதியு மந்தமு மாயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே"

என்னும் நான்காவது திருப்பாட்டை ஓதி முடியமுன், இயமன் அப்புதல்வனுடைய உயிரைக் கொண்டுவந்து அவ்வாவியிலுள்ள முதலை வயிற்றினுள்ளே, சென்ற ஆண்டுகளின் வளர்ச்சிநிரம்பிய தேகத்துடன் புகுத்திவிட்டான், முதலை அம்மகனைக் கரையிற் கொணர்ந்து உமிழ்ந்தது. உடனே தாயானவள் தன் மகனை ஓடி எடுத்துக்கொண்டுவந்து நாயனாருடைய சேவடிக்கீழ் பிராமணனோடு விழுந்து வணங்கினாள். அப்பொழுது தேவர்கள் மலர்மழை பொழிந்தார்கள், பூமியிலுள்ளோர் அதிசயித்தார்கள். மறையவர் உத்தரீயங்களை வீசி ஆரவாரஞ்

செய்தார்கள், பின்னர் சுந்தரமூர்த்திநாயனர் அவிநாசியில் எழுந்தருளியிருக்கும் சிவனை வணங்கிச்சென்று, அப்பிராமணச் சிறுவனுக்கு உபவீததாரணஞ் செய்வித்து அவ்வீட்டில் மங்கல ஒலியை எழுவித்து உடனே மலைநாட்டுக்குச் செல்லுவாராயினர்.

---

## கசூ. மாணிக்கவாசக சுவாமிகள் புத்தரை வாதில் வென்றது.

சிவபெருமானுடைய திருவடிகளை ஒருபோதும் மறவாத ஒரு தபோதனர் சோழநாட்டு வளங்களைக்கண்டு சிதம்பரத் தைத்தரிசித்து, ஈழமண்டலத்து வளங்களைக்காணும்படி அங்கே போயினர். சென்ற தபோதனர் தாம் போயிருக்குமிடங்கடோறும் "பொன்னம்பலம் நீடூழி வாழுக" என்று உரைத்துவருவாராயினர். தபோதனர் அங்ஙனம் கூறுவதை ஈழதேச மன்னன் அறிந்து அவரை அழைப்பித்தான். தபோதனர் புத்தராசனை அடைந்து "பொன்னம்பலம் நீடூழி வாழுக" என்றுகூறிச் சமீபத்தில் இருந்தார். புத்தராசன் நீர் 'பொன்னம்பலம் என்று கூறியதின் கருத்தென்னை?' என்று வினவினன். தபோதனர் "சோழநாட்டிலே சிதம்பரம் என்னும் ஒருதலம் இருக்கின்றது; அச்சிதம்பரமே புவனங்கள் அனைத்தினுக்கும் முதற்கணுண்டான சிவத்தலமாம். அச்சிதம்பரத்திலுள்ள பொன்னம்பலத்திலே சிவகாமியம்மையார் காண, சபாநாயகர் சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்திய திருத்தம் செய்தருளுவார். ஆகையால் பொன்னம்பலம் என்றுச்சரிக்கின் எல்லாப்பாவங்களும் நீங்கிவிடும்" என்று கூறினர்.

ஈழதேசத்தரசனது அருகிலிருந்த புத்தகுரு அதுகேட்டு "யான் இப்பொழுதே சிதம்பரத்தை அடைந்து அங்குள்ள சைவரோடு தருக்கஞ்செய்து, வெற்றி கொள்வேன்; கனக சபையைப் புத்தருடைய பள்ளி என்று சொல்லும்படி செய்வேன்" என்றுகூறித் தனது சிஷ்யவருக்கத்தோடு சிதம்பரத்தின் எல்லையை அடைந்து அங்குள்ள திருப்புலீச்சரம் என்னும் ஆலயத்துள்ள ஒரு மண்டபத்திலிருந்தான். அவன் இருக்க, முன்னரே தனது ஊமைமகளோடுசென்ற ஈழராசனும் அவனை

வணங்கி இருந்தான். சிவபெருமானது கோயிற்றொண்டு செய்பவர்கள், "புத்தனே! விரைந்து இவ்விடத்தை விட்டுப்போ" என்றார்கள். புத்தகுரு "எமது கடவுளே முதற்கடவுளென்று தாபித்தல்லது செல்லுவதில்லை" என்றான். இச்செய்தியைக் கோயிற்றொண்டு செய்பவர்கள் தில்லைவாழந்தணர்களுக்கும் ஏனையோருக்கும் அறிவித்தார்கள். தில்லைவாழந்தணர்கள் அவனது வரவை ஆக்ஷேபித்து, சோழராசனுக்கு ஒரு நிருபம் அனுப்பினார்கள். மற்றையோருக்கும் சிதம்பரதரிசனத்துக்கு வருமாறு நிருபங்கள் அனுப்பினார்கள். பின்னர் தில்லைவாழந்தணர்கள் புத்தனைநோக்கி, இன்றொரு தினமும் இங்கே இரு; நாளைக்கு நாங்கள் உங்கள் இழிவைக் காட்டுவோம் என்று கூறித் தங்கள் மனைகளிற் சென்று துயின்றார்கள்.

சிவபெருமான் அவர்களது கனவிலே தோன்றித் "திருவாதவூரன் சிதம்பரத்தின் எல்லையில் தவஞ்செய்துகொண்டிருக்கின்றான். அவனை அழைத்துக்கொண்டு வாருங்கள்; அவன் தருக்கநூல் முறைப்படி புத்தரை வாதில் வெல்வான்" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினர். எல்லாரும் ஒருங்குகூடித் திருவருட்டிறத்தைத் துதித்து, சமயாசாரியராகிய மாணிக்கவாசக சுவாமிகள் எழுந்தருளியிருக்கும் பன்னசாலையை அடைந்தார்கள். அடைந்த அந்தணர்கள் சபாநாயகர் சொப்பனத்தில் அருளியவற்றை விண்ணப்பித்தார்கள். திருவாதவூரடிகள் அதனைக்கேட்டு, அவர்களோடு விரைந்து சென்று, நடராசரை வணங்கி, புத்தர்களிருக்கும் மண்டபத்தை அடைந்து, ஓராசனத்தில் இருந்தார். சோழராசன் வேதாகமங்களில் வல்ல அந்தணர்களும், பல கலைகளில் வல்ல வித்துவான்களும், பௌராணிகரும் ஆகிய இவர்களுடன் வந்து, சிதம்பரத்தை வணங்கி, பின்னர் திருவாதவூரடிகளுடைய திருமருங்கிலிருந்தான்.

திருவாதவூரடிகள் புத்தனை நோக்கி, "மயக்கவாதங்களைப் போதிக்கும் புத்தகுருவே! நீ வந்த காரணம் யாது? கூறுதி" என்றார்.

புத்தன்:—"நமது கடவுளல்லாமல் வேறு கடவுளில்லையென்று வாதித்து வென்று கனகசபையிலே புத்தனைத் தாபிக்க வந்தேன்" என்றான்.

திருவாதவூரடிகள்:— "உனது கடவுளின் இலக்கணங்களையும் அவனடியை உயிரடையும் முறையையும் கூறுவாயாக" என்றார். புத்தன் தன் மதக் கொள்கைகளை எடுத்துக் கூறினான். திருவாதவூரடிகள் அக்கொள்கைகளையெல்லாம் நிராகரித்தருளினார்.

புத்தன்:—"உமது கடவுள் இலக்கணம் யாது? நீர் பெறும் முத்தியாவது என்னை?" என்று வினவினான்.

திருவாதவூரடிகள்:—"நமது கடவுள் கல்லால விருக்ஷநீழலிலே கையிற் செபமாலையோடு தக்ஷிணாமூர்த்தியாய் இருந்து உபதேசம் புரிந்தருளுவர். கனகசபையிலே அநவரத நடனம் புரிவர். திருமேனியில் அணியும் விபூதியையுடையவர். உமாதேவியைப் பாகத்திலுடையவர். அவர்தம் மகிமை இத்தன்மைத்தென்று நாம் சொல்ல எளிதோ?" என்று கூறி அப்பாலுஞ் சொல்லத் தொடங்கினார்.

புத்தன்:—உமது கடவுள் ஆலவிருட்சநீழலில் இருந்து உபதேசிப்பர் என்றீர். அவர் செபமாலையைக் கையிற்றாங்குவது தமக்குத் தியானிப்பதற்கு வேறு கடவுள் உண்டென்று கருதியா?

திருவாதவூரடிகள்:— நங்கடவுள் செபமாலையைத் திருக்கரத்திற்கொண்டு வீற்றிருத்தல் உலகத்திலுள்ளவர் அனைவரும் தவஞ்செய்து உண்மை ஞானத்தை அடைவதற்காம் என்று அறிந்துகொள். அச்செபமாலை படைக்கலவித்தைகளை மாணாக்கர்க்கு அன்புடன் பழக்கும் ஆசிரியர்களது கையிலுள்ள வாட்படை போலாகும் என்பதையும் நன்கு அறிந்துகொள்ளக்கடவாய்.

புத்தன்:—உமது கடவுள் நடனஞ் செய்வார் என்று கூறினீரே; தம்மினும் நல்லறிவுள்ளவர் இல்லாத சபையிலே தம்மிச்சைப்படி ஆடுபவருமுண்டா?

திருவாதவூரடிகள்:—நமது சிவன் விறகில் தீப்போலவும் பாலில் நெய்போலவும் உயிர்கடோறும் வியாபித்து ஐந்தொழில் செய்து அவைகளது ஆணவம்முதலிய பாசங்களைப் போக்கிப் பின்னர் மோட்சத்தைக் கொடுக்கும் ஒருஞானநாடக ஆசிரியன் என்பதை அறிந்துகொள்ளுதி.

புத்தன்:— நுமது கடவுள் விபூதியணிந்த மேனியுடையவர் என்று மேன்மையுடன் கூறி மகிழ்ந்தீர். அவர் தமது செவ்வொளி பொருந்திய திருமேனியிலும் பார்க்க விபூதி அதிசுத்தம் என்று கருதியோ அதனைத்தரித்தார்?

திருவாதவூரடிகள்:— நங்கடவுள் விபூதி தரித்தது ஆன்மாக்களது பிறவியை நீக்கும் பொருட்டென்றறியக்கடவை. அது தமது குழந்தைகளது நோயை நீக்கும்பொருட்டுத் தாய்மார் மருந்து உண்பதுபோல்வதாம்.

புத்தன்:— நுங்கடவுள் உமாதேவியாரை இடப்பாகத்திலுடையவரென்றீர். உமது கடவுள் இல்லறத்தை அனுக்கிரகிக்க, அவர் வழிப்பட்ட நீர் தவத்தை மேற்கொள்ளுவது அவம் அல்லவா?

திருவாதவூரடிகள்:— உலகத்துக்குப் போகமூட்டி வினையைத் தொலைத்தற்கே உமாதேவியாருடன் வீற்றிருந்தருளுகிறார். நமது கடவுள் யோகமுத்தி உதவுதற்கு யோகவடிவங் கொண்டார். அவரது உண்மை நிலையை நீ சிறிதும் அறிந்தாயில்லை.

திருவாதவூரடிகள் புத்தகுரு கேட்ட வினாக்களுக்கெல்லாம் இங்ஙனமாக விடைகூறி, சைவமத ஸ்தாபனஞ் செய்தருளினார். பின்னர் ஆசாரிய சுவாமிகள் நாமகளை நோக்கி, "சரஸ்வதியே! நீ இப்புத்தர்களது வாக்கிலிருந்து பொய்வார்த்தைகளைக் கூறுவிப்பதென்னை? நீ இப்பதிதர்களது நாவை விட்டகன்று சிவாஞ்ஞைப்படி போய்விடு" என்று கூறினார். அப்பொழுதே புத்தர்களது நாக்கினின்றும் சரஸ்வதி நீங்கினாள். புத்தர்கள் அனைவரும் ஊமைகளாயினர். ஈழமண்டலாதிபதி அருட்குன்றாகிய மாணிக்கவாசக சுவாமிகளை வணங்கி, "பேசவல்ல புத்தர்கள் ஊமர்கள் ஆயினார்கள். ஊமைப்பெண்ணாகிய என் மகளுக்கு வாக்கு வன்மை கைகூடுமாயின் நான் உமக்கு அடிமை" என்று விண்ணப்பஞ்செய்தான். திருவாதவூரர் அவளைச் சமீபத்திலிருத்தி "பெண்ணே, இங்கே இருக்கும் புத்தகுரு வினவிய வினாக்கட்கெல்லாம் நீயே நியாயவார்த்தை சொல்லுதி" என்று கூறியருளினார். அப்பொழுது புத்தனது, வினாக்களுக்கெல்லாம் கற்றுணர்ந்த பண்டிதர்களைப்போல உத்தரங் கூறினாள். நாயனார் அவ்வினா உத்தரங்களின் உண்மைப் பொருளைத் திருச்சாழல் என்னுந் திருவாச

னாகப் பாடியருளினார். ஈழமன்னன் விபூதிதரித்து, பஞ்சாக்கரம் ஓதி அடியவன் ஆயினன். பின்னர் அரசன் இப்புத்தர்கள் ஊமைத் தன்மை நீங்கவேண்டும் என்று பிரார்த்தித்தான். திருவாதவூரடிகள் மகிழ்ந்து அவர்கள்மீது கிருபாநோக்கஞ் செய்தருளினார். அவர்கள் ஊமைத்தன்மை நீங்கித் திருவாதவூரடிகளது திருமுன்னிலையை அடைந்து வணங்கி "குருமூர்த்தியே! அடியேங்களுக்கு விபூதி உருத்திராட்சங்களையும் காவிவஸ்திரத்தையும் தந்தருளுக" என்று வணங்கினார். திருவாதவூரடிகள் விபூதியை அவர்கட்கு அணிந்து, உருத்திராக்கமாலைகளைப் பூட்டிக் காவிவஸ்திரம் கொடுத்தருளினார். பின்னர் திருவாதவூரடிகள் சிதம்பரத்தை வணங்கிச் சிவயோகத்தில் எழுந்தருளியிருந்தார். புத்தசமய வேடத்தை நீக்கி விபூதிதரித்த சைவர்களும் அரசனும் சிதம்பரத்தையே தமது சனன ஊராகக்கொண்டு இருந்தார்கள்.

திருச்சாழல்.

தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ.

---

## உ0. மெய்கண்ட தேவர்.

புண்ணிய பூமியாகிய தமிழ்நாட்டின் ஒருபகுதியாகிய நடுநாட்டிலே, திருப்பெண்ணாகடத்திலே, பரம்பரைச் சைவ வேளாளகுல திலகரும், சிவபக்தி அடியார் பக்திகளிலும் கல்வி கேள்விகளிலும் சிறந்தவரும் ஆகிய அச்சுதர்களப்பாளர் என்னும் ஒருவர் இருந்தார். அவர் நெடுங்காலம் பிள்ளைப்பேறின்மையால், அதற்குரிய விரதாதிகளை எல்லாம் ஆதிசைவரும் சகலாகமபண்டிதர் என்னும் காரணப்பெயருடையவரும் தம்முடைய குலகுருவுமாகிய அருணந்தி சிவாசாரியர் உணர்த்த உணர்ந்து, அனுட்டித்து வந்தனர். வந்தும் சித்திபெறாது, பின்னும் அருணந்தி சிவாசாரியரிடத்து விண்ணப்பஞ்செய்தனர். சகலாகம பண்டிதர் உற்றுநோக்கி, தமிழ் வேதமாகிய தேவாரத் திரு

முறையை ஆசனத்தில் எழுந்தருளச்செய்து, அர்ச்சனை தூபதீப ஆராதனைகள் சமர்ப்பித்து, அத்திருமுறையிற் கயிறு சாத்தும்படி கட்டளையிட்டனர். உத்தரவின்படி அச்சுதர்களப்பாளர் நமஸ்கரித்துக் கயிறுசாத்தினர். திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருவெண்காட்டுப் பதிகத்துள்,

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

என்னும் திருப்பாசுரம் உதயமாயிற்று. அப்பாசுரத்தின் பொருளைச் சகலாகமபண்டிதர் உற்றுநோக்கி, "அன்பனே! உன் எண்ணம் நிறைவேறும். நீ திருவெண்காடு சென்று, அங்கேயுள்ள முக்குளதீர்த்தத்திலே நீராடி சுவேதாரணியப் பெருமானையும் அம்மையாரையும் பேரன்போடு வழிபட்டுவருவாயாக" என்றருளிச்செய்து அவருக்கு விடைகொடுத்தனர்.

அச்சுதர்களப்பாளரும் தமதாசிரியர் கட்டளையைச் சிரமேற்றாங்கி, தமது மனைவியாரோடும் திருவெண்காடு சென்று, முக்குளதீர்த்தத்திலே மூழ்கி, எம்பெருமானையும் பெருமாட்டியையும் விதிப்படி வழிபட்டு வருவாராயினர். அந்நாளிலே ஒருநாள் சுவேதவனப் பெருமான் கனவிலே தோன்றி, "அப்பனே! உனக்கு இப்பிறவியிலே பிள்ளைப்பேறு அரிதாயினும், நமக்கு மிக்க பிரீதியுடையதாயுள்ள தேவாரத்திருமுறையைச் சிறந்த பிரமாணமாகக் கொண்டு நீ ஒழுகுகின்றமையால், அத்தேவாரத்தைப்பாடிச் சைவசமயமே மெய்ச்சமயமெனப் பல அற்புதங்களால் நிலைநிறுத்திய திருஞானசம்பந்தன் போல்பவனாய், ஒரு சற்புத்திரன் இத் தமிழ்நாட்டார் உய்யும்படி தோன்றுவான்" என்றருளிச்செய்து மறைந்தனர்.

அச்சுதர்களப்பாளர் சிவபெருமான் தமக்கு அருள்செய்ததற்கு மகிழ்ந்து, அப்பெருமானை வழக்கம்போல் வழிபாடுசெய்துவந்தார். சிலகாலஞ் சென்றபொழுது அவரது மனைவியார் கருப்பவதியாயினர். பத்து மாதங்களும் நிரம்பவே சைவசமயந்தழைத்தோங்க ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ்செய்தார். அக்

குழந்தைக்குச் சுவேதவனப்பெருமாள் என நாமகரணஞ் செய்து, அச்சுதர்களப்பாளர் அருமையாய் வளர்த்துவந்தனர்.

சுவேதவனப்பெருமாள் பிறைமதிபோல்வளருநாளிலே அவரது நன்மாமனூர் திருவெண்ணெய் நல்லூரிலிருந்து வந்து குழந்தையைக் கண்டு மகிழ்ந்து, அவரைத் தமது இல்லத்தில் எடுத்துக் கொண்டுபோய்ப் பேரன்போடு வளர்ப்பாராயினர். சுவேதவனப்பெருமாள் இரண்டுபிராயத்திற்றானே மெய்யுணர்வின் முற்றுப்பேறுடையராய் எழுந்தருளியிருந்தார்.

அந்நாளிலே திருக்கைலாசமலையிலே கல்லாலயாநீழலிலே, தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த, சிவபெருமானிடத்து, சிவஞானபோதத்தை உபதேசம்பெற்ற திருநந்திதேவர்மரபிலே வந்த பரஞ்சோதிமுனிவர், திருவெண்ணெய்நல்லூர் வந்து, சுவேதவனப்பெருமானைக் கண்டு தீக்ஷைபுரிந்து, தாம் தமது குருவாகிய சத்தியஞானதரிசினிகள்பாற் கேட்டவாறே சிவஞானபோதத்தை விளங்க உபதேசித்து, அதனைத் தமிழ்நாட்டார் உய்யும்படி மொழிபெயர்த்துப் பொழிப்புரைக்குமாறு அருளிச்செய்து, மெய்கண்டதேவர் எனத் தீட்சாநாமஞ் சாத்திச் சென்றனர்.

மெய்கண்டதேவர் திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியிருக்கும் சுயம்புமூர்த்தியாகிய பொல்லாப்பிள்ளையாருடைய சந்நிதியில் சிவஞானபோதத்தைச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடித் தமிழ்நாடு உய்யும்வண்ணம் தாம் பெற்ற வடமொழிச் சிவஞானபோதத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பொழிப்புரையுஞ் செய்தனர். மெய்கண்டதேவர் ஆதிசைவராகிய திருத்துறையூர் அருணந்திசிவாசாரியர், திருவதிகை மனவாசகங்கடந்தார் முதலிய பக்குவர்களுக்கு உபதேசித்தருளி, நெடுங்காலம் சிவயோகத்திலமர்ந்து, திருவெண்ணெய்நல்லூரிலே, ஐப்பசி மாதத்துச் சுவாதிநட்சத்திரத்திலே சிவபெருமானோடு இரண்டறக் கலந்தனர்.

இவர்காலம் ஏறக்குறைய கூ௱ வருடங்களுக்கு முன் என்பர்.

சைவசித்தாந்த சந்தாநாசாரியர்கள்.

தக்ஷிணாமூர்த்தி
|
திருநந்திதேவர்
|
சனற்குமாரமுனிவர்
|
சத்தியஞானதரிசினிகள்
|
பரஞ்சோதிமுனிவர்

(மேற்கண்டோர்: அகச்சந்தாநாசாரியர்.)

|
மெய்கண்டதேவர்
|
அருணந்திசிவாசாரியர்
|
மறைஞானசம்பந்தசிவாசாரியர்
|
உமாபதிசிவாசாரியர்

(மேற்கண்டோர்: புறச்சந்தாநாசாரியர்.)

தாயுமானசுவாமிகள்.-

பொய்கண்டார் காணாப் புனிதமெனு மத்துவித
மெய்கண்ட நாதனருண் மேவுநா ளெந்நாளோ.

---

## உக. உமாபதிசிவாசாரியர்.

**சைவ**சித்தாந்த ஸ்தாபனாசாரியராகிய மெய்கண்டதேவர், தமக்குப் பரஞ்சோதிமுனிவர் உபதேசித்தருளிய சிவஞான போதப்பொருளைத் திருத்துறையூர் சகலாகம பண்டிதர் எனப்படும் அருணந்திசிவாசாரியருக்கு உபதேசித்தருளினார். அருணந்தி சிவாசாரியர் திருப்பெண்ணாகடத்தை ஜன்ம ஸ்தானமாகவுடைய மறைஞானசம்பந்தசிவாசாரியருக்குச் சிவதீக்ஷைசெய்து சிவ ஞானபோதத்தை அருளிச்செய்தார். மறைஞானசம்பந்தர் தமது ஆசாரியரை நமஸ்கரித்து அவ்விடம் விட்டுப் போய்ப் பூலோக கைலாசமாகிய சிதம்பரத்தை அடைந்து ஆலயப்பிரதக்ஷி ணஞ்செய்து அங்கு வீற்றிருந்தருளினார்.

சிதம்பரத்து நடராஜப்பெருமானுக்குப் பூசைபுரியும் உரிமை பூண்ட தில்லைவாழந்தணர்களுள் உமாபதிசிவாசாரியர் என்னும் பெரியவர் ஒருவர் இருந்தார். அவர் விருதுகளோடு பல்லக்கிலே வர்ந்து பூசைசெய்து மீளும்போது திருக்களாஞ்சேரியில் எழுந்தருளியிருந்த மறைஞானசம்பந்தர், "பட்டகட்டையிற் பகற்குருடு போகின்றது" என்றார். அதைக்கேட்ட உமாபதிசிவாசாரியர் மகிழ்ந்து, பல்லக்கை விட்டிறங்கி, அவரை வணங்கி "உண்மை ஞானம் உபதேசித்தருளுக" என்று வணங்கினர். மறைஞானசம்பந்தர் நெய்தற்றெழில்செய்வார் வீதியிலே போய் நூலுக்கு இடும் கூழை வாங்கிப்பருகினர். உமாபதிதேவர் அவர் திருக்கரத்திளின்றும் ஒழுகும் சேஷத்தை வாங்கிஉண்டார். அவரது அதிதீவிர பக்குவத்தை அறிந்து அவருக்குச் சிவஞானபோதத்தை உரைத்தருளினர்.

இதனை அறிந்த தில்லைவாழந்தணர்கள் உமாபதிசிவனாரைப் பந்தியினின்றும் நீக்கிவிட்டார்கள். அவர் கொற்றவன் குடியிற் போய் மடங்கட்டி அங்கே நடேசரை ஆன்மார்த்தமாகப் பூசித்துக்கொண்டு நிட்டைகூடிவந்தார்.

ஒருமுறை நடராசப்பெருமானுக்குக் கொடியேற்றுங்காலம் வந்தபொழுது தில்லைவாழந்தணர்கள் கொடியேற்ற முயன்றபொழுது அது ஏறாது தடைபட்டு நின்றது. அந்தணர்கள் வருத்தங்கொண்டு தத்தம் மனைகளிற்போய்ச் சயனித்தார்கள். அப்பொழுது சொப்பனத்தில் நடராசப்பெருமான் எழுந்தருளி "உமாபதி சிவன்வந்தாற் கொடியேறும்" என்றருளிச்செய்தார். பின் அவரெல்லோரும் உமாபதிசிவாசாரியரைப் பிரார்த்தித்தார்கள். அவர் கொடிக்கயிற்றைப் பற்றாது விடும்படி ஆஞ்ஞாபித்து, "கொடிக்கவி" என்னுஞ் சித்தாந்தநூலைப்பாடியருளக் கொடி சுயமாகவே ஏறிவிட்டது.

பெற்றான்சாம்பான் என்பவன் உமாபதிசிவனார் அறியாத பிரகாரம் அவருக்குச் சமையல் செய்வாரிடத்து, திருவமுது ஆக்கும்பொருட்டுக் கூலிபெறுமலே விறகுகொடுக்கும் வழக்கமுடையவனயிருந்தான். ஒருநாள் சமையல் விரைவில் நடவாமையைக்குறித்து உமாபதிசிவனார் வினவியபோது "பெற்றான் சாம்பான் விறகு கொணர்ந்து கொடுக்கும் வழக்கமுடையவன்;

இன்றைக்கு மழையினாற்போலும் கொணர்ந்திலான்; விறகுக்குக் கூலிகொடுத்தாலும் வாங்குகின்றானில்லை;" என்று விண்ணப்பித்தார்கள். அதைக்கேட்ட சிவாசாரியர் அவன் வந்தால் என்னிடம் அனுப்புங்கள் என்றருளிச்செய்தார். சமையல் செய்வோர் பெற்றான்சாம்பான் வந்தவுடன் உமாபதிதேவரிடம் அனுப்பினார்கள். அப்பொழுது அவர் அவனைப்பார்த்து "விறகு கொணர்ந்து கொடுக்கின்றாயாம்; கூலி என் பெறுகின்றிலாய்" என்று வினவினர். அதற்கு அவன் "சுவாமீ! அடியேனுக்குத் தீட்சை செய்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். அதற்குச் சிவாசாரியர் "நீ நடராசரிடம் திருமுகம் வாங்கிவருவாயாயின் தீக்கைசெய்வேன்" என்றார். உடனே பெற்றான்சாம்பான் கோவில்வீதியிலே போய் நடராசவள்ளலாரைப் பிரார்த்தித்துப் படுத்திருந்தான். பெருமான் திருப்பாசுரம் எழுதப்பட்ட திருமுகத்தை அர்த்தராத்திரியில் அவனிடம் கொடுத்தருளினர். அவன் அதை உமாபதிசிவனாரது திருமுன்னிலையில் வைத்து நமஸ்கரித்தான். சிவாசாரியர் அத்திருமுகத்தையெடுத்துக் கண்களில் ஒற்றி அதனைத் திறந்து பார்த்தபோது,

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டுப் — படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்கை முறை.

என்று எழுதப்பட்டிருத்தல் கண்டு பரவசமுற்று, பெற்றான்சாம்பானுக்கு ஞானவதிப்பிரகாரம் திருநோக்கமாகிய தீக்கைசெய்து முத்திகொடுத்தருளினர். இவ்வுண்மையை அறியாத பெற்றான்சாம்பான் மனைவி, தனது நாயகனை மடத்துச்சாமியார் எரித்துவிட்டார் என்று அரசனுக்கு முறையிட்டாள். அரசன் பெற்றான்சாம்பானது மனைவியின் முறையீட்டைச் சிவாசாரியருக்கு விண்ணப்பித்தான். சிவாசாரியர் அவர்களது ஐயத்தை நீக்குமாறு திருவுள்ளங்கொண்டு, முள்ளிச்செடி ஒன்றுக்குத் தமது திருநோக்கத்தினாலே சோதிவடிவாய் ஆகாயத்திற் செல்லும்படிசெய்து, அதற்கும் முத்திகொடுத்தருளினர்.

உமாபதிசிவாசாரியர் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,

உண்மைவிளக்கம், சங்கற்பநிராகரணம் என்னும் சித்தாந்த சாத்திரங்களையும், கோயிற்புராணம் முதலிய பிரபந்தங்களையும் அருளிச்செய்து, கொற்றவன்குடியில் கிட்டையிலே வீற்றிருந்து சிவபெருமானோடு இரண்டறக் கலந்தார்.

தாயுமானசுவாமிகள்.

குறைவிலருண் ஞானமுதல் கொற்றங் குடியடிக
ணறைமலர்த்தாட் கன்புபெற்று நாமிருப்ப தெந்நாளோ.

| சித்தாந்த சாத்திரம் கச. | அருளிச்செய்தவர். |
|---|---|
| திருவுந்தியார் | .... உய்யவந்ததேவநாயனர் |
| திருக்களிற்றுப்படியார் | திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனர் |
| சிவஞானபோதம் | .... மெய்கண்டதேவர் |
| சிவஞானசித்தியார் இருபாவிருபது | அருணந்திசிவாசாரியர் |
| உண்மைவிளக்கம் | .... மனவாசகங்கடந்தார் |
| சிவப்பிரகாசம் முதலிய எட்டுநூல்கள் | உமாபதிசிவாசாரியர் |

---

## உஉ. கோச்செங்கட் சோழநாயனார்.

சோழநாட்டிலே காவிரிநதிக்கரையிற் சிறந்து விளங்கும் சந்திரபுஷ்கரணியென்னும் தீர்த்தத்தின் மருங்கிலே, விருட்சங்கள் நிறைந்த ஒரு வனம் இருந்தது. அவ்வனத்தில் ஒரு வெண்ணாவல் மரத்தின்கீழே எழுந்தருளியிருந்த சிவலிங்கப்பெருமானை ஒருவெள்ளானையானது நாடோறும் வழிபட்டுவந்தது. இவ்வாறாக யானை பூசித்தகாரணத்தால் அத்தலத்துக்குத் திருவானைக்கா என்னும் பெயர் வழங்கியது.

ஒருநாள் மெய்ஞ்ஞானமுள்ள ஒருசிலந்தியானது அச்சிவபெருமானுடைய திருமுடிமேல் சூரியவெப்பமும் சருகும் பொருந்தாதபடி தனது வாயினின்றுந் தோன்றிய நூலினால் மேற்கட்டி கட்டிச்சென்றது. சிலந்தி கட்டியவலையைச் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கச்சென்ற வெள்ளானைகண்டு, அது அநுசிதம் என்றுநினைத்து, அதனைச்சிதைத்தது. சிலம்பி மீண்டு சிவனு

டைய திருமுடிமேல் மேற்கட்டி செய்தது. யானை மறுநாள் அம்மேற்கட்டியைமுன்போல்அழித்தது. சிலம்பி "எம்பிரானது திருமேனியிற் சருகுவிழாவண்ணம் யான் வருந்திக்கட்டிய நூல்விதானத்தை யானை அழிக்கலாமா?" என்று கோபித்து, அவ்வியானையின் துதிக்கையிலே புகுந்துகடித்தது. யானையானது தனது கையை சிலத்தின் மோதிக்கொண்டு விழுந்திறந்தது. யானை வேகமாகமோத அக்கையினுள்ளே புகுந்த சிலந்தியுமிறந்தது. சிவபெருமான் வெள்ளானைக்கு வரத்தைக்கொடுத்து, சிலந்தியைச் சோழர்குலத்திற் பிறந்து உலகத்தை அரசாட்சி செய்யும்படி கிருபைசெய்தருளினார்.

சோழர்குலத்தரசனான சிபியின் வமிசத்திற்றோன்றிய சுபதேவன் என்பவன் தன்னுடைய மாதேவியாகிய கமலவதியுடன் சிதம்பரத்தை அடைந்து, கனகசபையில் ஆனந்ததாண்டவஞ்செய்தருளும் நடராசப்பெருமானுடைய திருவடிகளைச் சென்னியுறத் தாழ்ந்து வழிபட்டுவருவானாயினான். மாதேவியாகிய கமலவதி மக்கட்பேறின்மையால் வரம் வேண்ட, நடேசரது திருவருளினால், சிறந்த திருப்பணியைத் திருவானைக்காவிற் செய்த சிலந்தியானது கமலவதியினுடைய வயிற்றில் ஒரு மகவாய்வந்துதங்கியது. கமலவதிக்குக் கருப்பகாள் நிரம்பிக் குழந்தையைப் பிரசவிக்குங்காலம் வந்தடுத்தபொழுது மூதறிவினராகியசோதிடர்கள் "இக்குழந்தை ஒருநாழிகை கழித்துப் பிறக்குமேல் மூவுலகங்களையும் அரசாளும்" என்று கூறினார்கள். அப்பொழுதுமாதேவி "என் பிள்ளை இப்போது பிறவாமல் இன்னும் ஒரு நாழிகை கழித்துப்பிறக்கும்வண்ணம் என் கால்களைக்கட்டித்தூக்குங்கள்" என்றாள். அவ்வாறே அதனைச் செய்துமுடித்துச் சோதிடர்கள் சொல்லிய காலம் வரக் கட்டவிழ்த்துவிட்டார்கள். அருமணிபோன்ற பிள்ளையை அக்கமலவதி பெற்றெடுத்து, அதுபிறக்குங் காலம் தாழ்த்தமையால் சிவந்த கண்களையுடையதாயிருக்கக் கண்டு, "என் கோச்செங்கண்ணனோ" என்றுகூறி உடனே இறந்துபோனாள். சுபதேவச்சோழன் அவ்வரியபுதல்வனை வளர்த்துமகுடஞ்சூட்டி அரசாட்சிசெய்யவைத்துச் சிவலோகத்தை அடைந்தனன்.

கோச்செங்கட்சோழநாயனார் முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமானுடையதிருவருளினாலே, தமதுபூர்வசென்மவுணர்ச்

சியை அறிந்து, இவ்வுலகத்தை அரசாட்சி செய்பவராய்ச் சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருந்தருளும் வண்ணம் சிவாலயங்களை விருப்போடு கட்டுவிக்குந் திருத்தொண்டு செய்யும் கடமையை மேற்கொண்டார். திருவானைக்காவிலே தாம் முற்பிறவியில் திருவருள் பெற்றமையை உணர்ந்து, அங்கே வெண்ணாவல் மரத்தின் கீழ் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு ஒரு கோயிலைச் சமர்ப்பித்தார். பின்னரும் மந்திரிகளை ஏவி, சோழநாட்டிற் பல திருக்கோயில்களைக் கட்டுவித்தார். கட்டுவித்து அவ்வாலயங்கடோறும், நித்தியமாகிய பூசையும், நைமித்தியமாகிய திருவிழாவும் தவறாது நடத்தற்குவேண்டும் நிபந்தங்கள் அமைத்து, அவைகளைச் சைவாகமவிதிப்படி சிறிதாயினும் வழுவாது நடத்துவித்து வருவாராயினார். வருங்காலத்தில் தில்லைவாழந்தணர்களுக்குப் பல மாளிகைகளைக் கட்டுவித்தார். கோச்செங்கட்சோழநாயனார் சிவபெருமானுக்குச் செய்யுந் திருத்தொண்டோடு பூமியைப்பொதுநீக்கி ஆண்டு நடராசப்பெருமானுடைய திருவடிநீழலை அடைந்தனர்.

திருநாவுக்கரசுசுவாமிகள். [திருநேரிசை]

சிலந்தியு மானைக்காவிற் றிருநிழற் பந்தர்செய்து
உலந்தவ ணிறந்தபோதே கோச்செங்க ணானுமாகக்
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர்தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கைவீ ரட்டனாரே.

---

## ௨௫. மனுநீதிகண்ட சோழர்.

சோழமண்டலத்திலே திருவாரூரிலே மனுநீதிகண்டசோழர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் உயிர்களுக்கெல்லாம் கண்ணும் உயிரும் போன்றவர். அவர் திருவாரூரிலே கோயில் கொண்டருளிய வன்மீகநாதசுவாமிக்குப் பூசை உற்சவம் முதலியவைகளைச் சைவாகமவிதிப்படி சிரத்தையுடன் செய்விப்பவர்.

அவர் அரசியற்றுங் காலத்திலே, அவருக்கு ஒரு புத்திரன் பிறந்தான். அவன் வேதம் புராணம் முதலியவற்றையும், தன் மரபுக்குரிய யானையேற்றம், குதிரையேற்றம், தேர் செலுத்தும் வன்மை முதலிய கலைகளையும் ஆர்வமுடையவனாய்க் கற்று இளவரசாதற்குத் தகுந்த பருவத்தை அடைந்தான்.

அவன் ஒருநாள் அரசமாளிகையினின்றும் புறப்பட்டு, தேரில் ஏறி வீதியிற் சென்றான். செல்லும்பொழுது வீதியிலே ஒரு பசுக்கன்று துள்ளிக்கொண்டுபோய், அத்தேர்க்காலின் அடியில் அகப்பட்டு இறந்தது. அதனைக்கண்ட தாய்ப்பசு சுழன்று ஓடிச்சென்று அலறிச்சோர்ந்து நடுக்குற்று விழுந்தது. இராஜபுத்திரன் அதுகண்டு துயருழந்து அறிவுநீங்கித் தேரினின்றும் வீழ்ந்தான். தாயையும் இறந்த கன்றையும் பார்த்து இரங்குவான்; "மனுவென்னும் எனது பிதாவுக்கு இப்பழிவந்து எய்தற்கோ நானொருவன் பிறந்தது" என்பான். அபுத்தி பூருவமாக வந்த இப்பாவத்திற்குப் பிராயச்சித்தம் உண்டாயின் செய்துகொள்ளல்வேண்டும் என்று பிராமணரிடத்திலே சென்றான். தன் கன்றையிழந்த பசு, அத்துன்பத்தைத் தாங்கமாட்டாது, மாளிகை வாயிலிற்கட்டிய ஆராய்ச்சிமணியைத் தன்கொம்பினாலே அடித்தது. அந்த மணியோசையைக் கேட்ட சோழமகாராசா சிங்காசனத்தினின்றுமிறங்கி, வாயிலே விரைந்து அடைந்தார். வாயிற் காவலாளர்கள் எதிரே நின்று வணங்கி, "எங்கள் அரசே! ஒரு பசு இங்கே வந்து, ஆராய்ச்சிமணியைத் தன் கொம்பினால் அடித்தது" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். சோழமகாராசா அதுகேட்டு, "இப்பசுவுக்கு யாது இடையூறு நிகழ்ந்தது" என்று அமைச்சரைக் கோபித்துப்பார்த்தார். மந்திரி ஒருவன் மன்னரை வணங்கி, "உமது புதல்வன் தேர்மேலேறி, அரசவீதியிற் செல்லும்பொழுது ஒரு பசுக்கன்று துள்ளிக் குதித்துத் தேர்க்காலில் அகப்பட்டு இறந்தது; அதன் தாயாகிய இப்பசு ஆராய்ச்சிமணியை அடித்தது" என்று விண்ணப்பஞ்செய்தான்.

சோழர் துன்பங்கொண்டு, தாய்ப்பசுவின் முகத்தைப் பார்த்துச் சோர்வாராயினர். மந்திரிகள் அவருடைய பாதங்களை வணங்கி, "கோவதைக்குத் தருமசாஸ்திரங்களிலே விதிக்கப்பட்ட பிராயச்சித்தத்தை உம்முடைய புத்திரனைக்கொண்டு செய்விப்பதே தகுதி" என்றார்கள். மனுநீதிகண்டசோழர் அது கேட்டு, "பிராயச்சித்தஞ் செய்வது கன்றையிழந்த இப்பசுவினது நோய்க்கு மருந்தாகுமா? என்னுடைய மகன் செய்த பாவத்துக்குப் பிராயச்சித்தஞ் செய்யஉடன்பட்டு, பிறனொருவன் செய்த பாவத்துக்கு அவனைக்கொல்வேனானால் முற்காலத்தி

விருந்த மனுவினுற் செய்யப்பட்ட தருமசாத்திரம் இப்பொழுது மனு என்னும் சோழனுல் நீக்கப்பட்டது என்னும் வார்த்தை உலகத்தில் நிலைபெருதா?" என்ருர்.

அதுகேட்ட மந்திரிகள் "மகாராசரவே! இக் குற்றத்துக்காக உமது புத்திரனைக் கொல்லுவது முறையல்ல. பிராயச்சித்தம் செய்துகொள்ளுவதே ஆன்ருேர் வழக்கு" என்ருர்கள். அதற்கு மனுநீதிகண்ட சோழர் "நீங்கள் தரும வழியைச் சிறிதும் யோசியாது பேசுகின்றீர்கள். எந்த உலகத்திலே எந்தப் பசு தன் கன்றையிழந்த வருத்தத்தினுல் ஆராய்ச்சிமணியை அடித்தது? அன்றியும், திருவாரூரிலே பிறந்த உயிரைக்கொன்றவனைக் கொல்லுவதே துணிபொருள் என்று சிந்தியுங்கள். இந்தப் பசுவினது துன்பத்தை நீக்க எனக்கு வல்லமை இல்லை. ஆதலினுல் இந்தப் பசு கன்றையிழந்து வருந்துவதுபோல, நானும் எனது புத்திரனையிழந்து வருந்துவதே முறை" என்று சொல்லி, ஒருவராலும் செய்யமுடியாத செய்கையைச் செய்யத் துணிந்தார்.

மன்னர்பிரான் தம்முடைய புத்திரனை அங்கே வரவழைத்து ஒரு அமைச்சனைப் பார்த்து, "இவனை வீதியிலே தேர்க்காலின் கீழ்க்கிடத்தித் தேரை நடத்தக்கடவாய்" என்ருர். மந்திரி அப்படிச்செய்யாது தனது உயிரைவிட்டான். அதனை அறிந்த சோழராஜா தமது புத்திரனைத் தாமே வீதியிற்கொண்டுசென்று அவனுடைய மார்பிலே தேர் உருளை பொருந்தும்படி தேரை நடத்தினுர்.

மனுநீதிகண்டசோழருடைய செய்கையைக்கண்டு, மண்ணவர் கண்மழை பொழிந்தார்கள். வானவர்கள் பூமழை பொழிந்தார்கள். தியாகராசர் உமாதேவி சமேதராய், இடபவாகனத்தில் எழுந்தருளிவந்து, அரசருக்கு முன்னின்ருர். அரசர் கடவுளைத் தரிசித்துப் பேரானந்த மடைந்தார்.

அப்பொழுதே, இறந்த பசுக்கன்றும், இராசகுமாரனும், மந்திரியும் உயிர்பெற்றெழலும், அரசர் தாம் இத்தன்மையினரென்று அறியாதவரானுர். மனுநீதிகண்ட சோழமகாராசா தமது பாதங்களில் வணங்கிய திருமகனை மார்போடணைத்து,

மனமகிழ்ந்து துயரநீங்கினர். பசு தன் கன்று உண்ணும்படி பாலைச் சொரிந்து, தனது துன்பநீங்கியது. தியாகராசப் பெருமான் மனுவேந்தருக்குத் திருவருள்செய்து மறைந்தருளினர்.

---

## உச. ஆலயவழிபாடு.

### I

கருணாநிதியாகிய சிவபெருமான் புறத்திலே திருக்கோயிலினுள்ளிருக்கும் சிவலிங்கம் முதலிய திருமேனியும், மெய்யடியாருடைய திருவேடமும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிர் இடமாகக் கொண்டுநின்றும் ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்றருள்செய்வர். வினைவயத்தாற் பிறந்திறந்துழலும் ஆன்மாக்களை அவற்றினின்றும் எடுக்கும் காரணமாகவே தலம், தீர்த்தம், மூர்த்தி என்னும் வடிவாய் விளங்கினர். இம் மூன்றையுஞ் சிவனாகவே வணங்கவேண்டும். அவ்வாறு வணங்குவோர் குருவருளாலே முத்தியடைவார்கள். சிவாலயத்தைச் சிவனெனக்கண்டு வழிபடுவோர் சீவன்முத்தராவார் எனச் சிவஞானபோதம் என்னும் சித்தாந்தசாஸ்திரம் செப்புகின்றது. மார்க்கண்டேய முனிவர் சிவாலயவணக்கம் செய்து சீவன்முத்தராயினர் என்பதே இதற்குச் சான்றாகும். பிரமா விட்டுணு முதலிய தேவர்களும், முனிவர்களும், அவுணர்களும், பிறரும் ஆலயவழிபாட்டினாலன்றோ தாம்தாம் விரும்பியவற்றை எய்தி இன்புற்றார்கள். சம்பந்தர் அப்பர்சுவாமிகள் முதலிய நாயன்மாரும் தமது செய்கைகளினாலும் வாக்குக்களினாலும் ஆலயசேவையின் பெருமையை நன்கு காட்டியிருக்கின்றார்கள். சிவாலயங்கள் இல்லாதவூர் எவ்வித வளப்பங்களினால் நிறைந்திருப்பினும் அவ்வூர் காட்டுக்குச் சமமாகும்.

"திருக்கோயி லில்லாத திருவி லூருந்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்க மூதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரு
மவையெல்லா மூரல்ல வடவி காடே."

சிவபெருமான் இந்த அருமையாகிய மானுடப் பிறவியை எமக்குத் தந்தது தம்மை வழிபாடுசெய்து முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம். ஆதலால் இத்துணை விசேடமுள்ள ஆலயவழி பாட்டை நாடோறுஞ் செய்தல்வேண்டும். செய்தவர்களே மானுடப் பிறவியாலாகிய பயனை அடைவார்கள். சிவாலயங்களை நோக்குங்கண்களே கண்களாம். சிவனுடைய கோயிலிற் புகுங் கால்களே கால்களாம். அப்பெருமானைத் தரிசியாத கண்களா லும், திருக்கோயிலைப் பிரதக்ஷிணம் செய்யாத கால்களாலும், திருக்கோயிலை வலம்வந்து போற்றாத சரீரத்தாலும் யாது பயன்? அவை இருந்தும் பிரயோசனமற்றவைகளாம்.

வரகுணபாண்டியன் செங்கோலோச்சி அரசியற்றுநாளிலே ஒருநாள் காட்டிற்சென்று சூரியன் அஸ்தமிக்கும்வரையும் வேட் டையாடிக்கொண்டு, மதுரைக்குத் திருப்பினான். திரும்பி வரும் பொழுது வேகத்தோடு செல்லும் அவன் குதிரை அக்காட்டிற் படுத்திருந்த ஒரு பிராமணன் மேலே கால்வைக்க அவன் இறந்தான். இறந்த பிராமணனுடைய பிரேதத்தை அவன் உற வினர் பாண்டியனுடைய கடைத்தலைவாயிலிலே போட்டு நிகழ்ந் தவற்றை அறிவிக்க, பாண்டியன் வேண்டும் பொருள் கொடுத்து மயானக் கிருத்தியத்தை முடிப்பித்தான். அவனைப் பிரமகத்தி பிடித்தது.

பாண்டியன் பிரமகத்தி நீங்கும் பொருட்டு அரசமரத்தைப் பிரதக்ஷிணஞ்செய்தும், அறுகுகொய்து பசுக்களுக்குக் கொடுத் தும், தானம்முதலிய புண்ணியங்களைச்செய்தும் பிரமகத்தி நீங்க வில்லை. பாண்டியன் பிரமகத்தியினால் வருந்தும்பொழுது பிராம ணர்கள் அவனை நோக்கி, "அரசனே! நீ நாடோறும் விரதநெறி யோடு சோமசுந்தரக்கடவுளை ஆயிரத்தெட்டுத்தரம் பிரதக்ஷி ணஞ்செய்குதி; இப்படிப் பத்துத்தினம் செய்வையேல் சோம சுந்தரக்கடவுள் உனக்கு வழிகாட்டுவார்" என்றார்கள்.

வரகுணபாண்டியன் அதுகேட்டு திருக்கோயிலை அடைந்து சோமசுந்தரேசரை வணங்கி, "அடியேனுடைய பழியைத் தீர்த் தருளும்" என்று விண்ணப்பித்தான். விண்ணப்பித்து ஆயிரத் தெட்டு முறை வலம்வந்து வணங்கினான். பரமசிவனது கிருபை யினாலே ஆகாயத்தினின்றும் "பாண்டியனே பிரதக்ஷிணம் இவ்

வோரடிக்கு ஒவ்வோர் அசுவமேதயாகபலங்கொடுக்கும். நீ, அத்துணைச்சிறப்புற்றபிரதக்ஷிணம் ஒவ்வொருநாளும்ஆயிரத்தெட்டுச் செய்து வந்தாய்; இக்காரணத்தினால் சந்தோஷங்கொண்டோம்; நீ சோழனோடு யுத்தத்தில் எதிர்க்கும்பொழுது அவன் புறங்காட்டியோட நீ துரத்துஞ் சமயத்தில் திருவிடைமருதூரை அடைவாய். அங்கே பிரமகத்தியை நீக்கியருளுவோம்'' என்றோர் அசரீரி தோன்றிற்று. பாண்டியன் அதுகேட்டு மகிழ்ந்து அரண்மனை அடைந்தான்

சிலநாட்கழிய, சோழன் பாண்டியனோடுயுத்தஞ் செய்து முதுகிட்டான். வரகுணபாண்டியன் அவனைத் துரத்திக்கொண்டு போகும்பொழுது காவேரியை அடைந்தான். அடைந்து பூசத்துறையிலே ஸ்நானஞ்செய்து திருவிடைமருதூரிற் சென்று, திருக்கோயிலின் கிழக்குவாயிலைக் கடந்துசென்றான். செல்லுதலும் பிரமகத்திப்பழியும் பாசமும் புறத்தே நின்றன. வரகுணதேவன் சிவலிங்கத்தைத் தரிசித்து அன்புமயமாய் நின்று தோத்திரஞ்செய்து வணங்கி மதுரையை அடைந்தான்.

ஆகவே போகங்களையும் மோட்சத்தையும் அடையவிரும்பினோர் யாவரும் ஆலய வழிபாட்டை மெய்யன்புடன் செய்தல் வேண்டும்.

---

## உரு. ஆலய வழிபாடு.
## II.

ஆலய தரிசனத்துக்குச் செல்லுவோர் ஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து, சந்தியாவந்தன முதலிய முடித்துக்கொண்டு செல்லுதல் வேண்டும். திருக்கோயிலுக்குச் சமீபமாக வந்தவுடன் கால்களைக் கழுவித் திருக்கோபுரத்தைத் தரிசித்து இரண்டு கைகளையுஞ் சிரசிலே குவித்துக்கொண்டு உள்ளே போய்ப் பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்கரித்தல் வேண்டும். ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமுஞ் செய்தல்வேண்டும். அட்டாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டவயவமும் நிலத்திலே படும்படி வணங்குவதாம்.

பஞ்சாங்க நமஸ்காரமாவது தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்திலே படும்படி வணங்குதலாம். திரயாங்க நமஸ்காரம் ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் பொது. அதாவது சிரசிலே இரண்டுகைகளையுங் குவித்தலாம். அட்டாங்க நமஸ்காரம் பண்ணும்பொழுது, பூமியிலே சிரசை வைத்து, மார்பு பூமியிலேபடும்படி வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப் பின் அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகள் அரையை நோக்கி நீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தும்படி செய்தல் வேண்டும். நமஸ்கரித்து எழும்பி இரண்டு கரங்களையும் இருதயத்திற் குவித்துக் கொண்டு, பாதங்களை மெல்லவைத்து வலம் வருதல் வேண்டும். வலம் வரும்போது கொடித்தம்ப நிழலேனும், தூபி நிழலேனும் இருந்தால் அந்த நிழலில் மூன்றிலொருபாகம் நீக்கி எஞ்சிய பாகத்திலே செல்லுதல் முறையாகும். ஆலயவணக்கம் செய்யும் பொழுது, தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களை ஓதல் வேண்டும். தரிசனம் முடிந்தவுடன் சண்டேசுரர் சந்நிதியை அடைந்து கும்பிட்டு மூன்றுமுறை கைகொட்டித் தரிசனபலத்தைத் தரும்படி பிரார்த்திக்கவேண்டும். பின் பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்கரித்துக் கடவுளுடைய மந்திரத்தை இயன்றவுருச் செபித்து வீட்டுக்குச் செல்லுதல்வேண்டும்.

திருக்கோயிலிலே செய்யத்தகாத குற்றங்கள்:— ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், எச்சிலுமிழ்தல், மலசலங்கழித்தல், பாக்கு வெற்றிலை உண்டல், மூக்குநீர்சிந்தல், ஆசனத்திருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், மயிர்கோதி முடித்தல், சிரசிலே வஸ்திரந் தரித்துக்கொள்ளுதல், தோளிலே உத்தரீயம் இட்டுக்கொள்ளுதல், சட்டையிட்டுக் கொள்ளுதல், திருமாலியத்தைக் கடத்தல், திருமாலியத்தை மிதித்தல், வீண்வார்த்தைபேசல், சண்டையிடல், சுவாமிக்கும் பலிபீடத்துக்குங் குறுக்கே போதல், ஒருதரம் இருதரம் நமஸ்கரித்தல், ஒருதரம் இருதரம் வலம்வருதல், சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையே நமஸ்கரித்தல், அபிஷேக காலத்திலும் நிவேதன காலத்திலும் வணங்குதல், திருவிளக்கவியக்கண்டும் தூண்டாதொழிதல் முத

லாயினவாம். இக்குற்றங்களை அறிந்து செய்தவர் நரகத்திலே விழுந்து வருந்துவர்.

கலிங்கதேசத்திலே செங்கோல்செலுத்தி அரசாட்சி செய்த காலிங்கராசனுடைய புத்திரனாகிய விராதன், மந்திரி புத்திரனாகிய சந்திரன், புரோகிதன் புத்திரனாகிய சுனந்தன், வாயிற்காவலாளன் புத்திரனாகிய சுகந்தன் என்னும் நால்வரும் தீர்த்தயாத்திரை செய்ய விரும்பினார்கள். விரும்பிய அவர்கள் தங்கள் தங்கள் பெற்றாரை வணங்கி, அனுமதிபெற்றுக்கொண்டு, முற்பிறப்பிற் செய்த வினைப்பகுதி செலுத்தச் சென்றார்கள். அந்நால்வரும் சுரேசுரம் என்னுந் தலத்தை அடைந்து, அங்கே எழுந்தருளியிருக்கும் சிவபிரானை வணங்கினார்கள். சூரியன் அஸ்தமித்தான். அவ்விரவில் அரசகுமாரன் சிவாலயத்தில் நித்திரைசெய்தான். அவன் தலைகோதிமுடித்து மயிரை உதிர்த்தான். மந்திரிகுமாரன் சிவாசாரியருடைய மடத்தில் தாம்பூலத்தை மென்று எச்சிலுமிழ்ந்து அங்கே சயனித்தான். புரோகிதகுமாரன் நந்தனவனத்தில் எச்சிலுமிழ்ந்து, அங்கே துயின்றான். மற்றவன் திருக்குளப்படியில் உறங்கினான். அவன் திருக்குளத்தினுள் மூக்குநீர் சிந்தினான். இவர்கள் சிவபெருமானுடைய திருவுள்ளம் வெறுக்கக்கூடிய செயல்களைச் செய்தமையால் பாவிகளாய், தொடங்கிய யாத்திரையும் முற்றுப்பெறாது, சிரரோகம், கண்டமாலை, மூக்கால் நீர்வடிதல் என்னும் நோய்களால் பிடிக்கப்பட்டு இறந்து, நரகத் துன்பத்தை அடைந்தார்கள்.

---

## உகூ. சிவாலயத் திருத்தொண்டுகள்.

சிவாலயத்தின் பொருட்டுச் செயற்பாலனவாகிய திருத்தொண்டுகள் திருவலகிடுதல், திருமெழுக்குச் சாத்துதல், திருநந்தனவனம் வைத்தல், பத்திரபுஷ்பம் எடுத்தல், திருமாலை கட்டுதல், சுகந்ததூபமிடுதல், திருவிளக்கேற்றுதல், தேவாரம் திருவாசகம் முதலிய அருட்பாக்களை மனங்கசியப் பாடல், ஆனந்தக்கூத்தாடல், திருக்கோயிற் பிரகாரங்களிலும் திருவீதியிலுமுள்ள புல்லைச் செருக்குதல், சந்தனம் கர்ப்பூரம் முதலிய பூசைத்திரவியங் கொடுத்தல்

### திருநாவுக்கரசு நாயனார்.
[திருத்தாண்டகம்.]

நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்று
மாரூரா வென்றென்றே யலறு நில்லே.

இத் திருத்தொண்டுகளாலே சிறப்புற்ற மெய்யடியார் பலருடைய சரித்திரம் திருத்தொண்டர் பெரியபுராணத்திலே காணலாம்.

திருமுனைப்பாடிநாட்டிலுள்ள திருவாமூரிலே வேளாளர் குலத்திலே புகழனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் மாதினியார் வயிற்றிலே, திலகவதியார் என்னும் புத்திரியாரும் மருணீக்கியார் என்கின்ற புத்திரரும் பிறந்தார்கள். மருணீக்கியார் பல கலைகளையும் கற்றுவருவாராயினார். திலகவதியாருக்குப் பன்னிரு வயசு ஆனபொழுது, அரசனிடத்தில் சேனாதிபதித் தொழிலில் அமர்ந்திருப்பவராகிய கலிப்பகையார் தமக்குந் திலகவதியாருக்கும் மணம் பேசுவித்தார். புகழனார் அதற்கு உடன்பட்டார். கலிப்பகையார் தாம் மணஞ்செய்யுமுன் அரசனேவலால் வடதேசத்தரசர்களை எதிர்த்து நெடுநாள் யுத்தஞ் செய்தார்.

இப்படி நடக்குங்காலத்திலே, புகழனார் தேகவியோகம் அடைந்தார். அவர் மனைவியாரும் அவருடன் இறந்தார். திலகவதியாரும் மருணீக்கியாரும் பிதாமாதாக்களுக்குச் செய்யவேண்டிய அந்தியக் கிரியைகளைச் செய்துமுடித்தார்கள். இங்கே இங்ஙனம் நடக்க, கலிப்பகையார் யுத்தகளத்தில் இறந்தார். இச்சமாசாரத்தைத் திலகவதியார் அறிந்து, நம்முடைய தந்தைதாயர்கள் என்னை அவருக்கே கொடுக்க நிச்சயித்திருந்தமையால், இவ்வுயிர் அவருக்கே உரியது என்று இறக்கத்துணிந்தார். ஆயினும் தமது தம்பியாராகிய மருணீக்கியாரது வேண்டுகோளின்படி தமது

கருத்தைத் தடுத்து, வேறுமணஞ்செய்யாது, வீட்டுலே தவஞ் செய்துகொண்டிருந்தார். மருணீக்கியார் சமணர்களுடைய போதனைவலிமையினாலே ஆருகத சமயமே முத்தியைக் கொடுக்குஞ் சமயம் என்று அதிற் பிரவேசித்தார். பிரவேசித்து சமணகுருமாருட் சிரேட்டராய் விளங்கினார். திலகவதியார் சிவபெருமானிடத்தில் பத்தியிருந்து, திருவதிகை வீரட்டானத்தை அடைந்து, சிவனை வணங்கி, விபூதி ருத்திராக்ஷந்தரித்து, தினந்தோறும் சூரியோதயத்துக்கு முன்னே திருக்கோயிலின் உள்ளும் புறமும் திருவலகிடுதல், சாணத்தினாலே மெழுகுதல், புஷ்பங்களைக் கொய்துவந்து திருமாலைகள் தொடுத்தமைத்துச் சுவாமிக்குச் சாத்தக்கொடுத்தல் முதலாகிய சிவத்தொண்டுகளைச் செய்து வந்தார். செய்துவருங்காலத்திலே, திலகவதியார் தம்முடைய தம்பியாரை ஆருகத சமயத்தினின்றும் தூக்கிக் காப்பாற்ற வேண்டும் என்று பிரார்த்தித்துவந்தார். சிவபெருமான் சொப்பனத்திலேதோன்றி "தபோதனியே! நாம்அவனைச் சூலைநோயினால் வருத்தி ஆட்கொள்வோம்" என்று கூறிமறைந்தருளினார்.

சிவபெருமானுடைய திருவருளினாலே தருமசேனர் என்னும் ஆருகதநாமத்தையுடைய மருணீக்கியாரது வயிற்றிலே சூலைநோய் உண்டாகிக் குடரைக் குடைந்தது. சமணர் அந்நோயைத் தங்கள் மந்திர சாமர்த்தியத்தினாலே தணித்தும் தணியாமைகண்டு, கைவிட்டார்கள். திலகவதியாரே தமக்கு உதவி என்று துணிந்து, தம்முடைய சமாசாரத்தை அவருக்கு அறிவிக்கும்படி ஒருவனை அனுப்பினார். அவன் தருமசேனனுடைய சமாசாரங்களைக் கூற, திலகவதியார் "யான் அங்கு வரேன். இதை நமது தம்பிக்குக் கூறு" என்றுசொல்லியனுப்பினார், அவன் அதை அறிவிக்க, மருணீக்கியார் சோகித்து, சமணருடைய இடத்தைக் கடந்து இரவிலே ஒருவருங்காணாதபடி திலகவதியாருடைய மடத்தை அடைந்து வணங்கி, "தாயே! சூலைநோயைத் தாங்க வாற்றாமையால் உண்மையே சரண் என்று அடைந்தேன். அடியேன் கரையேறும் வழியை அருளிச்செய்க" என்றார். திலகவதியார் "இது சிவபிரானது அருளே, தம்முடைய திருவடியை அடைந்தோருக்கு அருள்புரியும் பரமசிவனைப் பணிந்து அவருக்குத் திருத்தொண்டுகளைச் செய்யும்" என்று பணித்தருளினார். மருணீக்கியார் அதை ஏற்று நிற்க; தபோதனியார் திருவருளை

நினைந்து திருநீற்றைத் திருவைந்தெழுத்தோதிக் கொடுத்தார். மருணீக்கியார் பணிந்து வாங்கி அணிந்துகொண்டார்.

திலகவதியார் திருப்பள்ளி எழுச்சிக் காலத்தில் திருவலகுந் திருமெழுக்குந் தோண்டியு மெடுத்துக்கொண்டு தம்பியாரை அழைத்துக்கொண்டுபோனார். மருணீக்கியார் திருவதிகை வீரட்டானேசுரரைத் தொழுது வலங்கொண்டு, விழுந்து வணங்கிச் சூலைநோய் நீங்கும்பொருட்டுச் சிவபெருமான்மேல்,

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே யிரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.

என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே சூலைநோய் நீங்கிற்று. அப்பொழுது மருணீக்கியார் சிவபிரானுடைய கருணைக்கடலில் அமிழ்ந்தி, சரீரம் முழுவதிலும் உரோமாஞ்சங் கொள்ள, கண்கள் ஆனந்த நீர் சொரிய, நிலத்திலே விழுந்து புரண்டு அயர்ச்சி கொண்டார். இப்படி நடக்கும் வேளையில் "நீ ஞானமயமாகிய தேவாரப் பதிகத்தைப் பாடினமையால், உனக்குத் திருநாவுக்கரசு என்னும் பெயரே ஏழுலகங்களிலும் வழங்குக" என்று சிவபெருமானுடைய திருவருளினாலே ஒரு அசரீரி ஆகாயத்திலே தோன்றியது. திருநாவுக்கரசு நாயனார் மனம் வாக்குக்காயம் என்னும் மூன்றினாலுந் திருப்பணி செய்ய விரும்பி, சிவசின்னந் தரித்துத் தியானமரு உணர்வும், துதிரூபமாகிய தோத்திரமும், உழவாரத் திருப்பணியிடையும் உடையவர் ஆயினார். திலகவதியார் சிவபெருமான் தமது தம்பியாரை ஆட்கொண்ட திறத்தை நினைத்து மகிழ்ந்து வணங்கினார். திலகவதியார் சிவபெருமானுடைய திருக்கோயிற் றிருத்தொண்டைச் செய்திருந்து மோக்ஷத்தையடைந்தார்.

திருக்கடவூரில் அவதரித்த கலயர் என்பவர் அவ்வூரில் வீற்றிருக்கும் வீரட்டநாதருக்குக் குங்குலியத்தூபம் இட்டுவந்தார்.

இட்டுவருங் காலத்தில் திருவருளால் வறுமை உண்டாயிற்று. உண்டாகியும், தாம் செய்துவந்த திருத்தொண்டிலே தவறுதவரா யிருந்தார். ஒரு தினம் அவர் மனைவியார் பசியினால் வருந்தும் புத்திரர்களைப்பார்த்து இரங்கி, தம்முடைய தாலியைக் கணவர் கையிற் கொடுத்து நெல்லு வாங்கிக்கொண்டு வரும்படி கூறினார். அதை வாங்கி நெல்லுக்குச் சென்றவர், ஒருவன் குங்கிலியப் பொதிகொண்டு எதிரேவரத் தாலியைக்கொடுத்து அப்பொதியை வாங்கிக்கொண்டு ஆலயத்துக்குச் சென்று அங்கே தூபமிட்டுக் கொண்டு இருந்தார். சிவபெருமான் அன்றிரவு அவரது வீடு முழுவதிலும் பொற்குவியலும் நெற்குவியலும் பிறகுவியலும் நிறையும்படி செய்தார். செய்து அம்மனைவியாருக்குக் கனவிலே கிருபைசெய்தார். உடனே அவர் விழித்துத் திருவமுது பாகஞ் செய்ய முயற்சித்தார். பின்னர், பெருமான் நாயனாருடைய கனவிலே தோன்றி, "பக்தனே, நீ வீட்டுக்குச்சென்று பாலுஞ் சோறும் உண்டு பசியை ஒழி" என்று திருவாய்மலர்ந்தருளினார். நாயனார் வீட்டை அடைந்து நிதிக்குவையைக் கண்டு, திருவருளைத் துதித்தார். மனைவியார் கணவரையும் சிவனடியார்களையுந் திருவமுதுசெய்வித்தார். குங்குலியக்கலயநாயனார் குங்குலியத்தூபமிடுதலாகிய திருப்பணியைச் செய்துகொண்டிருந்து சிவபதமடைந்தார்.

இச்சரித்திரங்களாலே சிவாலயத்தொண்டின் மகிமை உணர்த்தப்பட்டது.

---

## உஎ. திருவிளக்கிடுதல்.

ஆலயம் முதலியசிவசன்னிதானங்களிலும், பூசையிலும் யாகம் முதலியவற்றிலும் விளக்கிடுதல் மகா புண்ணியமாம். விளக்கிடுதல் சரியைத் தொழில்களுள் விசேடித்ததாகச் சொல்லப்பட்டது. தீபமேற்றுபவர்களும், தீபந் தாங்குபவர்களும், தீபத்துக்கு நெய் உதவுபவர்களும் பாபம் நீங்கி உண்மைஞான விளக்கம் அடைந்து சிவபெருமானுடைய திருவடியை அடைவார்கள். திருவிளக் கிடுதலாகிய சிவபுண்ணியத்தின் மகிமையை,

திருநாவுக்கரசு நாயனார்.

"பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்த ராகி
யரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளே வைத்து

விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினா லிடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னாரே."
என்னுந் திருச்செய்யுளால் உணர்க.

மாவலி என்பான் முற்பிறப்பில் எலியாகப் பிறந்து சிவாலயத்துள்ள விளக்கிலிடப்பட்ட திரியை அபுத்திபூருவமாகத் தீண்டி ஓங்கியெரியச்செய்த காரணத்தாலன்றோ புவனம் யாவையும் பொதுஅறப் புரக்கும் வாழ்வையும் ஈற்றில் முத்தியையும் அடைந்தான். இங்ஙனமாயின், புத்திபூருவமாகத் திருவிளக்கிடுவார் அடையும் பலன் இவ்வளவினதென்று கூறாதே உணர்ந்துகொள்ளலாம். மெய்யன்புடன் திருவிளக்கேற்றியவர்களுடைய சரித்திரங்கள் பல உள. நமிநந்தி அடிகள் நாயனாருடைய சரித்திரத்தைக் காட்டுவாம்.

சோழநாட்டிலேயுள்ள ஏமப்பேறூரிலே, அந்தணர் குலத்தில் விபூதியே மெய்ப்பொருள் என்று அறியுந் துணிபுடையவரும்,சிவபெருமானது திருவடிகளை அல்லும்பகலும் வழிபடுதலே இன்பமாகவுடையவருமாகிய நமிநந்திஅடிகள் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருவாரூரை அடைந்து வன்மீகநாதரை வணங்கி வருவாராயினார். ஒருநாள் வன்மீகநாதரை வணங்கி எழுந்து பெருவாழ்வடைந்து, பாங்கரிலுள்ள அரனெறி என்னும் ஆலயத்தை அடைந்தார். அடைந்து காதலோடுவணங்கிப் பல திருத்தொண்டுகள் செய்து, எண்ணில்லாத தீபமேற்றுதற்கு விரும்பியநாயனார், அப்பொழுது மாலைக்காலமாதலும் அப்பாற்செல்லிற் பொழுதுசெல்லும் என்று நினைத்துச் சமீபத்திலே ஒரு வீடிருந்தது கண்டு அது சமணர் வீடென்றறியாதுபோய்ச் "சிவாலயத்தில் விளக்கேற்றுதற்கு நெய் தாருங்கள்" என்று கேட்டார். அவர்கள் "கையிலே அக்கினி வைத்திருக்கும் நுங் கடவுளுக்கு விளக்கு மிகையாகும்; இங்கே நெய் இல்லை; நீரை முகந்து எரியும்" என்று கூறினார்கள். நமிநந்தியடிகள் அதைக் கேட்டுப் பொறாராகி, மனவருத்தத்துடன் சிவனது கோயிலை அடைந்து நமஸ்கரித்தார்.

அப்பொழுது "நமிநந்தியே! நீ உன் மனக்கவலையைநீக்குதி; சமீபத்திலிருக்கின்ற குளத்தில் நீரை முகந்து கொண்டுவந்து விளக்கேற்றுதி" என்றோர் அசரீரிவாக்கு எழுந்தது. அதுகேட்டு நமிநந்தியடிகள், சிந்தை தெளிந்து, திருவருளைத் துதித்து, குளத்

தில் இறங்கி, சிவநாமத்தை உச்சரித்து, நீரை முகந்துகொண்டு கோயிலிலே வந்து, அகலிலே முறுக்கிய திரியில் அந்நீரை வார்த்து, விளக்கேற்றினார். அது சுடர்விட்டெரிந்தது. அது நோக்கி அவ்வாலயம் நிறைய நாடறியும்படி நீரினாலே திருவிளக்கெரித்தார். திருவிளக்கு இரவிலே நின்று எரியும்படி, குறைகின்ற தகழிகளுக்கெல்லாம் நீர்வார்த்து, தமது வீட்டையடைந்து மறு நாட்காலையில் கோயிலுக்குவந்து, பல திருத்தொண்டுகளைப் பகலிற்செய்து இரவில் திருவிளக்கேற்றுவர். இந்தப் பிரகாரம் திருத்தொண்டுகளைச் செய்திருந்து சிவபிரானுடைய திருவடிகளை அடைந்தனர்.

---

## உஅ. சிவநின்மாலியம்.

சிவபெருமானுடைய திருமேனியில் தரிக்கப்பட்ட விபூதி, புஷ்பம், சந்தனம் முதலியவைகளும், அப்பெருமானுக்கு நிவேதிக்கப்பட்ட திருவமுது முதலியவைகளும் சிவநின்மாலியப் பொருள்களென்று சொல்லப்படும். இவைகளை அணிவதாலும் உட்கொள்ளுவதாலும் பாவம் தேய்ந்து முத்தியின்பம் கைகூடும். இந்த நின்மலப்பொருட்களை ஆசாரியராயினும், தீக்ஷை முதலியவற்றினால் உயர்ந்தோராயினும் கொடுக்கும்பொழுது, அவரை வணங்கி, இருகரத்தாலும் பெற்றுக்கொண்டு மீட்டும் வணங்குதல்வேண்டும். சிவநின்மாலியப் பொருள்களை ஒருகையினாலே பெற்றுக்கொள்ளுதலும், ஆசனத்திருந்து பெற்றுக்கொள்ளுதலும், அவைகளை இகழ்தலும், காலினாலே மிதித்தலும், கடத்தலும், அசுத்தமான இடங்களிலே வைத்தலும் உய்தியில் குற்றங்களாகும். இக்குற்றங்களைச் செய்தோர் தண்டிக்கப்படுவர்.

துருவாசமுனிவர் காசியிலே ஒரு சிவலிங்கத்தாபித்துப் பூசைசெய்தார். செய்யும்பொழுது, சிவபிரானது திருமுடியினின்றும் ஒரு தாமரைப்பூ விழ, அதை இருகரங்களாலும் ஏந்தி, கண், சென்னி, மார்பு ஆகிய தானங்களிலே அணைத்து, விடைபெற்றுக்கொண்டு சுவர்க்கத்துக்குச் சென்றார். செல்லும்பொழுது இந்திரன் அவுணர்களைக் கொன்று வெற்றிமாலைசூடிச் சேனைக்கடல் சந்திக்க, வெள்ளையானையில் பவனிவந்தான். அப்பொழுது தேவர்கள் கையுறைகளைக் கொடுத்து வணங்கினார்கள்.

துருவாசமுனிவர் தம்முடைய கரத்திலிருந்த பூவை நீட்டினார். மதியற்றவனாகிய இந்திரன் செல்வச்செருக்கினால் அப்புட்பத்தை ஒரு கையினால் வாங்கி மதயானையின் மத்தகத்தின்மேல் வைத்தான். யானை தன்மேல் வைக்கப்பட்ட தாமரைப்பூவை விழுத்திக் காலாலுழக்கிச் சென்றது.

துருவாசமுனிவர் அதுகண்டு கோபித்துப் பார்த்து, "மெய்யன்பர்கள் அருவருத்துத் தள்ளிய, எளிய செல்வத்தினாலாய செருக்கை யுடையவனே! நீ யாது காரியஞ் செய்தாய்? தேவர்கள் தரும் கையுறைகளையே பெரிதாக மதித்தாய்! முழுமுதற் கடவுளாகிய சிவபிரானது முடிமேல் சாத்தப்பட்ட பூவை வணங்காது வாங்கி, யானை மிதித்துச்சிந்த அதன்மேல் வைத்தாயே! விட்டுணுவினுடைய இறுமாப்பும், பிரமனுடைய இறுமாப்பும், உன்இறுமாப்பும் சிவபிரானைப் பூசித்த பேறென்று உணர்ந்திலையே! பேதையே! இச்சிவத்துரோகத்தினால் உன்னுடை தலையும் பாண்டியராசன் ஒருவனது வளையினாலே அறுக. இந்தவெள்ளையானை காட்டானையாகக் கடவது" என்று சபித்தார்.

தேவர்கள் நடுநடுங்கி, துருவாசமுனிவரை விழுந்து நமஸ்கரித்து, "சுவாமீ! நமது அரசனும் யானையும் கொடும் பாவஞ் செய்தமையினால் சபித்தீர்; இச்சாபத்தை நீக்கியருளுக" என்று பிரார்த்தித்தார்கள். துருவாசமுனிவர் திருவுளமிரங்கி, "சிவநிர்மாலிய நிந்தனை பரிகாரத்தினாலே நீங்காது; இந்திரனுக்குத் தலையளவாகவந்தது முடியளவாகப் போகக்கடவது; வெள்ளையானை காட்டுயானையாகி நூறு ஆண்டுகள் சென்றதற்குப் பின் முன் போலாகக் கடவது" என்று பிறிது சாபஞ்சொன்னார். துருவாசமுனிவர் சாபப்படி இந்திரன் உக்கிரபாண்டியனால் மகுடபங்கம் அடைந்து அவமானமுற்றான்.

வெள்ளையானை சுவர்க்கம் நீங்கி, அறிவிழந்து காட்டியானையாகி, நூறு வருடங் கழியக் கடம்பவனத்திற் புகுந்து, பொற்றாமரைவாவியைக் கண்டது. உடனே மெய்யறிவு தோன்ற ஸ்நானஞ்செய்து பழைய வடிவுபெற்று, பூசைசெய்து சுவர்க்கமடைந்து இனிது வாழ்ந்திருந்தது.

## ௨௯. சிவத்திரவியங் கவர்தல்.

சிவபெருமானை நிந்தித்தலும், குருசங்கமங்களை நிந்தித்தலும், ஈசுரத்துரோகங்களாகிய அதிபாதகங்களாவதுபோல, சிவனுக்கும் குருசங்கமங்களுக்கும் உரிய திரவியங்களை அபகரிப்பதும் ஈசுரத்துரோகமாகிய அதிபாதகமாம். ஈசுரத்துரோகம் எவ்வகைப்பட்ட பிராயச்சித்தத்தாலும் தீராது.

சிவத்திரவியங்களைக் கவர்ந்தவர்களும், கவருதற்கு உடன்பட்டவர்களும், கவருதற்கு முயன்றவர்களும், அவரோடு நட்புக் கொள்ளுபவர்களும் நரகத்துன்பமடைந்து, அது அனுபவித்த பின் பூமியிலே மலக்கிருமி முதலியனவாகப் பிறந்திறந்து, பின் மனிதப்பிறவி எடுத்து நோய்களினாலும் பசியினாலும் வருந்துவார்கள்.

விதாதா என்பவன் அங்கதேசத்திலிருந்து செங்கோல் செலுத்தி அரசாட்சி செய்துவந்தான். அவனுக்கு அசித்தன் என்பவன் புரோகிதனாய் இருந்தான். விதாதா இராச்சியபரிபாலனஞ் செய்துவருங் காலத்திலே, நாரதமுனிவர் அரசசபைக்குப் போனார். அரசன் அவரைக்கண்டு விரைந்து சென்றுபூசித்துத் தனது சிங்காசனத்தின்மீது இருத்தி வணங்கினான். முனிவர் அரசனை நோக்கி, "மன்னனே! உன்பிதா சுவர்க்கலோகத்தில் இந்திரனது சபையில் இருக்கின்றான். அவன், தான் மேலவர்களது சொற்படி தருமத்தைச் செய்து இந்திரபோகத்தைப் பெற்றதாகவும், நீயும் நல்ல தருமவழியாகநடந்து அரசாட்சிசெய்யத் தான் விரும்புவதாகவும் உனக்குச்சொல்லும்படி என்னிடத்திலே கூறினான்" என்று சொல்லியருளினார். அதன்பின்னர், அரசனது பக்கலாகவிருந்த அசித்தனைநோக்கி, "உன்பிதா நரகத்தில் மிகுந்த துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறான். யான் அவ்விடஞ்சென்றபொழுது உனக்குச் சொல்லும்படி மேல்வருமாறு கூறினான்.

"யான் அங்கதேசத்தில் ஒரு அரசனுக்கு மந்திரியாயிருந்தேன். பொருளாசை மிகுதியால் தருமத்தை வெறுத்துப் பெருந்திரவியத்தைத் தேடிப் பாதுகாத்தேன். அப்பெரும்பாவத்தால் இந்த நரகத்திற்கிடந்து வருந்துகின்றேன். யான் சம்பாதித்த

பொருள்களை என்வீட்டுத் தூணடியிற் புதைத்துவிட்டேன்; அதை என் மகனுக்குச் சொல்லவில்லை. இவைகளைத் தேவரீர் அவனுக்குக் கூறி அத்திரவியத்தை எடுத்துத் தருமத்தைச்செய்து, என்னையும் நரகத்தினின்று மீட்கும்படி சொல்லவேண்டும்"

இவ்வாறு அரசனும் மந்திரியும் தெரியும்படி கூறிய நாரத முனிவர் மீண்டார். அசித்தன் தனது வீடுசென்று தூணின் கீழ்த் தோண்டிப் புதையலை எடுத்துத் தருமங்களைச் செய்தான். புண்ணியங்களைச் செய்தமையால் அவன் தாதை நரகத்தினின்று நீங்கிச் சுவர்க்கத்தை அடைந்தான்.

ஒரு தினம் அரசனும் மந்திரியும் பிராமணர்களை வருவித்துத் தானஞ்செய்யத் தொடங்கினார்கள். தொடங்கிய அவர்கள் உண்ணப்படுவனவற்றைப் படைத்தார்கள். சிலருக்கு வாழைப்பழம் படைக்காமையின், அப்பிராமணர்கள் கறுத்து நோக்கி, "எங்களுக்குமாத்திரம் வாழைப்பழம் அரிதாய்விட்டதா?" என்றார்கள். அரசன் அசித்தனை நோக்கி, "நூறு வாழைப்பழம் அழைத்தி" என்று கூறினான். அப்பொழுது ஒரு பிராமணன் "இதற்கு மேற்கே வீமேசுரம் என்னுஞ் சிவத்தலம் இருக்கின்றது. அவ்வாலயத்துக்குரிய வாழைச்சோலையில் பழுத்தகுலை இருக்கின்றது" என்று கூறினான். அசித்தன் என்பான் அங்கே நின்ற சிலரை நோக்கி, அதற்குத்தக்க விலையைக்கொடுத்து அனுப்பினான். அவ்வாலயத்தில் உள்ளவர்கள் சிவத்திரவியங்களின் உயர்வை எடுத்துச்சொல்லி, "சிவபெருமானுடைய அபிடேகத்திற்கன்றி வேறொன்றற்குங் கொடுப்பதில்லை" என்றார்கள். ஏவலாளர்கள் திரும்பிவந்து அரசனுக்குக்கூறினார்கள். அசித்தன் அவர்களை நோக்கி, "விலையை அவர்களிடம் போட்டுவிட்டுத் தகுதியான நூறு வாழைப்பழங்கள் எடுத்துவாருங்கள்" என்று கோபத்தோடு சொல்லியனுப்பினான். மந்திரியினுடைய கட்டளைப்படி ஏவலர்கள் தோட்டத்தினுட்போய், பணத்தை எறிந்துவிட்டு, பெரியகுலையாக எடுத்துக்கொண்டுபோய்க் கொடுத்தார்கள். அரசனும் மந்திரியும் அப்பழங்களைப் பிராமணர்களுக்குப் பரிமாறித் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றினார்கள்.

அவ்வாலயத்திலுள்ள மெய்யன்பினராகிய மறையவர்கள், ஏவலாளர் வீசிய பணத்தை எடுக்காது, அரசனுக்கு முறையிட்டார்கள். அரசன் அவர்கள் கூறியதைச் செவிசாத்தினனல்லன்.

அரசன் சிவத்திரவியங் கவர்தற்கு இணங்கியமையினால் அவன் பிதாவை நரகத்திற் செலுத்தினார்கள். அரசனுடைய நாட்டையும் மனைவியையுங் குறுநிலமன்னர் கைக்கொண்டார்கள். அசித்தன் என்பவனது கண்களையும் தோண்டி எறிந்தார்கள். அவன் இறந்து நரகத்தையடைந்தான். அவன் செய்த புண்ணியத்தினால் சுவர்க்கத்தை அடைந்த பிதாவும், நரகத்தை அடைந்தான். வாழைப்பழத்தைத் தந்தாலல்லது உண்ணேனென்றபிராமணர்களும், சிவனுக்குரிய அப்பழங்களைக் கொண்டு வந்தவர்களும், அத்தோட்டத்திலிருக்கிறதென்று அடையாளங் காட்டினவனும் ஆகிய இவர்கள் எல்லோரும் நரகத்தை அடைந்தார்கள். அரசன் க்ஷயரோகத்தினால் வருந்தி நரகத்தை அடைந்தான்.

சோமேசர் முதுமொழி வெண்பா.

நின்னபிடே கப்பழத்தை நீண்மறையோர்க் கீந்தவிறை
துன்னுகுடி யோடழிந்தான் சோமேசா—பன்னில்
நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

## ௩௦. குருசங்கம வழிபாடு.

தீக்ஷைவைத்தவர், வித்தை கற்பிப்பவர், பதிபசுபாச உண்மைகளைப் போதிப்பவர், சமயாசாரக் கிரியைகளைச் செய்பவர் முதலியோர் குரு எனப்படுவர். நிருவாண தீக்ஷிதர், விசேட தீக்ஷிதர், சமயதீக்ஷிதர் என்னும் முத்திறத்துச் சிவபக்தர்கள் சங்கமம் எனப்படுவர். குருவையுஞ் சிவனடியாரையும் மனிதனென்று பாவியாது சிவனென நினைத்து மனம் வாக்குக் காயங்களினாலே வழிபடல் வேண்டும். குருசங்கமங்களிடத்து அன்பு செய்யாது அவமானஞ்செய்து சிவனிடத்துப் பக்தியுள்ளவர் போல் ஒழுகுதல் வயிற்றைவளர்க்குங் காரணமாகவும், இடம்பங் காரணமாகவுஞ் செய்யும் நடிப்புமாத்திரையேயன்றி வேறில்லை.

சிவபக்தியுடையவர்களுக்கு அச்சம்பந்தம் உள்ளவருடைய இணக்கம் சிவபக்தியை வளர்க்கும். அச்சம்பந்தம் இல்லாதவருடைய இணக்கம் சிவபக்தியைக் கெடுக்கும். குருவும் அடியாரும் தம் வீட்டுக்கு வரின் இன்சொற்சொல்லி ஆசனத்திலிருத்தி நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு விபூதி வாங்கித்தரித்து, மீட்டும் நமஸ்கரித்து அவர் "இரு" என்றபின் இருத்தல் வேண்டும்.

நாம் பிறரை வணங்கும்போது அவ்வணக்கம் சிவனுக்கென்று சிந்தித்தல் வேண்டும். தம்மைப் பிறர் வணங்கும்போது இவ்வணக்கம் நமக்கல்ல; நம்மிடத்து இருக்கும் சிவனுக்காம் என்று சிந்தித்தல் வேண்டும். மாணாக்கர் தாம் குருவுக்கு எவ்வளவு பொருள் கொடுப்பினும், தம்மைக் குருவுக்கு அடிமையாக ஒப்புக்கொடுத்தலேயன்றி அப்பொருளைப் பிரதிஉபகாரமாக நினைத்தல் கூடாது; தீக்ஷாகுரு முதலாயினோர் சிவபதமடைந்த மாசநட்சத்திரத்திலாயினும் திதியிலாயினும் அவரைக் குறித்துக் குருபூசை செய்துவரல் வேண்டும்.

இன்னும் தமிழ்வேதத்தைத் திருவாய்மலர்ந்தருளிச் சமயஸ்தாபனஞ் செய்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய சமயகுரவர் நால்வருக்கும், பெரியபுராணத்தைத் திருவாய்மலர்ந்தருளிய சேக்கிழார்நாயனாருக்கும், மெய்கண்டதேவர் முதலிய சந்தானாசாரியர் நால்வருக்கும், திருக்குறளைத் திருவாய்மலர்ந்தருளிய திருவள்ளுவநாயனாருக்கும் இயன்றமட்டும் குருபூசை செய்தல் அவசியமாம். குருபூசை செய்ய இயலாதவர் இயன்ற பொருள்களைக்கொடுத்துப் பூசையைத் தரிசித்தல்வேண்டும். அதுவும் இயலாதவர் கறிதிருத்துதல் முதலிய தொண்டுகளைச்செய்ய வேண்டும்.

குருவுக்கும் சிவனடியாருக்குஞ் செய்யத்தகாத குற்றங்கள்:—கண்டவுடன் இருக்கைவிட்டெழாமை, அவர் எழும்பும்போது உடன் எழாமை, அவர் திருமுன்னே உயர்ந்த ஆசனத்திருத்தல், காலைநீட்டிக்கொண்டிருத்தல், போர்த்துக்கொள்ளுதல், அவர் தரும் பொருளை ஒரு கையாலே வாங்குதல், அவருக்குக்கொடுக்கும்பொருளை ஒரு கையாற் கொடுத்தல், அவர் கோபிக்கும்போது தாமுங்கோபித்தல், அவருடைய ஆசனம் முதலியவற்றைத் தாம் உபயோகித்தல் முதலியவைகளாம்.

கிருதயுகத்திலே தேவராசனாகிய இந்திரன் தேவசபையில் அரம்பையர்களுடைய ஆடலையும் பாடலையும் கண்டும் கேட்டும் களிப்புறுவானாயினான். அப்பொழுது தேவகுருவாகிய வியாழபகவான் அங்கே வந்தனர். இந்திரன் அவர் வருதலைக் கண்டும் இருக்கைவிட்டெழுந்து வழிபடாது வாளா இருந்தான். அது கண்ட வியாழபகவான் அவ்விடத்தினின்று போயினர். இந்திரனுடைய செல்வம் சிறிதுசிறிதாகக்குன்றியது. இந்திரன் குருவை நிந்தித்த பாதகத்தினால் இது விளைந்தது என்று நினைந்து, குருவை எவ்விடத்துந் தேடிக்காணாது, பிரமதேவரிடத்திற் சென்று நிகழ்ந்ததை விண்ணப்பஞ்செய்தான். பிரமதேவர் குருநிந்தனையால் இந்திரனுக்கு மேல்நிகழ்வதனை அறிந்து, "நீ உனது குருவாகிய வியாழனைக் காணுமளவும், அவுணனாகிய விசுவரூபனை உனக்குக் குருவாக்கிக்கொள்ளுதி" என்றார். இந்திரன் விசுவரூபனைக் குருவாக்கிக்கொண்டு, அவனை ஒரு யாகஞ் செய்யும்படி வேண்டினான். அவுணன் புறத்திலே தேவர்களுக்கு ஆக்கம் பெருகுக என்று கூறி, அகத்திலே அசுரர்க்கு உய்யுந்திறம் உண்டாகுக என்று செய்தான். இவ்வஞ்சனையை அறிந்த இந்திரன் தன் குலிசாயுதத்தினாலே விசுவரூபனுடைய தலைகள் மூன்றையும் வெட்டினான். துவட்டா தன் குமாரனாகிய விசுவரூபனை இந்திரன் கொன்றமையைக் கேள்வியுற்று, ஒரு யாகஞ்செய்து யாககுண்டத்தினின்று விருத்திரனைத் தோற்றுவித்து, இந்திரனைக் கொல்லும்படி ஏவினான். இந்திரன் அவனைத் தனது குலிசத்தினாலே கொன்றான். உடனே பிரமகத்திதோஷம் இந்திரனைப் பிடித்துக்கொண்டது. இந்திரன் அச்சங்கொண்டு ஒரு தடாகத்தில் விழுந்து தாமரை நாளத்தில் ஒளித்துக்கொண்டான்.

அதன்பின்பு தேவர்கள் பிரகஸ்பதிபகவானை வணங்கி, தமக்கு அரசனில்லாக் குறையை விண்ணப்பித்தார்கள். வியாழன் தடாகத்தில் ஒளித்துக்கொண்டிருந்த இந்திரனைக் கூவி, வெளிப்பட்டுவந்த அவனை அழைத்துக்கொண்டு திரும்பினார். இந்திரன் "சுவாமி! இப்பழி நீங்குவது எங்ஙனம்?" என்றான். வியாழன் "இப்பழி பூமியிலேயே தீரும். அங்கே வா" என்றார். இந்திரன் குருவுடன் வந்து பல தலங்களை வணங்கி, கடம்பவனம் என்னும் பெயரையுடைய மதுரையை அடைந்தான். அவனைக்

கொலைப்பழி விட்டு நீங்கியது. அங்கே சிவலிங்கத்தைக் கண்டு பூசித்து வணங்கினன். சிவபெருமான் தோன்றி, "சித்திரை மாதத்தில் வரும் சித்திரைநக்ஷத்திரத்தில் நம்மை வந்து பூசிப்பாயாக; உனக்கு முத்தியைத் தருவோம்" என்று மறைந்தருளினர். பின் குருவைப் பூசித்து, "அபராதம் பொறுத்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்து, சுவர்க்கமடைந்து அரசாட்சி செய்திருந்தான்.

## ருக. நக்கீரர்.

பொய்யடிமையில்லாப் புலவர்களாகிய நக்கீரர் முதலிய வித்துவான்களை உயிர்த்துணைவர்களாகக்கொண்டு ஒழுகுகின்ற வங்கியசூடாமணி என்னும் பாண்டியன், வசந்தகாலத்தில் ஒரு நாள் மேல்மாளிகையில் தன்மனைவியோடிருந்தான். அப்பொழுது மந்தமாருதத்தோடு தன்மனைவியின் கூந்தல் வாசனைவீச, அப்பாண்டியன் தன்மனையாளது கூந்தலின் இயற்கைவாசனையாகும் என்றுமதித்து, அதனைப் பிறருக்குப் புலப்படுத்தாது தன் மனதிற்பொருந்திய நுண்பொருள் விளங்கும்படி ஒரு செய்யுள் செய்யும் புலவன் இதைக்கொள்க என்று, ஆயிரம்பொன் நிறைந்த ஒரு கிளியைச் சங்கமண்டபத்தின்முன்னே தூக்கினன். புலவர் யாவரும் தமக்குத்தோன்றியவாறு பாக்களைப்புனைந்து அரசன் முன்னர்சென்று சாற்றினர். அவைகளனைத்தையும் பாண்டியன் வெறுத்ததனால் அவர்கள் வறிதே அகன்றனர்கள். அப்பொற்கிளி அறுப்பவரின்றி இருந்தது. இருக்குங்காலத்தில் பஞ்சம் வந்தது.

சோமசுந்தரக்கடவுளை வழிபடும் ஆதிசைவராகிய தருமி என்பவர், தமக்குப் பொருள் வரவின்மையாற் கவலையுற்றுச் சோமசுந்தரக்கடவுளை அடைந்து அவருக்கதனை முறையிட்டார். கடவுள் அருள்சுரந்து, "அன்பனே! நீ வருந்தேல்; பாண்டியராசன் தன் கருத்தைவிளக்கி, ஒரு செய்யுள் செய்யும் புலவன் கைக்கொள்ளும்படி ஆயிரம் பொன்னை அமைத்ததோர் கிளியைச் சங்கமண்டபத்துக்குமுன்னே தூக்கியிருக்கின்றான்; இப்பாடலை உரைத்து அதைப்பெற்றுக்கொள்ளுதி" என்று,

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ

பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே"

என்னும் பாசுரத்தை அளித்தருளினார்.

அதனாற் சந்தோஷம் மிக்க தருமியும் அவ்வரசனுக்கு அப்பாடலாகிய அமிர்தத்தைப் புகட்டினான். பாண்டியன் தான் கருதியபடி இருத்தலால் மகிழ்ந்து, "இப்பாடலைச் சங்கப்புலவர் முன்னிலையில் அரங்கேற்றுவீராக" என்றான். தருமி சபையில் அரங்கேற்றப் புலவர்கள் மகிழ்ந்தார்கள். நக்கீரர் கல்விச் செருக்கினால் "நீயுரைத்த பாட்டுப் பிழையுடைத்து" என்றார். அதுகேட்ட தருமி துக்கமுடையராய் விரைந்துசென்று ஆலவாய் அடிகளுக்கு முறையிட்டார். பரமசிவன் ஒரு புலவருருக் கொண்டு, சங்கப்புலவரிடத்துச் சென்று, "எமது செய்யுளுக்குக் குற்றங்கூறினவர் யாவர்?" என்றார், நக்கீரர் யானே என்று தருக்கிக் கூறினார். சிவபெருமான் "குற்றம்யாது சொல்" என்றார். நக்கீரனார் "மகளிரது கூந்தலுக்கு நாற்றம் செயற்கையாலல்லாமல் இயற்கையாகவுளதோ? ஆகையால் இக்கவி குற்றமுடைத்து" என்றார். பெருமான் "தேவமகளிர் கூந்தலுக்கு மணம் இயற்கையாக உளதன்றோ" என்றார். நக்கீரர் "தெய்வமகளிர் கூந்தலும் நறு நாற்றத்தை இயற்கையாகவுடையதன்று" என்றார். சோமசுந்தரக்கடவுள் நீ வழிபட்டேத்தும் காளத்திநாதரது பாகத்தமர்ந்த ஞானப்பூங்கோதையினது கூந்தல் எத்தன்மையது?" என்று வினவினார். நக்கீரர் செருக்கினால் "அதுவுஞ் செயற்கைமணமுள்ளதே" என்று சாதித்தனர். அது கண்டு பரமசிவன் தமது நெற்றிக்கண்ணையும் திருச்சடையையும் காட்டியருளினார், நக்கீரர் "வடிவமுழுதுங் கண்களைக் காட்டினாலும், செய்யுள் பிழையுடையதே" என்றார். கடவுள் இயற்கைவாசனை வீசும் அம்பிகையினது கூந்தலைச் செயற்கை மணமுடையதென்று இழித்துக்கூறினை; ஆதலால் நீ குட்ட நோயடைந்து அலைக" என்றார். நக்கீரர் சரீரம் நடுங்கி இரங்கி, "கருணைக்கடலாகிய எந்தையே! உண்மை ஞானமில்லாத அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொண்டு, திருவருள் புரிக" என்று விண்ணப்பஞ்செய்தனர். பெருமான் திருவுள

மிரங்கி, "நீ கைலைகாணில் இந்நோய் தீரும்" என்று பணித்து மறைந்தருளினர். தருமி பொற்கிழிபெற்று மகிழ்ந்தார்.

தமிழ் நாவலர் கைலை செல்ல விரும்பி, மற்றைப் புலவர்களி டத்துப் பிரியாவிடை பெற்றுக்கொண்டு, பல தலங்களையும் வணங்கி, இமயத்தை யடைந்து, அங்கேயுள்ள பொய்கை யொன்றில் நீராடி, அதன் கரையிலுள்ள ஆலவிருட்சத்தடியில் தியானஞ்செய்திருந்தார். அப்பொழுது ஒரு கிளையினின்றும் ஓர் இலையானது பாதி நிலத்திலும் பாதி சலத்திலுமாக விழுந்தது. நிலத்தில் விழுந்த பாதி பறவையும், நீரில் விழுந்த பாதி மீனுமா கத் தம்முள் ஒன்றையொன்று இழுத்தன. நக்கீரர் அவ்வதி சயத்தைக் கண்டு தியானநிலை தவறினர். அற்றைப்பொழுதில் ஒரு பெரிய பூதம் நக்கீரரைத் தூக்கிக்கொண்டு சென்று, இவர் போல் தியானத்தினின்றும் வழுவிய தொளாயிரத்துத் தொண் ணூற்றொன்பதின்மருடன் மலைக்குகையினுள்ளே வைத்து நீரா டச்சென்றது. அக்குகையினுள்ள அவரெல்லாம் ஏக்கமுற்றுப் புலவரை நோக்கி, "நீ இங்கே வருதலால் ஆயிரம் என்னுந் தொகையராயினோம்; இனி நாம் அப்பூதத்துக்கு இரையாவோம்" என்று வருந்தாநின்றார்கள். நக்கீரர் அதைக்கேட்டு வருந்தாது சுப்பிரமணியக்கடவுளுக்கு இத்துன்பத்தை நீக்குதல் அரிதாமோ என்று நினைத்துத் திருமுருகாற்றுப்படை என்னும் பிரபந்தத்தைப் பாடிமுடித்து அக்கடவுளுடைய திருவடிமீது சாத்தினர். முருகக் கடவுள் மயில்வாகனருடராய் எழுந்தருளி, நக்கீரரை அப்பூதம் உண்ணுங்காதலால் அணுகும்பொழுது ஒரு தண்டினால் அதனை அடித்துச் சங்கரித்து, நக்கீரரையும் மற்றையோரையுஞ் சிறை விடுத்தருளினர்.

நக்கீரர் அறுமுகக்கடவுளை வணங்கி, "ஐயனே! அடியே னது செருக்கினால், திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் எந்தை எனக்குக் குட்டநோயைத் தந்து, இது கைலை தரிசித்தாற்றீரும் என்றருள்செய்தார். ஆதலால் திருக்கைலாசத்தையுங் காட்டி எனது நோயை நீக்கியருளுக" என்று பிரார்த்தித்தார். முருகக் கடவுள் எமது பிதாவாகிய சிவபெருமான் இன்ன கைலை என்று சுட்டியுரையாமையால் தென்கைலையிலும் இப்பிணி நீங்கும் என்று திருவுளங்கொண்டு, நக்கீரருக்கு ஒருதடாகத்தைக் காட்டி

"நீ இத்தடாகத்திலேமூழ்கின் திருக்கைலாசகிரியைக்காண்பாய்" என்றார். நக்கீரர் சுப்பிரமணியக்கடவுளைத் தொழுது தடாகத்தில் ஸ்நானஞ்செய்து தென்கைலை தோன்றப் பொன்முகலியாற்றில் எழுந்தார்.

நக்கீரர் உடனே வியாதியகன்று, விழிகள் நீர் சொரியக் கைகள் சிரமேலேற காளத்திநாதராகிய சிவலிங்கப்பெருமானையும் ஞானப்பூங் கோதை அம்மையாரையும் பணிந்து, திருவைந்தெழுத்தை உச்சரித்து அன்புமயமாகிக் கைலை வேறு காளத்தி வேறு என்னுஞ் சிந்தனையின்றி கைலை பாதி காளத்தி பாதி என்னும் வெண்பா அந்தாதியைப் பாடினார். சிவபெருமான் அவருக்கு அருள்செய்யுமாறு திருவுள்ளங்கொண்டு, எதிரே தோன்றி "அன்பனே! உனக்கு வேண்டியனவற்றைக் கூறுதி" என்றருள்செய்தார். நக்கீரதேவர் "அடியேனது உடற்பிணியைப் போக்கிய அருட் குன்றே! அறிவைமூடும் ஆணவப்பிணியையும் நீக்கி, தேவரீரது திருவடிநீழலில் இருத்தியருள்க" என்று விண்ணப்பித்தார். சிவபெருமான் மலபரிபாகமும் சத்திநிபாதமுமுற்ற நக்கீரரைத் தமது திருவடியில் இருத்தியருளினார்.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

[திருத்தாண்டகம்.]

மின்காட்டுங் கொடிமருங்கு லுமையாட் கென்றும்
  விருப்பவன்காண் பொருப்புவலிச் சிலைக்கை யோன்காண்
நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி
  நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்
பொன்காட்டக் கடிக்கொன்றை மருங்கே நின்ற
  புனக்காந்தள் கைகாட்டக் கண்டு வண்டு
தென்காட்டுஞ் செழும்புறவிற் றிருப்புத் தூரிற்
  றிருத்தளியான் காணவனென் சிந்தை யானே.

---

## ௰௨. சுப்பிரமணியக்கடவுளும், ஔவையாரும்.

சரசுவதியின் அம்சமாய்ப் பிறந்து, விநாயகக்கடவுளைப் பூசித்து அக்கடவுளின் திருவருளைப்பெற்ற ஔவையார், அரசசபையை வெறுத்து, கல்விச்செருக்கினால் அகங்காரமுற்றுக் காட்டுமார்க்கமாக வந்தார். சுப்பிரமணியக்கடவுள் ஔவை

யாரின் கல்விச்செருக்கை நீக்கவும், ஒரு கலாவினோதஞ்செய்ய வுந் திருவுளங்கொண்டருளினார்.

ஔவையார் வரும்வழியில் குமாரக்கடவுள் பசுக்களை மேய்க்கும் ஒரு இடைச்சிறுவராகி, கோல் பொருந்திய கையை யுடையவராய் நாவல்மரத்திலேறிப் பழம் தின்பவர்களைப்போல நடித்துநின்றார். பசியினால் மிக வருந்தி நின்ற ஔவையார் சுப்பிர மணியக்கடவுளாகிய இடைச்சிறுவரை நோக்கி, குமாரனே! பழத்தில் மிக்க விருப்பமுடையவனாக இருக்கின்றனை! என் பசி நீங்கச் சில பழம் கொடுக்க'' என்றார். "தாயே சுடுபழம் தரு வோமா? சுடாப்பழம் தருவோமா? எதுவென்று கூறுவாயா னால் இப்பொழுதே கொடுப்பாம்'' என்றார்.

ஔவையார் கேட்டுத் திகைத்து நாவற்பழங்களில் சுடும் பழத்தை எங்கேயாவது கண்டதும் கேட்டதுமில்லை. சுடாத பழங்களே எங்குமிருப்பதைக் கண்டும் கேட்டுமுள்ளோம். இதென்ன புதுமையென்றுலோசித்து அதனை அறிவோமென்று, "பிள்ளையே! சுடுகனி தருக'' என்று சொன்னார். குமாரசுவாமி யாகிய பாலவடிவினர் நன்றாய்க்கனிந்த சில பழங்களை மண வின்மீது எறிந்தார். அப்பழங்களை ஔவையார் எடுத்துப் பசிக் கொடுமையினால் விரைந்து உண்பதற்கு விரும்பிப் பழங்களி லொட்டியிருந்த மண்போகுமாறு வாயால் ஊதினார். அதனைப் பார்த்த எம்பெருமான் "கிழவியே! சுட்டதுபோலும்? சுட் டதுபோலும்?'' என்று திருக்கரங்களைத் தட்டிச் சிரித்தார். ஔவையார் அதுகேட்டு மிகவும் நாணி, "அறிவான்முதிர்ந்து எமக்கு நிகராவார் ஒருவருமிலரென்று இறுமாந்தோமல்லவா? அகத்தியமுனிவருடைய சிறியகையுள் பெருங்கடலாழ்ந்தள வாக்கி ஆசமிக்கப்பட்டதே! சிற்றுளியாலே பெருமலை தகர்ந்து ஒழிதல் கண்கண்ட விஷயமே. அறிவு யாரிடத்தடங்கிற்று? அறி வுக்கும் எல்லையுண்டோ? இதுநாள்வரையும் எவராலும் வெல்லப் படாமல் கூரிய மதிகொண்ட புலவர்களை யெல்லாம் வென்று சிறப்புற்று விளங்கினேன். இத்தினத்தில் ஒருசிறுவன் வென்கச் செய்தனனே. இது என்னே!'' என்று துன்பசாகரத்தில் ஆழ்ந் தார்.

குமாரக்கடவுள் கண்டு, "முதியாய்! நீ வருந்தலை'' என்று தமது சுயவடிவத்தைக்காட்டி முன்னின்றார். ஔவையார் பரவச

மாய், பன்முறை துதித்துநின்றார். சுப்பிரமணியக்கடவுள் கிருபாநோக்கஞ்செய்து, "பண்டிதையே! உன்னுடன் கலாவினோதஞ்செய்ய வந்தோம். இனியது எது?" என்று வினவியருளினர்.

ஔவையார்.

"இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்
இனிது இனிது வேகாந்த மினிது
வதனினு மினிது வாதியைத் தொழுத
லதனினு மினிது வறிவினர்ச் சேர்த
லதனினு மினிது வறிவுள் ளோரைக்
கனவினு நனவினுங் காண்பது தானே"

என்று கூறினர்.

அதைக்கேட்டருளிய கடவுள் "கலைக்கிழத்தியே! நன்று நன்று. இனியது கூறினை; கொடியனவற்றையும் இவ்வுலகத்தார் அறிந்தொழுகுமாறு தெரிவிப்பாய்" என்று கட்டளை செய்தருளினர்.

அதற்கு விடையாக,

"கொடியது கேட்கி னெடியவெவ் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது
வதனினுங் கொடிது விளமையில் வறுமை
யதனினுங் கொடிது வாற்றொணாக் கொடுநோ
யதனினுங் கொடிது வன்பிலாப் பெண்டி
ரதனினுங் கொடிதிங் கவையி
னின்புற வவள்கையி லுண்பது தானே."

என்ற கவியை ஔவையார் சொற்றனர். அது கேட்ட முருகவேள், "ஔவையே! அரியவற்றுளெல்லாம் அரியது யாது?" என்று வினவியருளினர்.

ஔவையார்,

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரியது மானுட ராதலரிது
மானுட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையு
ஞானமுங் கல்வியு நயத்த லரிது
ஞானமுங் கல்வியு நயந்த காலையுந்
தானமுந் தவமுந் தாஞ்செய்த லரிது
தானமுந் தவமுந் தாஞ்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே."

என்று உத்தரங் கூறினார். "பெரியவற்றுளெல்லாம் பெரிது யாது" என்று குமாரக்கடவுள் கேட்டருளினர். ஔவையார் அவருடைய திருவடிகளை வணங்கி, "எங்கள் தெய்வமே! தேவரீர் அறியாததொன்றுண்டோ? எல்லாவறிவுமுடைய தேவரீர் நாயினுங்கடைப்பட்ட பேதையேனை வினவல், பிதாமாதாக்கள் தமது சிறுவர்களது வாயினின்றுண்டாகும் குதலை வார்த்தையைக்கேட்டுச் சந்தோஷமுறுதல் போன்றது." என்று கூறுவாராயினர்.

"பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரிமா லுந்தி வந்தோன்
கரிய மாலோ வலைகடற் றுயின்றோ
னலைகடல் குறுமுனி யங்கை யிலடக்கங்
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ வரவினுக் கொருதலைப் பார
மரவோ வுமையவள் சிறுவிரன் மோதிர
முமையோ விறைவர் பாகத் தொடுக்க
மிறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கந்
தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே."

என்று கூறிய உத்தரத்தைக் குமாரக்கடவுள் கேட்டு மகிழ்ந்து, "பண்டிதாய்! உனது விடைகளைக்கேட்டுச் சந்தோஷமுற்றோம்; பசி, பிணி, நரை, திரை முதலியன இல்லாதபடி நெடுங்காலம் வாழ நினைப்பையேயாகில் சேரநாட்டிலே பெருமலையின் முழையிடத்தே கருநெல்லியிலே அமிர்தம் போன்ற இனிய பழமொன்றிருக்கின்றது. அரசனாகிய அதிகமான் நெடுமான்வஞ்சியைப் பாடிக்கேட்பாயானால் தருவான். அதை உண்டு நன்கு வாழ்குதி." என்று கிருபைசெய்து மறைந்தருளினர். அத்திருவாக்கின்படியே ஔவையார் கொங்கநாட்டில் கருவூரை அடைந்து, அங்கே அரசாட்சி செய்திருந்த அதிகமாநெடுமான் வஞ்சியைப்பாடி நெல்லிக்கனியுண்டுநெடுநாள் வாழ்ந்திருந்தனர்.

## கக. முசுகுந்தச்சக்கரவர்த்தி.

முன்னொருநாளிலே திருக்கைலாசமலையிலுள்ள சோலையில் உமாமகேசுவரர் வீற்றிருக்கும்பொழுது, ஒரு முசுவானது அவர் இருவர்மீதும் வில்வபத்திரங்களைப் பறித்துச் சொரிந்துகொண்டிருந்தது. சிவபெருமான் திருவுளமிரங்கி அதற்கு மெய்ஞ்ஞானத்தைக் கொடுத்தருளினர். ஞானமுதிக்கப்பெற்ற முசு பார்வதிபரமேசுவரர்களை அன்போடு வணங்கி, "அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளுக" என்று பிரார்த்தித்தது. சிவபெருமான் 'நீ பிழைசெய்திலாய்; வில்வபத்திரங்களைக் கொண்டு நம்மைப்பூசித்தாய்; ஆகலால் நீ மனுவமிசத்திற்பிறந்து உலகமுழுவதையும் அரசாளுவாய்" என்று அருள்புரிந்தார். முசு அத்திருவாக்கைக் கேட்டுத் துன்பமடைந்து, "அடியேன் உங்களைத் தரிசித்து அழியாப்பெருஞ் செல்வத்தை அனுபவித்துக்கொண்டிருத்தலைவிட்டு, அழியுஞ்செல்வவலையில் அகப்படுவேனுயின் எங்ஙனம் உய்வேன்?" என்றது. சிவபெருமான் கேட்டு, "முசுவே! நீ பூமியை அரசாண்டிருந்து பின்னர் நம்மிடத்து வருதி" என்று கூறியருளினர். அப்பொழுது அம்முசுக்கலை, "எம்பெருமானே! இம்முசுவின் முகத்தோடுபிறக்கும்வண்ணம் அருள்புரிக" என்று கூறிற்று. சிவபெருமான் அவ்வரத்தை அதற்குக் கொடுத்தருளினர். முசுக்கலை பூமியில் வந்து அரிச்சந்திரமகாராசனுக்கு ஒரு வழித்தோன்றலாய் முகம் முசு மற்ற அவயவங்களெல்லாம் பேரழகுடையதாகிப் பிறந்து முசுகுந்தன் என்னும் நாமத்தைப் பொருந்தியிருந்தது. இவ்வாறு பிறந்த முசுகுந்தன் சோழநாட்டிலுள்ள கருவூரிலிருந்துகொண்டு செங்கோல் செலுத்திவருவானாயினன்.

அம்முசுகுந்தச் சக்கரவர்த்தி ஒருநாள் தனது குலகுருவாகிய வசிட்டமுனிவரிடத்திற்போய் அவருடைய பாதங்களை வணங்கி, "சுவாமீ! சுப்பிரமணியக்கடவுளுடைய விரதங்களையெல்லாம் கூறியருளுக" என்று கேட்டான். வசிட்டமுனிவர் சுக்கிரவார விரதம், கார்த்திகை விரதம், கந்தசட்டி விரதம் ஆகிய சுப்பிரமணிய விரதங்களை அநுட்டிக்கும் முறையையும் அநுட்டித்தோர்பெற்ற பேறுகளையும் அவன் அறியும்படி விரிவாக

உபதேசித்தருளினர். அரசன் இருஷியிடம் உத்தரவுபெற்று அள வில்லாத காலம் முருகக்கடவுளைத் தியானித்து அவ்விரதங்களை அநுட்டித்தான். முருகக்கடவுள் வீரவாகு முதலிய வீரர்களும் பூதர்களுஞ் சூழத்தோன்றி அருளினர். முசுகுந்தன் முருகக் கடவுளை வணங்கி, "அடியேன் பூமியை ஆளும்படி வீரவாகு முதலிய வீரர்களைத் துணைவர்களாகத் தந்தருளுக" என்று பிரார்த் தித்தான். சுப்பிரமணியக்கடவுள் அவ்வாறே கொடுத்து அருள் புரிந்து மறைந்தனர். முசுகுந்தன் வீரவாகு முதலியோருக்குப் பல வரிசைகளை உதவிச் சேனைத்தலைவர்களாக்கினன். அக்காலத் தில் தேவ அரம்பையர்கள் பூவுலக அரசர்கள்மாட்டு வளர்ந் தார்கள். முசுகுந்தன் வீரவாகு முதலியோருக்கு அவர்களை மணஞ்செய்வித்தான். வீரவாகு புட்பகந்தி என்னுங் கன்னி கையை மணந்து, சித்திரவல்லி என்னும் பெண்ணைப் பெற்று அரசனுக்கு மணஞ் செய்துகொடுத்தார். பின்னும் அநகன் சன கன் என்பவரைப் பெற்றார். மற்றைய வீரரும் பலபிள்ளைகளைப் பெற்றார்கள். வீரவாகு முதலியோர் மற்றைஅரசர்களை வென்று, முசுகுந்தனுக்குக் கீர்த்தியை நிறுவினர்கள். முசுகுந்தன் சித்திர வல்லியைச் சேர்ந்து அங்கிவன்மனைப் பெற்று மகிழ்ந்தான்.

முசுகுந்தன் அரசாட்சி செய்துவருங் காலத்திலே, வலன் என்பான் இந்திரனை எதிர்த்து யுத்தஞ்செய்தான். இந்திரன் அவனை வெல்லமாட்டாது முசுகுந்தச்சக்கரவர்த்தியை அழைத் தான். அவன் வீரர்களோடு வந்து தேவசேனபதியாந் தலைமை யைத் தாங்கி, அவுணசேனைகளை அழித்தான். அவுணசேனைகள் அழிதலும் இந்திரன் வலனைக் கொன்று வெற்றிபெற்று, முசு குந்தனை அழைத்துத் தனது கோயிலில் இருத்தி உபசாரங்களைச் சொல்லி, அதன்பின்னர் விட்டுணுவினலே பூசிக்கப்பட்ட தியாக ராஜமூர்த்தியைப் பூசித்தான். முசுகுந்தன் அவரைக்கண்டு "திருக்கைலாசமலையில் இருந்த கோலத்தைத் தரிசித்து, பெரு மகிழ்ச்சியடைந்த யான் இப்பொழுது மானிடப்பிறவியால் மயங் கினேனே" என்று கூறி அவரை நோக்கித் துதிப்பானயினன்:-

"ஏகனே போற்றி யார்க்கு மீசனே போற்றி யம்மை
பாகனே போற்றி மேலாம் பரஞ்சுட் ருருவே போற்றி
மேகமார் களனே போற்றி விடைமிசை வருவாய் போற்றி
மோகமார் தக்கன் வேள்வி முடித்திடு முதல்வா போற்றி".

முசுகுந்தன் துதிப்ப, சிவபெருமான் கிருபைபுரிந்து, "நீ எம்மைப் பூமியிற் கொண்டுபோய்ப் பூசிக்குதி" என்றருள்புரிந்தார். முசுகுந்தன் ஆச்சரியமடைந்தான். இந்திரன்பூசைமுடித்து, முசுகுந்தனுக்கு ஆபரணாதிகளைக்கொடுத்து, "இன்னும் உனக்கு வேண்டியதைச்சொல்லுதி" என்ருன். முசுகுந்தன் நீ "பூசை செய்கிற கடவுளை எனக்குக் கொடுக்குதி" என்ருன். இந்திரன் "அரசனே! இம்மூர்த்தியை விட்டுணுவே எனக்குத் தந்தார்; அவர் சம்மதம் உண்டாயின் தருவேன்" என்ருன். முசுகுந்தன் விட்டுணுவினுடைய சம்மதம் பெற்று அதைத் தேவராசனுக்கு அறிவித்தான். புரந்தரன்வருந்தி ஒரு உபாயத்தைநினைத்துத்தேவத் தச்சனைக்கொண்டு தான்வைத்துப் பூசிக்கும் சோமாஸ்கந்தமூர்த்திபோன்ற ஆறு திருவடிவங்களைச் செய்வித்து, ஒவ்வொன்ருக முசுகுந்தனுடைய கையிற்கொடுக்க, அவன் வாங்கிச் சிவன் அருளாமையால் ஆறுதரமும் "இவர் அவரன்று" என்று கூறினன். இந்திரன் விட்டுணு பூசித்த மூர்த்தியைக் காட்டினன். அப்பொழுது சிவபெருமான் "அன்பனே! உன்னிடம் வந்தோம்" என்றருள்செய்தார். முசுகுந்தன் மகிழ்ந்து "இவரைத் தருக" என்றுரைத்தினன். வாங்கி இந்திரனிடம்விடைபெற்று விட்டுணு பூசித்த சோமாஸ்கந்தரைத் திருவாரூரில் பிரதிட்டைசெய்து, மற்றை ஆறு மூர்த்திகளையும் திருநாகைக்காரோகணம், திருநள்ளாறு, திருக்காருயல், திருக்கோளரியூர், திருவான்மியூர், திருமறைக்காடு என்னுந் தலங்களில் ஒருநாளில் தாபித்துச் சிரத்தையோடு பூசைசெய்வித்து, திருவாரூர்த் தியாகராசருக்கும் மற்றைத் தலங்களில் உள்ள மூர்த்திகளுக்கும் மகோற்சவம் நடத்தினன். நடத்திய முசுகுந்தன் திருவருள்வழிநின்று செங்கோல் நடாத்தி அங்கிவன்மனுக்கு முடிசூட்டித் திருக்கைலாசமலையை அடைந்தான். வீரவாகு முதலியோரும் தம் புதல்வருக்குத் தங்கள் வரிசைகளைக் கொடுத்து, தவஞ்செய்து கந்தகிரியை அடைந்தார்கள்.

முசுகுந்தன் முருகக்கடவுளுடைய விரதங்களை அனுட்டித்தே இத்துணைப் பெருமைகளை அடைந்தான். ஆதலால் கந்தசுவாமியுடைய விரதங்களை முறைப்படி அனுட்டித்தவர் நினைத்த வரங்களைப் பெறுவர்.

---

## ௯௪. கரிக்குருவி உபதேசம் பெற்றது.

சுகுணபாண்டியன் என்பவன் அரசாட்சி செய்துவரும் காலத்திலே, ஒருவன் முற்பிறவியிலே மிகுந்த தருமத்தையே செய்து சிறிது பாவமுஞ்செய்த காரணத்தினால் கரிக்குருவியாகப் பிறந்தான். அக்கரிக்குருவி இரத்தஞ் சோருந் தலையையுடையதாய், பறவைகளுக்கெல்லாம் எளியதாகி, வனத்துட்சென்று ஒரு மரத்தில் இருந்தது. இருக்குமெல்லையில் அகமும் புறமும் தூயவரும் தீர்த்தயாத்திரைக்காகப்புறப்பட்டவருமாகிய ஒருவர், அடியார்கள் சிலரை நோக்கி, மதுரைத்தலத்தினதும் பொற்றாமரைத் தீர்த்தத்தினதும், சோமசுந்தரமூர்த்தியினதும் பெருமைகளைக் கூறினார். அதைக்கொம்பரிலிருந்த கரிக்குருவி கேட்டு, ஞானம்பெற்று, இப்பிறவியை ஒழிப்பதற்கு, முனிவர் கூறியதே உறுதியென்று துணிவுகொண்டு, எழுந்து மதுரையை அடைந்தது. அடைந்த கரிக்குருவி பொற்றாமரை வாவியில் ஸ்நானஞ்செய்து, சோமசுந்தரக்கடவுளை வலம்வந்து மனநிறைவோடு இருந்தது. இங்ஙனமாக மூன்று தினங்கள் கழிந்தன.

மீனாட்சியம்மையார் சோமசுந்தரக்கடவுளை நோக்கி "தலைவரே, இக்கரிக்குருவி செய்யுஞ் செய்கை என்னை?" என்று வினவினார். சிவபெருமான் அதனுடைய செய்கைகளெல்லாவற்றையுந் திருவாய்மலர்ந்தருளி, பத்தியையும் நியமத்தையும் மேற்கொண்ட பறவைமீது கிருபாநோக்கம் வைத்து மந்திரோபதேசஞ் செய்தருளினார். குருவி சிவபெருமான் உபதேசித்த மந்திரத்தைக் கேட்டுச் சிற்றுணர்ச்சி நீங்கி, "முற்பிறப்பிற் சிவதருமத்தைச் செய்தமையால் இப்பிறப்பில் இம்மந்திரத்தை உபதேசம் செய்தருளினீர்; இது வருபிறப்பில் நல்லநெறிக்கேதுவாதலால் மும்மையிலும் வலியுடையோனாயினேன்" என்று துதித்து "என்னுடைய மரபுக்கெல்லாம் வலியான் என்னும் பெயர் வழங்கவேண்டும்" என்று பிரார்த்தித்தது. சிவபெருமான் "அங்ஙனமே ஆகுக" என்று கிருபைசெய்தருளினார். கரிக்குருவி சிவபெருமான் உபதேசித்தருளிய மந்திரத்தைப் பயின்று முத்தியடைந்தது.



## ௩௫. விட்டுணு.

விட்டுணு சிவபெருமானுடைய அடியவருள் விசேடமுடையவராய்த் தேவர்களுக்கெல்லாந் தலைவராயுள்ளவர். இவர் கரிய நிறமும், ஒரு தலையும், இரண்டு கண்களும், நான்கு கரங்களும், இரண்டுபாதங்களுமுடையவர். துளசிமாலையையும், சங்கு, சக்கரம், தண்டு, வில், வாள் என்னும் பஞ்சாயுதங்களையுந் தரித்திருப்பர். கருடனை வாகனமாகவும், இலக்குமியைச் சக்தியாகவும் உள்ளவர். விட்டுணு சிவபெருமானுடைய திருவருளாலே, திதி கிருத்தியத்தைச் செய்கின்றார்.

தேவர்களும் அசுரர்களும் பலவருஷங்களாகக் கொடும் போர் செய்தபொழுது, தேவர்கள் வலியிழத்தலும் விட்டுணு அசுரரோடு எதிர்த்தார். அவுணர்கள் பயந்து ஓடிப் பிருகுமுனிவருடைய மனைவியும், இலக்குமியினுடைய தாயுமாகிய கியாதியினிடத்தில் அடைக்கலம் புகுந்தார்கள். விட்டுணு கோபமிகுந்து ஆச்சிரமவாயிதலில் நின்ற மாமியைக் கொன்று, அவுணரைச் சங்கரித்துச் சென்றனர். பிருகு மனைவி இறந்துகிடப்பதுகண்டு, "இதைச் செய்த விட்டுணு அளவற்றபிறவிகளை எடுத்து வருந்தக் கடவன்" என்று சபித்தனர். விட்டுணு காஞ்சியிற் சிவபெருமானைப் பூசித்தார். அப்பொழுது சிவபெருமான் எழுந்தருள, விட்டுணு வணங்கி, "பிருகுமுனிவரிட்ட சாபத்தை நீக்கியருளுக" என்று விண்ணப்பித்தனர். சிவபெருமான் "விட்டுணுவே! கேள், நமது அடியவர்கள் அருளிக்கூறினும், வெகுண்டு கூறினும் அவை அவ்வப்பயனைப் பயந்தே விடுவதல்லது பழுதுறா; நீ நம்மை வழிபடும் பேற்றினால் பூமியில் பத்துப் பிறப்புக்களுண்டாம்; அப்பத்துப் பிறப்பும் உலகத்துக்கு உபகாரமாகும்" என்று கூறி மறைந்தருளினார்.

சிவபெருமான் அருளிய பிரகாரம் விட்டுணு கொண்ட பத்துப் பிறப்புக்கள்: மற்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாம

னர், பரசுராமர், பலராமர், தசரதராமர், கிருஷ்ணர், கற்கி என்பவைகளாம். சோமுகன் என்னும் அசுரத்தலைவன் வேதங்களைக் கவர்ந்துகொண்டுசென்று சமுத்திரத்தில் ஒளித்தான். அப்பொழுது விட்டுணு மற்சவடிவேற்றுச் சோமுகனைப் பின்றொடர்ந்து சென்று அவனுயிரை யொழித்து, வேதங்களைப் பிரமாவிடம்கொடுத்தார். அதனாலே விட்டுணு கருவங்கொண்டு, உயிர்களை வருத்தினர். சிவபெருமான் மீனினது கண்ணைப் பறித்து, அவரது கருவத்தையடக்கி, அவரது வேண்டுகோளின்படி அதனைச் சாத்தியருளினர்.

தேவரும் அசுரருங்கூடி அமிர்தம்எடுத்து உண்ணும்பொருட்டுப்பாற்கடலைக்கடைந்தார்கள். அவர்கள் கொண்டமந்தரமலையாகிய மத்துச்சமுத்திரத்திலமிழ்ந்தாமற் தாங்கும்பொருட்டு விட்டுணு கூர்மாவதாரங்கொண்டார். அவ்வவதாரத்தில் விட்டுணு கருவங்கொண்டமையால் சிவபெருமான் ஆமையின் ஓட்டைப்பிடுங்கித் தரித்தருளினர். முன்னோர்காலத்தில் இரணியாக்கன் என்னும் அசுரன் பூமியைக்கவர்ந்து பிலத்துட்சென்றான். திருமால் பன்றி வடிவங்கொண்டு, இரணியாக்கனைக் கொன்று பூமியை முன்போலப் பதித்தருளினர். அதனாலே திருமால் அகங்காரங் கொண்டார். சிவபெருமான் அப்பன்றியினது கொம்பைப்பிடுங்கித் தரித்து, விட்டுணுவின் அகங்காரத்தை நீக்கியருளினர். விட்டுணு இரணியன் என்னும் அசுரனைக்கொல்லும்பொருட்டு நரசிங்காவதாரங்கொண்டனர். பின்பு அகந்தைகொள்ளச் சிவபெருமான் நரசிங்கத்தோலை உரித்துப் போர்த்துக் கிருபைசெய்தருளினர். திருமால் மாவலி என்னும் அசுரனை அடக்கும்பொருட்டு வாமனவதாரங் கொண்டனர். சிவபெருமான் தருக்குற்ற வாமனரது முதுகெலும்பைப் பிடுங்கி அவரது கருவத்தை அடக்கி அருள்செய்தார். திருமால் இவ்வைந்து அவதாரங்களையுங்கொண்டபொழுது அவ்வத்தொழிலை முடித்தபின்னர் கருவங்கொள்ளச் சிவபெருமான் அக்கர்வத்தை அடக்கினமையால் இந்தஐந்து அவதாரங்களும் நிக்கிரக அவதாரம் எனப்படும்.

பூமியிலுள்ள மனுடர்களை நீதிதவறாமல் இரட்சிக்கும்பொருட்டுப் பரசுராம அவதாரம், பலராம அவதாரங்களைக்கொண்டனர். இலங்கையிலிருந்து அரசாட்சி செய்தவனாகிய இராவணனை வதைக்கும்பொருட்டு, தசரதனிடத்தில் இராமர் என்னும்

பெயரோடு அவதரித்தனர். பாரதயுத்தம் நடத்திப் பூமிபாரந்தீர்க்கும்பொருட்டுக் கிருஷ்ணராக அவதரித்தார். இன்னும் யுகம் முடிவில் உலகத்தை அழிக்கும்பொருட்டுக் கற்கி அவதாரமும் எடுப்பர். விட்டுணு மற்றைய நான்கு அவதாரங்களையுங் கொண்டபொழுது அகங்காரஞ் சிறிதுமில்லாமல் சிவபெருமானையே பரம்பொருள் என்று பூசைசெய்து வணங்கி அப்பெருமானுடைய திருவருளைப் பெற்றனர். ஆதலினால் இந்த நான்கு அவதாரங்களும், கற்கி அவதாரமும் அநுக்கிரக அவதாரங்கள் என்று சொல்லப்படும். இவர் உலகத்தைஇரட்சிக்கும்பொருட்டு இன்னும் எடுத்த அவதாரங்கள் பல.

விட்டுணுமூர்த்தி ததீசிமுனிவரை எதிர்த்து யுத்தஞ்செய்து தமது சக்கராயுதத்தை அம்முனிவர்மீது செலுத்தினர். அச்சக்கரம் முனிவரது வச்சிரதேகத்திற் பட்டு நுதிமடிந்து அழிந்தது. விட்டுணு சலந்தரனைச் சங்கரித்த சுதர்சனம் என்னுஞ் சக்கரத்தைச் சிவபெருமானிடத்துப் பெறவெண்ணி, காஞ்சீபுரத்தை அடைந்து சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து, நாளொன்றுக்கு ஆயிரம் தாமரைமலர்களாற் சிவார்ச்சனை செய்திருந்தனர். சிவபெருமான் விட்டுணுவினுடைய பத்தி முதிர்ச்சியை ஆன்மாக்களுக்கு அறிவிக்குங்காரணமாக, ஒரு பூவை மறைத்தருளினர். ஒரு மலர் குறைந்தமையால் விட்டுணுதமது ஒரு கண்ணை யிடந்து, தாமரை மலராகப்பாவித்து அருச்சித்துச் சிவபூசையின் குறையைமுடித்தனர். சிவபெருமான் இடபவாகனத்தில் தேவியாருடன் தோன்றியருளி, சக்கரத்தையுங் கண்ணையும் கொடுத்து மறைந்தனர். விட்டுணு நமஸ்கரித்துச் சக்கரத்தைப் பெற்றுக்கொண்டு, வைகுண்டத்தை அடைந்து நீங்காத பத்தியுடனிருந்தார்.

சிவனடியாராகிய விட்டுணுவை இகழ்தல் பாவமாகும். அவரைச் சிவனோடு சமப்படுத்திக் கூறுபவர்களும், சிவனுக்கு மிக்கவர் என்று கூறுபவர்களும் துன்பயடைவார்கள்.

திருநாவுக்கரசுநாயனார்.
[பழம்பஞ்சுரம்.]

தடமல ராயிரங்கள் குறைவொன்ற தாக
நிறைவென்று தன்க ணதனால்
உடன்வழி பாடுசெய்த திருமாலை யெந்தை
பெருமா னுகந்து மிகவும்

சுடரடி யான்முயன்று சுழல்வித் தாக்க
னிதயம் பிளந்த கொடுமை
யடல்வலி யாழியாழி யவனுக் களித்த
வவனு நமக்கொர் சரணே.

---

## ௩௯. சைவாசாரியரும், வைணவனும்

சைவ ஒழுக்கமுடையவனுகிய கலாதரன் என்பவன் சோணதேசத்திலிருந்து உலகங்களைப் பரிபாலித்தான். பரிபாலிக்குங் காலத்தில் ஒருநாள் ஞானசாத்திரங்களை அறிந்த சிவாசாரியராகிய பசுபதிபாரதி என்பவர் அரசசபையை அடைந்தார். அரசன் தனது குருவாகும் பாரதியாரைக் கண்டவுடன் சிங்காசனத்திலிருத்தித் துதித்து மனங்கசிந்து நின்றுன். பசுபதிபாரதியார் ஆசீர்வாதஞ்செய்தார். அப்பொழுது சபையில்இருந்த தபோதனர் முதலிய அனைவரும் அவரை வணங்கினுர்கள்.

பசுபதிபாரதியார் அரசனை நோக்கி, "அரசனே! ஒரு நுட்ப உண்மையை உனக்குச்சொல்லுகின்றேன். கேட்பாயாக: சைவசமயமே உண்மைச்சமயம், சிவபெருமான் ஒருவரே முழுமுதற்கடவுள். சிவபெருமான் எள்ளில் நெய்போல உலகமெங்கணும் நிறைந்திருக்கின்றனர். திருமாலும் சிவபெருமானைப் பூசித்தே தமது அதிகாரகிருத்தியத்தைப் பெற்றனர்" என்று பதியிலக்கணங்களைப் போதித்தார். அச்சபையிலிருந்த வாசுதேவன் என்னும் வைணவன் பசுபதிபாரதியாரை நோக்கி, "ஓட்டைக் கையிற்கொண்டு இரந்துண்டு திரிபவன் ஆகிய உமது சிவன் தன்னை வழிபட்டவர்களுக்கு முத்தியைக் கொடுக்குஞ் சத்தியையுடையவனு?" என்றுன்.

பசுபதிபாரதி மனஞ் சகித்தற்கு இயலாதவராய் வாசுதேவனை நோக்கி, "தாருகாவனத்து முனிவர்கள் மீமாஞ்சை என்னும் அசுத்தவைதிக சமயிகள் ஆனுர்கள். அவர்கள் அவ்விதம் கெட்டுப்போகாவண்ணம் சுத்தர்களாக்கி முத்தியைக் கொடுக்குமாறே சிவபெருமான் பிச்சாடனமூர்த்தியாயினர். வாசுதேவனே! சிவபெருமான் ஒருவரே முத்தியைக்கொடுப்பவர் என அறிந்துகொள்ளுதி" என்றுர்.

வாசுதேவன்:—"நீர் இவ்வளவு சிறப்பாகப் பேசிய சிவபெருமானுக்குப் புலித்தோலா உடையாகப் பொருந்துவது!"

பசுபதிபாரதி:—"தாருகாவனத்து முனிவர் தாம்செய்த அபிசார வேள்வியிற்றோன்றிய புலியை நோக்கி, சிவபெருமான் மீது ஏவினர் சிவபெருமான் அதன் தோலையுரித்து ஆடையாக அணிந்தனர்."

வாசுதேவன்:—"ஒரு பெண்ணுடன் கூடி மயங்கும் உமது கடவுளோ பதியாவர்?"

பசுபதிபாரதி:—"வாசுதேவனே! பிரமாவினுடைய படைத்தற்றொழில் நடைபெறும் வண்ணமே தம்மோடு அபின்னமாகிய வல்லமையை ஒரு பெண்வடிவாக்கி, இடப்பாகத்தில் வைத்தனர் என்பதை அறிவாயாக."

வாசுதேவன்:—"தலையில் மற்றொரு பெண்ணாகிய கங்கையை உமது கடவுள் சுமப்பதென்னை?"

பசுபதிபாரதி:—"உமாதேவியாரது திருக்கரத்தில் உள்ள பத்துவிரல்களிலிருந்து தோன்றிய வியர்வை பத்து நதிகளாய், உலகத்தை அழிக்கும்வண்ணம் பாய்ந்து சென்றது. அதனால் உலகம் அழிவடையாவண்ணம் திருச்சடையில் அடக்கியருளினார்."

வாசுதேவன்:—"உமது கடவுள் சுடலையை இடமாகக் கொண்டு கூத்தாடுவது பொருந்துமா? சுடலையிற் கூத்தாடுவது சிரிப்புக்கிடமான செயலல்லவா?"

பசுபதிபாரதி:—"வேதபுருடர்களாலும் அறிதற்கரிய எமது கடவுள் சர்வசங்காரகாலத்தில் பிரமா விட்டுணுமுதலிய சகலரையும் சங்காரம்செய்த இடம் மயானமாம். அதில் உமாதேவியாருடன் தாம் நின்று திருநடனஞ் செய்வார்"

வாசுதேவன்:—"உமது சிவன் சங்காரஞ்செய்பவர் என்றமையால் இழிவாகிய தாமதகுணமுடையவரன்றோ?"

பசுபதிபாரதி:— "பிரமா விட்டுணு முதலிய தேவர்களே சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் முக்குணவசத்தர். பசுபதியாகிய நமது கடவுள் மாயசம்பந்தமாகிய முக்குணங்களைக் கடந்தவர். அவர் தாமதகுணமுடையவரென்பது சங்காரத் தொழிலுக்குள்ள செயற்கைக்குணமேயன்றி அவருக்கு அது இயற்கையன்று."

வாசுதேவன்:—"உமது கடவுள் சுடுகாட்டிலுள்ள இழிந்த பொருளாகிய எலும்புகளை ஆபரணமாக அணிவது என்னை?"

பசுபதிபாரதி;—“அளவற்ற பிரமவிட்டுணுக்கள் இறந்தார்கள். அவர்களது அநித்தத்தையும் தமது நித்தியத்தையும் ஆன்மாக்களுக்கு அறிவித்தல் காரணமாகவும், அவர்கள் எண்ணிறந்த தவத்தைச் செய்தமையாலும் அவர்களது எலும்பை மாலையாகத் தரித்தனர்.”

வாசுதேவன்:—“நும் கடவுள் ஆமையோட்டை மார்பிலே தரித்தது எக்காரணம்பற்றி? தமக்கு அலங்காரமாகும் என்பது கருதியா?”

பசுபதிபாரதி;—“உமது தலைவராகிய விட்டுணு பாற்கடலைக் கடைந்த காலத்தில் மத்தாகும் மந்தரமலையை ஆமை வடிவு கொண்டு சுமந்தமையால் அகந்தையுற்று உலகத்துக்குத் துன்பஞ்செய்தார். சிவபெருமான் ஆமையின் ஓட்டைப்பிடுங்க, அவர் அகந்தை நீங்கி, பழைய வடிவங்கொண்டு துதித்தார். சிவபெருமான் அவரது வேண்டுகோளின்படி அவ்வோட்டைச் சாத்தியருளினர்,”

வாசுதேவன்:—“பன்றிக்கோடு அணிந்த காரணம் என்னை?”

பசுபதிபாரதி:—“இரணியாக்கன் என்னும் அசுரன் தேவர்களுக்குத் துன்பஞ்செய்தான். விட்டுணு பன்றிவடிவங்கொண்டு, அவுணனைக் குத்திக்கொன்று அகந்தையுடையவராய் உயிர்களை வருத்தினர். சிவபெருமான் ஒரு கொம்பைப் பிடுங்குதலும் விட்டுணு முன்னையுருக்கொண்டு துதித்தனர். கடவுள் அக்கொம்பைத்திருமார்பில் தரித்துக்கொண்டனர்.”

பசுபதிபாரதி என்னும் சிவாசாரியரும் வாசுதேவன் என்னும் வைணவனும் இப்படித் தருக்கித்து நிற்குஞ் சமயத்தில், கேசரி என்னும் வைணவன் சில வினாக்களை வினாவினான்.

கேசரி:—“ஒரு விருட்சத்திற் காய்க்கின்ற காய்களாகிய உருத்திராக்கமும, பசுச்சாணத்தைச் சுட்ட சாம்பராகிய வெண்ணீறுமா முத்தியைப்பாலிப்பன?” என்றான்.

பசுபதிபாரதி:—“நீ சிவபெருமானை உணராய்; மெய்ஞ்ஞானம் எவ்வழிக் கிடைக்கும் என்பதையும் நோக்காய்; பைத்தியகாரனைப்போல் பிதற்றுகின்றாய், அதன் உண்மையைக் கூறுகின்றனம் கேட்பாய். தேவர்கள் திரிபுராத்தசுரராலே தங்களுக்கு நிகழ்ந்த துன்பத்தை விண்ணப்பஞ் செய்துகொண்டபொழுது, திருக்கைலாசபதியினுடைய மூன்று திருக்கண்களினின்றும் பொழிந்த நீரிற்றோன்றிய மலரியாம். அது சிவபிரானுடைய

திருக்கண்ணிற்றோன்றும் திருவருட்பேற்றிற்கு அறிகுறியாம். பசுக்களாகிய நம்மைப்பற்றிய மலமாகிய அழுக்கை ஞானமாகிய அக்கினியினாலே சுடச் சிவத்துவமாகிய சுத்தநிலையை நாம் அடைவோம். அதற்கு அறிகுறியாகவே பசுவின் சாணத்தை அக்கினியினாலே சுடுதலால் உண்டாகிய திருநீற்றை நாம் அணிந்துகொள்கின்றோம்.

உருத்திராக்கத்தையும் விபூதியையும் அன்புடன் தரிப்பவர்களை மனதினால் நினைப்பவர்களுஞ் சிவபெருமானது திருவடிகளை அடைதற்குரியவராவர். தரியாதவர்களும், தரித்தவர்களை இகழ்வோரும் நீசராவர். ஆதலால் நீயும் நீசரிற் கொடியவன்.

எவரேனும் தாமாக விலாடத் திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி
உவராதே யவரவரைக் கண்ட போது
வுகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

(திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்)

என்பதை உணர்ந்தாயில்லை" என்று தகுந்த உத்தரம் உரைத்தார்.

பாரதியினுடைய மாணாக்கனாகிய வசு என்னும் அந்தணன் தனது குருவைமறுத்து, "தேவரீர் கூறியவைகளை அங்கீகரிப்பவர் ஒருவரையும் கண்டிலேன்; எழுந்தருளுவீர்" என்று கூறினான். பசுபதிமாணாக்கனை நோக்கி:—"இவர்கள் சிவநிந்தை செய்தலைக் கேட்டுக்கொண்டு என் உயிரைச் சகியேன்; ஆகையால் இவர்களுக்கு உத்தரங் கூறுவேன்" என்றார். வசு உடனே போயினான். மாணாக்கன் போதலை நோக்கி எல்லோருஞ் சிரித்தார்கள்.

சாந்தனென்பவன் பாரதியாருக்குச் சமீபத்தில்வந்து "தேவரீரிடத்தில் வேதாகமங்களை ஓதிய மாணாக்கனும் பாவி உம்மை விரும்பவில்லை. அடியேனை மாணாக்கனாக ஏற்று அருள் புரிதல் வேண்டும்" என்றான். பசுபதிபாரதி:—"உன் பிதா சிவத்தியானமுடையோன் ஆகலால் உனக்குஞ் சிவபக்தி வாய்த்தது; உண்மை மார்க்கத்துக்கும் ஏதுவாயது" என்றார்.

அச் சபையிலிருந்தபத்திரன் பாரதியாரைநோக்கி;—"பெரியவரே! இச்சாந்தன் தீயொழுக்கமுடையவன்; இவனை மாணாக்கனுக்கிக்கொள்ள எவ்விதம் உடன்பட்டீர்?" என்றான்.

பாரதி:— "சிவபெருமானுடைய திருவடிகளில் நீங்காத அன்புள்ளவர்கள் செய்யும் பாவமும் புண்ணியமாகும். விபூதி உருத்திராக்ஷங்களைத்தரித்த சிவனடியார்களை இகழ்ந்தவர்கள் நரகத்துன்பத்தை அடைவார்கள் என்று வேதாகமங்கள் கூறுகின்றன. நீயும் அத்துன்பத்தைப் பெற்றுக்கொண்டனை" என்று கூறினார்.

பின்பு பாரதியார் அரசனைப்பார்த்து, "அரசனே! சிவபெருமானையும் அடியாரையும் விபூதி உருத்திராக்ஷத்தையும் நிந்தித்தவர்களும், வேதாகமங்களைப் போதித்த ஆசாரியரைப் பிரிந்தவர்களும் ஆகிய அதிபாதகர்களுக்கேற்ற தண்டனையைச் செய்க" என்றார். அரசன் "இன்னும் ஞானத்தைப் பெற்றுக்கொண்டு, இந்த வைணவர்களது மார்க்கத்தை அழிப்பீராக" என்று இகழ்ச்சியாகக் கூறினான். அதுகேட்ட பாரதியார் இனி இவனுக்கு ஒன்றுங் கூறலாகாதெனவிடுத்து, சிவனைத் தியானித்துக்கொண்டு, வைணவர்களைப் பார்த்து, "இடிவிழுந்து அழிந்துபோவீர்களாக" என்று சபித்தார். உடனே இடிவிழுந்து நான்கு பாவிகளும் இறந்தார்கள். அதை அரசன் பார்த்து அச்சமுற்றான். பாரதியார் அரசனை நோக்கி, "நீ கழுதையாகுதி" என்று சபித்தார். உடனே அவன் கழுதையானான். அந்நால்வரும் அரசனுங்நெடுங் காலம் நரகத்துன்பமுற்றார்கள்.

---

## ௩எ. சண்டேசுரநாயனார்.

சோழநாட்டிலுள்ள திருச்சேய்ஞலூர் என்னுந்திருப்பதியிலே பிராமணவருணத்தில் எச்சதத்தன் என்பவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு அவன் மனைவியாகிய பவித்திரையிடத்து விசாரசர்மர் என்பவர் திருவவதாரஞ்செய்தார். அவருக்கு ஐந்து வயசிலே வேதம் ஆகமம் முதலிய சாஸ்திரங்களைக் கற்பிப்பாரின்றித் தாமே அறியும் உணர்வு உண்டாயது. தந்தை தாயர் அவருக்கு எழுவயசிலே உபநயநஞ் செய்வித்தார்கள். ஆசாரியர்கள் வேதம் முதலியவற்றைத் தாம் ஓதுவித்தற்கு முன்னரே, அவ்வி

சாரசருமருக்குத் தாமே அறிந்துகொள்ளும்படி பொருந்தியிருக்கும் அறிவை நோக்கி வியப்படைந்தார்கள். நடம்புரியுஞ் சிவனே நம்மை அடிமையாகவுடையார் என்னும் நிட்சித்தமுடையாராய் விசாரசர்மர் விளங்குவாராயினர்.

ஒருநாள் அவர் தம்முடன் வேதாத்தியயனஞ் செய்கின்ற பிள்ளைகளோடும் அவ்வூர்ப் பசுநிரைகளுடன் கூடிச் சென்றார். சென்றபொழுது, ஓர் ற்றுப்பசு ஒன்று மேய்ப்பவனாகிய இடையனைக் குத்தப்போயது. இடையன் பழிபாவங்களுக்குக்கூசாது கோலினால் அடித்தான். உண்மையறிவு விளங்கப்பெற்ற விசாரசருமர் வெகுண்டு, அவன் சமீபத்திற் போய்ப் பின்னும் அடியாதபடி தடுத்து, பசுக்கள் சிவபெருமான் இவர்ந்தருளுகின்ற இடபத்தின் சுற்றமாதலையும், அவைகளின் உறுப்புக்களிலே தேவர்கள் முனிவர்கள் தீர்த்தங்கள் இருத்தலையும், அவைகள் தரும் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்னும் பஞ்சகவ்வியங்கள் சிவபெருமானுக்கு அபிடேகத்திரவியமாதலையும் சிவசின்னமாகிய விபூதிக்கு மூலம் அவற்றின் சாணம் ஆதலையும், பசுநிரையைக் காத்தலினும் சிறந்த கடன் இல்லை என்பதையுஞ் சிந்தித்து, அவ்விடையனை நோக்கி "இப்பசுக்கூட்டங்களை நானே மேய்ப்பேன்; நீ மேய்க்கவேண்டாம்" என்றார். இடையன் அஞ்சிக் கும்பிட்டுக்கொண்டு போயினன்.

விசாரசருமர் பிராமணர்களின் உத்தரவுபெற்று மேய்த்துவருவாராயினர். மேய்த்துவருங் காலத்தில் பசுக்களெல்லாம் முன்னையினும் அதிகமாகப் பால்கறக்கக்காண்கையால் பிராமணர் மிக்க சந்தோஷங்கொள்ளுவாராயினர்.

பசுக்கள் தங்கள் கன்றுகள் பிரிந்தாலும் வருத்தமடையாது, தங்களை மேய்க்கின்ற விசாரசருமர் சற்றேனும் பிரியின், அவர் சமீபத்தில் வந்து தாய்போல் உருகி, ஒருவருங் கறக்காமல் தாமே பால்சொரியும். பசுக்கள் பாலைத் தாமே சொரியவே அப்பால் அபிடேகத்துக்குத் தகுதியுடைத்தாந் தன்மையைநினைத்தார். நினைக்கவே, சிவார்ச்சனையிடத்தில் வேட்கை தலைப்பட்டது. உடனே அவர் மண்ணியாற்றங்கரையில் ஒரு மணற்குன்றிலே, ஆத்திமரநிழலில், சிவலிங்கத் திருமேனியை மணலாலாக்கி, சிவாலயமும் கோபுரமும் வகுத்து அமைத்தார். பத்திர புஷ்பங்களும் பறித்துப் பூங்கூடையில் இட்டுவைத்தார். வைத்

னுப் புதுக்குடங்களைக் கொண்டுவந்து, பசுக்களிடம் பாலைப் பெற்றுச்சென்று ஆலயத்தில் வைத்து, முற்பிறப்பின்தொடர்ச்சி யினால் அருச்சித்துப் பாலினால் அபிஷேகஞ் செய்தார். இடை யறாது மேன்மேலும் பெருகி வளரும் மெய்யன்பே வடிவா யுள்ள விசாரசருமர் செய்யும் பூசையை அவ்விலிங்கத்தில் நின்று சிவபெருமான் ஏற்றருளினார். இப்படி நெடுநாளாக விசாரசரு மர் பார்ப்பவருக்கு விளையாட்டுப்போலத் தோன்றுஞ் சிவபூசை யைச் செய்து வருவாராயினார்.

பசுக்கள் அபிஷேகத்தின்பொருட்டுப் பாலைச்சொரிந்தும் பிராமணர்க்கும் முன்போலப் பாலைக்கொடுத்தன. விசாரசருமர் செய்யும் அர்ச்சனையின் உண்மையை அறியாதவொருவன் அவ்வூர் அந்தணர்களுக்கு அதை அறிவித்தான். அவர்கள் சபையாருக் குத் தெரிவித்தார்கள். சபையார் எச்சதத்தனை அழைத்து "உமது மகன் பிராமணர்-ஓமத்தின்பொருட்டுப் பால்கறக்கும் பசுக்கள் எல்லாவற்றையும் மேய்ப்பவன்போலக் கொண்டுசென்று பால் கறந்து மண்ணியாற்றங்கரை மணலிலே வீணாக ஊற்றுகின்று னும்" என்றார்கள். எச்சதத்தன், "எனது சிறுவன் செய்வதை நான் அறியேன்; அக்குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளுங்கள்; இனி அவன் செய்யிற் குற்றம் எனதேயாகும்" என்று கூறிச் சபையின் அனுமதிபெற்றுத் தன்மனையிற் போயினான்.

மறுநாள் எச்சதத்தன் தன்மைந்தனின் சமாசாரத்தை அறிய விரும்பி, அவர் அறியாமல் அவர்பிறகே சென்று, ஒரு குராமரத் திலேறி ஒளித்திருந்தான். விசாரசருமர் ஸ்நானம்பண்ணி அன்பி னோடு முன்போலப் பூசைசெய்து பாற்குடங்களை எடுத்து அபி டேகஞ்செய்தார். குராமரத்திலிருந்த எச்சதத்தன் அதுகண்டு, கடுங்கோபங்கொண்டு கொடுஞ்சொற்களைச் சொல்லி, கைத் தண்டினாற் பன்முறை அடித்தான். அவர் மனம் சிவபூசையில் அழுந்திக்கிடந்தமையால், அது அவருக்குப் புலப்படவில்லை. பின் னும் எச்சதத்தன் வெகுண்டு பலமுறை அடித்தான். விசாரசரு மர் வேறொன்றும் அறியாராகித் திருமஞ்சனம் ஆட்டும்பணியில் நின்றார். அவர் அன்பை அறியாத பிதாவானவன் பாற்குடங்களைக் காலாற் சிதறினான். சிதறும்பொழுதில், சிறுவர் அதுகண்டு அது செய்தவன் தந்தை என்று அறிந்தும், அவன் செய்தது சிவாப

ராதமாதலால், அவன் காலைத் துணிக்கும்படி ஒருகோலை எடுத்தார். சிவாஞ்ஞையால் அது மழுவாயிற்று. அம்மழுவினால் அவனது காலை வெட்டினார். மறையோன் மண்ணில் விழுந்தான். சிவபூசைக்கு வந்த இடரை நீக்கியவராகிய விசாரசருமர் முன்போல அருச்சனைசெய்யப் புகுந்தார். சிவபெருமான் உமையோடு இடபாரூடராய்த் தோன்றியருளினார். விசாரசருமர் மகிழ்ந்து விழுந்து வணங்கினார். பரமசிவன் வணங்கிய சிறுவரைத் திருக்கைகளாலெடுத்து, "நீ நம்பொருட்டு உன் பிதாவை வெட்டினாய்; இனி உனக்கு நாமே பிதா" என்று அருள்செய்து அவர் தேகத்தைத் தடவியருளினார். சிவபெருமானுடைய திருக்கைகளாலே தீண்டப்பட்ட அவர் தேகம் ஒளிரூபமாய்விளங்கியது. அண்டர்நாயகர் "உன்னைத் தொண்டருக்கெல்லாம் அதிபனாக்கி, நாம் ஏற்றுக்கொண்ட அமுதும் பரிவட்டமும் புஷ்பமும் உனக்கே கிடைக்கும்படி சண்டேசுரர் பதவியைத் தந்தோம்" என்றருளித் தமது சடையிலிருந்த கொன்றைமாலையை அவருக்குச் சூட்டியருளினார். விசாரசருமர் சிவபெருமானைக் கும்பிட்டு அவராற் கொடுக்கப்பட்ட சண்டேசுரர் பதவியை அடைந்தார். எச்சதத்தர் குற்றஞ்செய்தும் சண்டேசுரநாயனாரால் தண்டிக்கப்பட்டமையின், சிவலோகம் அடைந்தார்.

திருஞானசம்பந்தர்
திருப்பாசுரம் பண்-கௌசிகம்.

கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலை யறவெட்டிட முக்கண் மூர்த்தி
யடிசேர்ந்த வண்ண மறிவார்சொலக் கேட்டு மன்றே.

பெரியபுராணம்.

அண்டர்பிரானுந்தொண்டர்தமக்கதிபனாக்கியனைத்துநா
முண்டகலமுமுடுப்பனவுஞ்சூடுவனவுமுனக்காகச்
சண்டீசனுமாம்பதந்தந்தோமென்றங்கவர்பொற்றடமுடிக்குத்
துண்டமதிசேர்சடைக்கொன்றைமாலைவாங்கிச்சூட்டினார்.

முற்றுப்பெற்றது.
திருச்சிற்றம்பலம்.

## சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்

அவர்களால் எழுதி

அச்சிடப்பெற்ற புத்தகங்கள்.

---

| சமஸ்கிருதம். | | | | ரூ. ச. |
|---|---|---|---|---|
| சிவாகமசேகரம் பிரதிட்டாவிதி | | .... | விலை | 5-00 |
| பிரணயகலஹவர்ணனம் | | .... | ,, | -25 |
| சிவப்பிரதிட்டாவிதி அச்சில். | | | | |
| தமிழ். | | | | |
| சிவபூசைவிளக்கம் | .... | .... | ,, | 3-00 |
| பிராசாததீபம் | .... | .... | ,, | 1-00 |
| சிவபூசைவிதி | .... | .... | ,, | -75 |
| அநுட்டான அகவல் | | .... | ,, | -25 |
| விநாயகபரத்துவம் | .... | .... | ,, | -75 |
| புவனேசுவரி மகத்துவம் | | .... | ,, | -25 |
| சைவப்பிரகாசிகை 5-ம் புத்தகம் | | .... | ,, | 1-00 |
| ,, 4-ம் ,, | | .... | ,, | -75 |
| ,, 3-ம் ,, | | .... | ,, | -60 |
| ,, 2-ம் ,, | | .... | ,, | -50 |

வேண்டியவர்கள் கீழ்க்காணும் விலாசத்துக்கு
எழுதிப் பெற்றுக்கொள்க.

ச. கு. வைத்தியேசுவரக்குருக்கள்,
அச்சுவேலி P. O.
சிலோன்.